Not for sale

மார்ச் - ஏப்ரல் 2010

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



## தத்தம் செய்தல் மற்றும் நினைவுகூறுதல்

தத்தம் செய்தல் • தத்தம் செய்தலைன் சிந்தனை

உங்கள் தோட்டத்தில் இருப்பது என்ன? • ஆசாரியத்துவத்தின் பிரதிஷ்டை

நாம் தத்தம் செய்தலில் களிகூறுதலின் எடுத்துகாட்டு

இறுதி நாள்

## தத்தம் செய்தல் மற்றும் நினைவு கூறுதல்

# ஆதியிலே

நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை ஆழமாக சிந்திப்பதற்கு இந்த நினைவுக்கூறுதலின் காலம் மிகவும் ஏற்றதாகும். நம்முடைய ஆண்டவரின் வாழ்க்கை, அவருடைய பரலோக பிதாவின் சித்தத்தை செய்வதில் நிறைந்ததும், முழுமையாக தத்தம் செய்யப்பட்டதாயும் இருந்தது.

இந்த பிரதியை தத்தம் செய்தல் என்ற தலைப்பின் கட்டுரையோடு துவங்குகிறோம். அதனுடைய பொருளைப் பற்றியும், வேதாகமத்தில் அது காணப்படுகிற இடங்களை பற்றியும் இது குறிப்பிடுகிறது.

நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் நம்முடைய சிந்தனைகளின் முக்கியத்துவத்தைப் பற்றி தத்தம் செய்தலின் சிந்தனைகள் தெளிவாக விவரிக்கிறது. நாம் நல்ல சிந்தனைகளை விதைத்து வளர்க்கவேண்டும். ஆவியின் கனிகளுக்கு எதிராக இருக்கும் அசுத்தமான சிந்தைகளை பிடுங்கி எறியவேண்டும்.

உங்கள் தோட்டத்தில் இருப்பது என்ன? என்ற கட்டுரை தொடர்கிறது. ஆண்டவர் மகிழும்படி, நம்முடைய குணலட்சணங்களாகிய தோட்டத்தில் கிருபை மற்றும் சத்தியத்தின் அழகான பூக்களை வளர்த்திடவேண்டும். இப்படிப்பட்ட நல்ல பலன்களை பெற என்ன செய்வது? இந்த கட்டுரை சில அற்புதமான ஆலோசனைகளை கொடுத்துள்ளது.

பழங்காலத்து இஸ்ரயேலிரில் ஆசாரியர்களின் - பிரதிஷ்டை - அதில் ஆசாரியர்களை நியமிக்கப்படும் அந்த ஏழு நாட்களைப் பற்றி ஆசாரியத்துத்தன் பிரதிஷ்டை கண்ணோக்குகிறது. வரவிருக்கும் ஆயிரவருட ஆட்சியில் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் ஆசாரியர்களாக (வெளி 20:6) பரலோக கடமைகளை செய்வதற்காக, இந்த சுவிசேஷ யுகத்தில் சபை வகுப்பாராக தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் பிரதிஷ்டையை, இந்த பாடம் நிழலாக அடையாளப்படுத்துகிறது.

நாம் தத்தம் செய்தலின் களிக்கூறுதலின் எடுத்துக்காட்டு என்ற கட்டுரை அப்போஸ்தலர் பவுலின் எழுத்துக்களை உற்றுநோக்குகிறது - விசேஷமாக பிலிப்பியருக்கு எழுதின நிரூபம் - தத்தம் செய்யப்பட்ட நம்முடைய வாழ்க்கையில் தேவனோடு நடக்கையில் மகிழ்ச்சியாக இருப்பதற்கான அறிவுரைகள் கொடுக்கப்படுகிறது.

இறுதி நாள் என்ற கட்டுரையோடு இந்த பிரதியின் முடிவுக்கு வருகிறோம். இதில் மனிதனாக வந்த இயேசுவின் முடிவு நாளில் நடந்த சம்பவங்களை இது ஆராய்கிறது. அவர் தம்முடைய சீஷர்களுக்காக கொண்டிருந்த பரிதவிப்பும், அவருடைய இறுதிக்கட்ட அறிவுரைகளும், அவருடைய உறுதியான நோக்கமும், நமக்காக அவர் பட்ட பாடுகளையும் இதில் நினைவுக்கூறப்படுகிறது. அவர் விட்டுச் சென்ற மாதிரியைப் பின்பற்ற சிறப்புரிமைப் பெற்றதற்காக நாம் இன்னும் அதிகமாக அவரை பாராட்டலாம்.

இந்த நினைவுக்கூறுதலின் காலங்களில் நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் தத்தம் செய்யப்பட்ட வாழ்க்கையில் அவர் நமக்காக செலுத்தின பலிகளையும், அதனால் நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் அவரைப் போல எடுக்கவேண்டிய உறுதிகளையும் நாம் நினைவுகூற ஏற்ற நேரமாக இருக்கிறது. இந்த அனுபவங்களின் வழியாக நாம் கிறிஸ்துவ கோட்பாடுகளை நம்முடைய வாழ்க்கையில் அபியாசப்படுத்தினால், நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் குணங்களில் வளர்ச்சியடைவோம். தவிர்க்கக்கூடிய உலகப்பிரகாரமான காரியங்களை அப்புறப்படுத்திவிட்டு, வசனங்களை தியானிக்கவும், ஆண்டவரின் வேலைகளில் பங்குகொண்டு, சகோதரர்களுக்கு உதவியாக இருப்போமானால், இயேசு தன்னுடைய ஊழியத்தின் போது நடந்த பாதையில் நாம் நடக்க வாய்ப்புண்டாகும்.

இந்த வருடம், நினைவுகூறும் காலத்தில், இந்த பிரதியில் கொடுக்கப்பட்டுள்ள கட்டுரைகள் நம்மை தகுதிப்படுத்தும் என்று நம்புகிறோம்.

**மார்ச்/ஏப்ரல் 2010**


**ஆதியிலே** (தத்தம் செய்தல் மற்றும் நினைவுகூறுதல்) ...... 37

**தத்தம் செய்தல்** ...... 38

அனைத்து கிறிஸ்தவர்களும் நம்முடைய பரலோக பிதாவின் ஊழியத்திற்கு தங்களை அர்ப்பணித்து, ஒப்புகொடுத்து உறுதியளிக்கவேண்டும்.

**தத்தம் செய்தலின் சிந்தனை** ...... 43

நமக்குள் எழும் சிந்தனைகளே புது சிருஷ்டியின் யுத்தகளமாக இருக்கிறது. அதில் பெறும் வெற்றிகள் நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கைக்கு கிடைத்த வெற்றிகளாகும்.

**உங்கள் தோட்டத்தில் இருப்பது என்ன?** ......47

கிறிஸ்துவ குணங்களாகிய ஆவியின் கனிகளையும் கிருபைகளையும் உங்களுக்குள் வளர்க்க விரும்பினால் அதற்க எதிராக இருக்கும் களைகளை நீங்கள் பிடுங்கி எரிய வேண்டும்,

**ஆசாரியத்துவத்தின் பிரதிஷ்டை** ......51

இஸ்ரயேலின் ஆசாரியர்களின் பிரதிஷ்டையின் ஏழு நாள் அனுசரிப்பு, ஆயிரவருட ஆட்சியில் ஆசாரியர்களாக பணிபுரிய, சுவிசேஷ யுகத்தின் ஏழு காலங்களில், சபையை ஆயத்தப்படுத்துவது அடையாளப்படுத்தப்படுகிறது.

**நாம் தத்தம் செய்தலின் களிக்கூறுதலின் எடுத்துக்காட்டு** ...... 60

அப்போஸ்தலனாகிய பவுல், விசேஷமாக பிலிப்பிருக்கு எழுதின நிருபத்தில், நம்முடைய ஆனுபங்களில் கிறிஸ்துவ ஆவியை காத்துக்கொள்வதை பற்றி குறிப்பிடுகிறார்.

**இறுதி நாள்** ...... 67

நம்முடைய இரட்சகர் மாம்சத்தில் பணிபுரிந்த கடைசி நாளில் சீஷர்களுக்கு அவர் கற்பித்த அநேக பாடங்கள். அவருடைய மரணத்தின் நினைவுக்கூறுகையில் நாம் இவைகளை நியாபகப்படுத்திகொள்வோம்.

**தீர்க்கதரிசனத்தில் இன்று மீண்டும் இறுதியாக** ...... 66

ஒரு தெய்வீக தேர்வு

# தத்தம் செய்தல்



"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி - நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். "- ஆதியாகமம் 2:16, 17

Tim Thomassen

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." - ரோமர் 12:1

நம்முடைய ஆண்டவராம் இயேசு நமக்காகவும், இந்த உலகத்திற்காகவும், பலி செலுத்தினதை, இந்த நியாபகர்த்தலின் காலங்களில், அனைவரும் நினைவுக்கூறும் வேளையில், நாம் தேவனோடு செய்த உடன்படிக்கையைப் பற்றி நாம் சிந்தித்து பார்ப்பது மிகவும் ஏற்றதாக இருக்கும்.

வேதமாணவர்களின் ஐக்கியத்தில் தத்தம் செய்தல், அல்லது ஒப்புக்கொடுத்தல் என்ற வார்த்தைகள் மிகவும் பிரபலமானது. 18ம் நூற்றாண்டின் துவக்கத்தில், சகோ. வில்லியம் மில்லர் ஊழியத்தின் இயக்கத்திலும், சத்தியத்தை பிரசித்தப்படுத்துவதிலும் இந்த வார்த்தை சகஜமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் கிறிஸ்துவ உலகத்தில் பெரும்பாலானவர்கள் இந்த சொல்லை கேட்பதே மிக அரிதாகவும், அதன் பொருளை உணர்வது மிகக்கடினமாகவும் இருக்கிறது.

கிறிஸ்தவர்களின் அழைப்பின் நோக்கத்தை தவறாக புரிந்துகொள்வதே இதற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. இந்த ஜீவனுக்கு பின்வரும் வாழ்க்கையில், கொடூரமான தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக கிறிஸ்தவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தவறாக புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, எளிதான விசுவாசம் கொண்டு, நியாயமான ஒழுக்கமுள்ளவர்கள், துன்பங்களையும், அபாயங்களையும் தவிர்த்து, பரலோகத்தில் ஒரு நல்ல வாழ்க்கையைப் பெற போதுமானது என்று நம்புகிறார்கள்.

இது தேவனுடைய நோக்கத்தை மிகவும் ஆபத்தான வகையில் புரிந்துகொள்வதாகும். வெகு சிலரை மட்டும் அவர் காப்பாற்றுவதில்லை அல்லது பெரும்பான்மையானவர்களை அவர் அழிப்பதுமில்லை. மாறாக, வரக்கூடிய ஆயிரவருட ஆட்சியில் விசேஷித்த கனத்தையும் மகிமையையும் தரும்படி இக்காலத்தில் தேவன் ஒரு சிலரை தேர்வுசெய்துகொண்டிருக்கிறார். இவர்கள் இந்த பூமியை ஆட்சிசெய்யும் ஆட்சியாளர்களாக கிறிஸ்துவுடன் கூட பரலோகத்தில் ஆட்சிசெய்து, இந்த முழு உலகத்தையும் நீதியான பாதையிலும், சத்தியத்திலும், தெய்வீகத்திலும் வழிநடத்துவார்கள்.

கடந்த காலத்தில் மரித்த அனைவரும் இதில் அடங்குவார்கள். இவர்கள் ஆயிரவருட ஆட்சியில் உயிர்ப்பிக்கப்படுவார்கள். சாத்தானும் அவனுடைய தூதர்களும் இந்த உலகத்தை இப்பொழுது பாவத்திற்குள்ளும், அறியாமைக்குள்ளும் வழிநடத்துவது போல, ஆயிர வருட ஆட்சியில் கிறிஸ்துவும் அவருடைய பரிசுத்தவான்களும் இந்த உலகத்தை தேவனுக்கேற்ற கீழ்படிதலிலும், புரிந்துகொள்ளுதலிலும் வழிநடத்துவார்கள். (வெளி 20:1,3-6)

## உயர்ந்த நிலைகள்

பரிசுத்தவான்களுக்கு கொடுக்கப்படும் மிகுந்த கனத்தை நாம் புரிந்துகொள்ளும்போது, அவர்களிடம் எதிர்பார்க்கப்படும் உயர்வாக நிர்ணயிக்கப்பட்ட நிலைகளையும் நாம் அறிந்துகொள்ளலாம். இந்த நிலைகளை நான்கு பாகங்களாக பிரிக்கலாம். 1, தெய்வீக நடத்தை 2, சகல நற்குணங்களின் வளர்ச்சி 3, வேத வாசிப்பு மற்றும் 4,ஊழியமும், பலியும்.

## தெய்வீக நடத்தை -

அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்துவில் புதிதாக நிறுவப்பட்ட சபைக்கு முதலாம் நிரூபத்தை எழுதும்போது, அவர்களில் சிலர் உலகத்தின் மிக இருளான பாவங்களில் இருந்ததை அவர் அறிந்திருந்தார். இவைகளை அவர் 1கொரிந்தியர் 6 : 9,10 வசனங்களில் பட்டியலிட்டிருக்கிறார். அதற்கு பின் "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா?" என்று அவர்களை எச்சரித்தார். அப்பொழுது அந்த சகோதரர்கள் அந்த பாவங்களை விட்டு விலகியிருந்தாலும், முற்காலத்தில் அவைகளை செய்திருந்தார்கள். "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாக இருந்தீர்கள், ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" (1கொரி 6:11) கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பின் உடன்படிக்கை செய்தவர்களும், மீண்டுமாக பழைய பாவங்களுக்கு திரும்பக்கூடாது. நம்முடைய பாவங்களுக்கான மனம் வருந்துதலே, உடன்படிக்கைக்கு முன்னதாக நாம் ஏறெடுக்கும் நிபந்தனைகளாக இருக்கிறது.

கிறிஸ்துவர்களுக்குள் இருக்கவேண்டிய நோக்கங்களும், நடத்தைகளும் விசேஷமாக தங்களுடைய வாழ்க்கையை தேவனிடத்தில் அர்ப்பணித்த சகோதரர்களை பற்றி இயேசுவே தம்முடைய "மலை பிரசங்கத்தில்" விவரித்திருக்கிறார். அவர்கள் தாழ்மையுள்ளவர்களும், பாவத்திற்கு வருந்துபவர்களும், சாந்த குணமுள்ளவர்களும், பரிசுத்தமானவர்களும், இரக்கமுள்ளவர்களும், இருதயத்தில் சுத்தமுள்ளவர்களும், சமாதானம் செய்பவர்களும்,

நீதியினிமித்தம் துன்பப்படுபவர்களுமாக இருப்பார்கள். (மத்தே 5:1-12)

## நற்குணங்களின் வளர்ச்சி -

கிறிஸ்துவ குணங்களின் வளர்ச்சி உள்ளார்ந்ததாக இருக்கிறது, ஆனால் அது கிறிஸ்துவ நல்ல நடக்கையை வெளிப்புறமாக பிரதிபலிக்கிறது. நம்முடைய உள்ளத்திலும், சிந்தையிலும், இருக்கக்கூடிய கோட்பாடுகள் மற்றும் சிறப்பு பண்புகளின் தொகுப்பே நம்முடைய குணநலன்களாகும்.

நம்முடைய நடத்தையின் மூலமாக நம்முடைய குணங்கள் வெளிப்படுத்தப்படுகிறது. ஆயினும், நம்முடைய நடத்தைகள் சில நேரங்களில் நம்முடைய குணங்களை சரியாக வெளிப்படுத்தாமல் போனாலும், நம்முடைய நடத்தைகள் மற்றவர்களால் தவறாக புரிந்துகொள்ளப்படும்போது, உள்ளத்தின் நோக்கங்களை தேவன் அறிவார். ஒரு மனுஷனின் -" இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" (நீதி 23:7) "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். " (நீதி 4:23)

இதுவே நம்மை எளிதில் வழி தவற செய்து ,இந்த உலகத்தோடு இசைந்து வாழசெய்யும். ஆனால், ஒருவர் தம்முடைய வாழ்க்கையை தேவனிடம் அர்ப்பணித்திருந்தால், இவைகளை தடுக்கவேண்டும். ஏனெனில், தேவனுடைய ஆவி இந்த உலகத்தின் ஆவிக்கு எதிரிடையானது. "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோமர் 12:2) "விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" (யாக் 4:4) நாம் ஆவிக்குரிய மதிப்புகளை ஏற்றுகொள்ளும் போதும், அவைகளை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் எதிரிடையான அனுபவங்களில் சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் போதும் கிறிஸ்துவ குணங்களை நாம் வளர்த்து கொள்ளலாம்.

நாம் நன்கு அறிந்த கிறிஸ்துவ குணங்களின் இரண்டு முக்கியமான பட்டியல்கள் உண்டு. ஒன்றை அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாக பெற்றிருக்கிறோம். "ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.." (கலா 5:22,23) மற்றொன்றை அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்களித்திருக்கிறார். "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும் தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே, அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது.... ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள், இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும். இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்." (1பேதுரு 15:12)

ஆகவே தேவனிடத்தில் உடன்படிக்கை செய்த யாவரும், "மேலானவைகளையே நோக்கக்கடவீர்கள்" (கொலோ 3:2)மேலும், கிறிஸ்துவின் குணநலன்களில் வளர்ச்சிடைய முயற்சிப்போம்.

## வேதபடிப்பு -

நாம் தேவனிடத்தில் நம்மை ஒப்புகொடுத்திருந்தால், தேவனுடைய திட்டத்தை அறிந்து, அவைகளை நிறைவேற்ற அதற்கேற்ற காரியங்களை செய்வோம். அப்போஸ்தலர் பவுலின் நாட்களில், அவருடைய யூத சிநேகிதர்களில் அநேகருக்கு தேவனைப்பற்றி வைராக்கியமுண்டாயிருந்ததாகவும், ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல, என்று பவுல் குறிப்பிடுகிறார். (ரோம 10:2) ஆகவே நாம் அவர்களை போல பக்தி வைராக்கியம் கொண்டிருக்கவேண்டும், ஆனால் நம்முடைய வைராக்கியம் தேவனுடைய திட்டத்தின் துல்லியமான அறிவுக்கு ஏற்றதாக இருக்கவேண்டும்.

பழைய யூத யுகம், சுவிசேஷ யுகமாக மாறின உண்மையை அதாவது சத்தியத்தின் மையக் கருத்துக்களில் ஒன்றான இந்த உண்மையை அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய காலத்திலிருந்த சகோதரர்களுக்கு விவரிக்க வேண்டும் என்று மிகவும் பாடுபட்டார். இந்த கருத்தை விவரிப்பதற்காக பவுல் வசனங்களை ஆராய்ந்த விதத்தை பார்த்து, நாமும் வசனங்களை பயன்படுத்துவதற்கு கற்றுக்கொள்ளலாம். பழைய ஏற்பாட்டில் உள்ள நிழலான காரியங்களும், அங்கு சித்தரிக்கப்பட்டவைகளும் நாம் புரிந்துகொள்வதே முதல் வகையாகும். எடுத்துக்காட்டாக, ஆபிரகாமின் இரண்டு மனைவிகளைக் குறித்த ஆவிக்குரிய அர்த்தங்களை பவுல் குறிப்பிட்டார். (கலா 4:21-31) இஸ்ரயேலர்களின் பாவநிவாரண பலியின் நாளின் பொருள் (எபி 9:1-14, 10:1-10) மற்றும் இயேசுவை அடையாளப்படுத்தும் மெல்கிசிதேக்கு (எபி 5,7). அடுத்து தீர்க்கதரிசிகள் மூலமாக பெறப்படும் பாடங்கள். (ரோ 9:23-33)

தேவனிடத்தில் தங்களை அர்ப்பணித்தவர்கள் தேவனுடைய திட்டங்களையும், வளர்ச்சியடையக்கூடிய அவருடைய நோக்கங்களையும் பற்றி அறிந்துகொள்ள ஆர்வமாக இருப்பார்கள். அவர் பரிசுத்த ஆவியின் மூலமாக கொடுக்கும் அநேக நல்ல ஆசிரியர்களின் துணையோடு,

வேத பாடங்களை கற்றுக்கொள்வதினால் மட்டுமே இவைகளை அறிந்துகொள்ளமுடியும்.

ஆகவே, தேவனுடைய திட்டத்தை பொருத்த வரையில் மிகவும் கவனமாக சிந்திக்கவேண்டும். வேதத்தை தொடர்ந்து பயன்படுத்துவதின் மூலம் வசனங்கள் நமக்கு நன்கு பரிட்சையமாக இருக்கவேண்டும். இப்படியாக அதில் உள்ளவைகளை பற்றி நாம் அறிந்திருக்கிறோம். பழைய ஏற்பாட்டின் துவக்கத்தில் ஆதாமிலிருந்து சரித்திரங்கள் கோர்வையாக பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. அதற்குபின் பக்தியூட்டுகிற பகுதிகளான யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு, மற்றும் தீர்க்கதிரிசிகளை பற்றி எழுதப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் நான்கு சுவிசேஷங்களும், அப்போஸ்தலர் நடபடிக்கைகளும், பவுல் எழுதின பதினான்கு நிருபங்களும், யாக்கோபு, பேதுரு, யோவான் மற்றும் யூதா எழுதிய ஏழு கடிதங்கள் மற்றும் வெளிப்படுத்தலின் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தை கையில் வைத்து கொண்டு சத்தியத்தை கற்றுகொள்ளுங்கள். தினமும் அதிக நேரங்களை செலவழித்து பயன்படுத்தி சத்தியத்தின் வெளிப்பாடுகளை சிந்தியுங்கள். "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் " (கொலோ 1:10) நடந்துகொள்ளவேண்டும். "மேலும் உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய் "(பிலி 1:9) பெருககக்கடவது. "தேவனுடைய நோக்கங்களை வெளிப்படுத்துவதை குறித்து பக்தியோடே படிப்பதை தவிர வேறு எந்த வேலையும் மேன்மைக்குறியதல்ல." (Divine Plan of the Ages, p. 13)

### ஊழியம் மற்றும் பலி

ஆவிக்குரிய வேலைகளுக்காக பூமிக்குரிய விருப்பங்களை பலி செலுத்துவதே நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யக்கூடிய ஒரு பகுதியாக இருக்கிறது. நம்முடைய நேரம், பலம், திறமைகள், அனைத்தும் இதில் அடங்கும். நம்முடைய வீடுகளை சகோதர ஐக்கியத்திற்காக அனுமதிப்பதும் பலியின் ஒரு பகுதியாகும். இந்த உலகத்தின் காரியங்களை ஆர்வத்தோடு கலந்துக்கொள்வதைக் காட்டிலும், தேவனுடைய பிள்ளைகளின் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். அப்போஸ்தலர் பவுலை பொருத்த வரையில், ஒவ்வொரு சகோதரர்களையும் சந்தித்து, உபதேசிக்கவும், சத்தியத்தை பிரசங்கிக்கவும், பல மைல் தூரம் பிரயாணம் செய்து, மேலும் உடல் பலவீனங்களால் அவர் பட்ட உபத்திரவங்கள், சிறையிருப்புகள் இறுதியில் சிறைசேதம் பன்னப்பட்ட அனைத்தும் அவருடைய பலியின் ஜீவியத்தில் உள்ளடங்கும்.

கிறிஸ்துவுக்குள் தங்களை அர்ப்பணித்த சகோதர, சகோதிரிகளின் சூழ்நிலைகள் வேறுபடும். ஆகவே ஒவ்வொருவரும் சத்தியத்திற்கு ஊழியம் செய்யவும், சகோதரர்களை சேவிக்கவும் வாய்ப்புகளை தேடி கண்டுபிடிக்கவேண்டும். நம்முடைய ஆண்டவருடைய சீஷர்கள் தங்களுடைய ஜீவனையே தத்தம் செய்து நமக்கு மாதிரிகளை விட்டு சென்றிருக்கிறார்கள். "மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன். இதினிமித்தம் நீங்கள் மகிழ்ந்து, என்னோடேகூட சந்தோஷப்படுங்கள்." (பிலி 2:17,18)

"சகோதரரே, ஸ்தேவானுடைய வீட்டார்.... முதற்பலனானவர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக் கிறார்களென்றும்... நீங்கள் கீழ்ப்படிந் திருக்க வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1கொரி 16:15,16)

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களுமாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்களோடுங்கூட, எங்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சில மனுஷரை உங்களிடத்திற்கு அனுப்புகிறது ஒருமனப்பட்டுக் கூடின எங்களுக்கு நலமாகக் கண்டது. " (அப் 15:25,26)

## "தத்தம் செய்தல்" என்ற வார்த்தை

வேதமாணவர்கள் மத்தியில் பிரபலமாக இருக்கும் இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் இந்த பதத்திற்கு எட்டு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

5144, **நாசர்,** பரிசுத்தமான நோக்கத்திற்காக பிரித்து வைப்பது, என்று பொருள்படும். எண் 6-12, இந்த வசன பகுதி நசரேய விரதத்தை பற்றி குறிப்பிடுகிறது. கிறிஸ்தவர்கள் தேவனோடு செய்த உடன்படிக்கையை இது சித்தரிக்கிறது. இந்த விரதத்தை கடைபிடிப்பவர்கள் - " அவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட அந்த நாட்களில் யேகோவா தேவனுக்கு தன்னை தத்தம் செய்வார்கள்." அதுபோல நாமும் இந்த நாட்களில் தேவனிடம் பக்தியாக இருப்பதற்கும், சுத்திகரிக்கப்படுவதற்கும் நம்முடைய பூமிக்குரிய காரியங்களைவிட்டு பிரிந்திருக்கவேண்டும்.

5145, **நிசிர்,** தனிமைப்படுத்துதல், என்று பொருள்படும். எண் 6:7-"அவன் தன் தேவனுக்கென்று செய்த நசரேய விரதம் (பிரித்தல்) அவன் தலைமேல் இருக்கிறபடியால்..."என்று வாசிக்கிறோம். இதுவும் நசரேய விரதத்தை கடைபிடிப்பவர்களை குறிப்பிடுகிறது.

2763, **ச்சாரம்,** விலக்கி வை, தடையுத்தரவு, என்று பொருள்படும். மதசம்பந்தப்பட்ட காரியங்களுக்கு ஒப்புக்கொடுத்தல். "... அவர்களுடைய ஆஸ்தியைப் பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிறவருக்கென்றும் நியமிப்பாய்." (மீகா 4:13) சகல புறஜாதிகளின் தேசங்களின் கிரியைகளுக்கு தக்கதாக தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடந்து முடிந்தபின் தேவனுடைய இராஜ்யத்தில் அவர்களுடைய சொத்துக்கள் நன்மையான காரியங்களுக்காக பயன்படுத்தப்படுவதை குறிக்கிறது. இன்றைய பாடத்திற்கு இது நேரடியாக எந்த விதத்திலும் பொருந்துவதில்லை.

6942, குவாதாஷ், உண்டாக்கு, முறைபடி கூறு அல்லது சுத்தமாக காத்துகொள் என்று பொருள்படும். இந்த வார்த்தை மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யத்தக்கதாக அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அவனுக்கு வஸ்திரங்களை உண்டாக்கும்பொருட்டு..." (யாத் 28:3) "ஆரோனும் அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அவர்களை அபிஷேகம்பண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக." (யாத் 30:30) "... பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசாரியருக்கே அடுக்கும்..." (11நாளா 26 :18)

6944, கோதீஷ், பரிசுத்தமான பொருள் அல்லது ஸ்தலம் - "சகல வெள்ளியும் பொன்னும், வெண்கலத்தினாலும் இரும்பினாலும் செய்யப்பட்ட பாத்திரங்களும் கர்த்தருக்குப் பரிசுத்தமானவைகள்.." (யோசுவா 6:19)யோசுவாவினால் பிடிக்கப்பட்ட தேசங்களில் உள்ள விலையுயர்ந்த பொருட்கள் -"யேகோவா தேவனின் பொக்கிஷத்திற்குள் வந்தது" இந்த விலையுயர்ந்த பொருட்கள் (சுவிசேஷ யுகத்தில் தேர்வு செய்யப்பட்டவர்கள்) சபையை அடையாளப்படுத்தலாம். ஆகாய் 2:7,8 ம் வசனங்களை ஒப்பிட்டு பார்க்கும்போது தேவன் ஜாதிகளை அசைப்பண்ணினார் என்பதை தீர்க்கதரிசி விவரிக்கிறார். அதில் உள்ள வெள்ளியும், பொன்னும், ஆலயத்தில், அவருடைய ஆவிக்குரிய மகிமையோடு பிரவேசிக்கும் தேவனுடைய பரிசுத்தவான்களை குறிக்கும்.

அடிக்கடி பயன்படுத்தப்படும் "தத்தம் செய்தல்" என்ற வார்த்தையின் மூல பதமாகிய எபிரெய சொல் இரண்டு வார்த்தைகள் கொண்டுள்ளது. 4390(மாலா - நிறப்பு) மற்றும் 3027 (யாடு - திறந்த கை) இந்த வேத பகுதியில், தேவனுக்கும், மற்றவர்களும் புனிதமான தொண்டு செய்வதற்காக ஆசாரியர்கள் தங்களை அர்ப்பணிப்பதைக் குறித்து திறந்த கைகளை நிரப்ப வேண்டும் என்று சொல்லப்படுகிறது. பரிசுத்தமான ஊழியம் செய்வதற்கு, நமக்கு கிடைத்திருக்கும் சுதந்திரத்தை "முழு கரத்தோடும்" பிரயாசப்படவேண்டும்.

4394, மில்லு, நிரப்புதல், அல்லது அர்ப்பணிப்பு என்று பொருள்படும். ஆசாரியர்கள் தங்களுடைய பொறுப்புகளை செய்ய ஒப்புகொடுத்தபின் அவர்கள் செலுத்தும் பலிகளுக்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. யாத் 29ம் அதிகாரத்தில் இந்த வார்த்தை "ஆட்டுக்கடாவின் பிரதிஷ்டை" என்று ஆறு முறையும், லேவியராகமத்தில் எட்டு முறைகள் காணப்படுகிறது. " ஆசாரியர்களின் பிரதிஷ்டையின்" நாள் என்று ஒரு முறை சொல்லப்பட்டிருக்கிறது. (லேவி 8:33)

"பிரதிஷ்டை" என்று இஸ்ரயேலின் ஆசாரியர்களுக்கு அன்று பயன்படுத்தின வார்த்தைகள் இன்று நமக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. ஏனெனில், கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியில் இந்த முழு உலகத்தையும் தேவனிடத்தில் திருப்பி, தேவனோடு அவர்களை ஒப்புரவாக்குவதற்கு நாமும் தேவனுடைய ஆசாரியர்களாகும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே அந்த ஆசாரியர்களை போல நாமும் இன்னும் ஆழமாக தேவனிடத்தில் ஆசாரியர்களாக பிரதிஷ்டை செய்யவேண்டும்.

## புதிய ஏற்பாடு

"தத்தம் செய்தல்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இரண்டு முறைகள் காணப்படுகிறது. எபிரெயர் 7:28ம் வசனத்தில் இந்த வார்த்தை மிக பொருத்தமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு இயேசுவை பிரதான ஆசாரியராக ஏற்படுத்துவதை பற்றி சொல்லப்படுகிறது. "நியாயப்பிரமாணமானது பெலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது, நியாயப்பிரமாணத்திற்குப்பின்பு உண்டான ஆணையோடே விளங்கிய வசனமோ என்றென்றைக்கும் பூரணரான குமாரனை ஏற்படுத்துகிறது."

{குறிப்பு - இந்த இடத்தில் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை -டிலியூ (ஸ்டிராங்க்ஸ் -5048) என்பதற்கு நிறைவேற்றுதல் அல்லது முடித்து விடு அல்லது முழு நிறைவான என்று பொருள்படும். இந்த கிரேக்க வார்த்தை இருபத்து மூன்று முறைகள் காணப்படுகிறது. அவைகள் நிறைவேற்றுதல், பூரணம், பூரணப்படுத்துதல், அல்லது முடித்துவிட்டு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.}

இப்பொழுது இயேசு நம்முடைய பிரதான ஆசாரியராக இருக்கிறார். ஆனால் ஆயிரவருட ஆட்சியில் இந்த உலகத்திற்காக நாமும் ஆசாரியர்களாக அவரோடு இணைந்திருப்போம். "... இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்." (வெளி 20:6) ஆகவே, வருங்காலத்தில் இந்த உலகத்தை நாம் தேவனோடு இசைந்து சீர்பொருத்தும் ஊழியத்தை செய்வதற்கு நம்முடைய ஜீவனை இப்போதே, தேவனிடம் அர்ப்பணிப்போம்.

"தத்தம் செய்தல்" என்று வார்த்தை புதிய ஏற்பாட்டில் இரண்டாவது முறை, இக்காயினிசோ -1457 என்ற வேறு கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு புதுப்பித்தல் அதாவது துவக்கிவைப்பது என்று பொருள்படுகிறது. இந்த வார்த்தை எபிரெயர் 10:19,20ம் வசனத்தில் காணப்படுகிறது. ".....இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய், புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்..."

இந்த வேதபகுதியில், இயேசு சிலுவையில் மரித்தபோது, ஆலயத்தில் உள்ள மொத்தமான திரைசீலை மேல் துவங்கி கீழ் வரைக்கும் கிழிந்ததை நமக்கு நினைப்பூட்டுகிறது. (மத் 27:51) பழைய ஏற்பாட்டில் இந்த திரை பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்தது. இந்த திரை ஆலயத்திலும் இதே காரியத்தை செய்தது. ஆகவே நாம் அனைவரும் தேவனுடைய பிரசன்னத்தை அடைய கிறிஸ்துவின் மரணம் நமக்கு வழிவகுத்திருக்கிறது. சுவிசேஷ யுகத்தின் இந்த அழைப்பில், நம்முடைய ஜீவனை தேவனுக்கு தத்தம் செய்து, பரலோக அழைப்பை தழுவிக்கொள்வதற்கான நாம் பெற்றிருக்கும் இந்த வாய்ப்பு கடந்த கால (பழைய ஏற்பாட்டின்) ஜனங்களுக்கு கொடுக்கப்படவில்லை. அந்த யுகத்தில் நீதியாக நடந்தவர்களுக்கும் கொடுக்கப்படவில்லை. இது ஒரு

தனித்துவமான அழைப்பு - கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் வழியாக - இந்த அழைப்பு துவங்கியது.

"இக்காயினிசோ" என்ற இதே கிரேக்க வார்த்தை எபிரெயர் 9:18ம் வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "அந்தப்படி, முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டை (துவங்குதல், தத்தம் செய்தல், இக்காயினிசோ) பண்ணப்படவில்லை." இஸ்ரயேலரோடு ஏற்படுத்தப்பட்ட பழைய உடன்படிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட இந்த வார்த்தையும், சபைக்குண்டான புதிய அழைப்பையும் ஒப்பிட்டு பார்க்கும் போது பழைய ஏற்பாட்டில் நடந்தவைகள் புதிய ஏற்பாட்டின் ஒரு நிழலாக இருக்கிறது என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இந்த காரியங்களிலும், இரத்தம் சிந்துதல் அவசியமாக இருந்தது. நியாயப்பிரமாணம் ஸ்தாபிக்கப்படும் போது மிருகங்களின் இரத்தம் தெளிக்கப்பட்டது. (யாத் 24:5) நம்முடைய பரலோக அழைப்பு துவங்கியபோது, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டது. (எபி 9:15) {குறிப்பி - எபி 9:18 மற்றும் எபி 10:20 வசனங்களில் மட்டுமே இக்காயினிசோ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், எபி 9:19 ம் வசனத்திலும் இதன் பொருள் தொடர்ச்சியாக காணப்படுகிறது. இதில் நியாயப்பிரமாணம் நிலைநாட்டப்பட்டபோது இஸ்ரயேல் ஜனங்களின் மேல் இரத்தம் தெளிக்கப்பட்டதையும், இப்போது நம்முடைய இருதயம் இயேசுவின் இரத்தத்தினால் தெளிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. இந்த இணையான காரியத்தை - யூத யுகத்தில் இஸ்ரயேலர்களோடு செய்த நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையையும், சுவிசேஷ யுகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கிருபையின் உடன்படிக்கையையும் ஒப்பிட்டு பவுல் பேசுகிறார்.}

இயேசு ஆதாமின் சந்ததிக்கு சரியான ஒரு ஈடுபலியை செலுத்தினார் என்பது பொருள்படுகிறது. சுவிசேஷ யுகத்தில் தங்களுடைய ஜீவனை தேவனிடம் தத்தம் செய்பவர்கள், ஈடுபலினால் கிடைக்கப்படும் மீட்பை பெற்றுகொள்கிறார்கள். ஆனால் இந்த உலகமோ, ஆயிரவருட ஆட்சியில் இரட்சிப்பை பெற்றுகொளளும்..

## கிறிஸ்தவர்கள் அனைவரும் தத்தம் செய்தவர்களா ?

அனைவரும் தத்தம் செய்திருந்தால் நலமாக இருந்திருக்கும், ஆனால் அனைவரும் தத்தம் செய்யவில்லை. அநேகர் தேவனை விசுவாசிக்கிறார்கள், இயேசுவை தங்களுடைய சொந்த இரட்சகர் என்றும் விசுவாசிக்கிறார்கள். தேவன் இயேசுவை கொடுத்ததினால் அவரை பாராட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய பாவங்களை விட்டும் தீமைகளை விட்டும் விலகுவதற்கு முயற்சிப்பதில்லை. அவர்களின் நன்றியுள்ள உணர்வுகளை தங்களை தாங்கள் ஒப்புகொடுத்து வெளிப்படுத்துவதற்கு அவர்கள் முன் வருவதில்லை. மற்றவர்கள் தங்களுடைய நேரத்தை ஆராதனைக்கு ஒப்புகொடுத்தும், சிலர் தங்களுடைய இரக்கத்தை தாராளமாக வெளிப்படுத்தியும் இந்த நன்றியுணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள். இவைகள் அனைத்தும் பாராட்டக்கூடியவைகள் தான். ஆனாலும் கிறிஸ்துவோடு இணைந்து செயல்படவும், முழு சிந்தையோடு தேவனிடத்தில் தங்களுடைய ஜீவனை தத்தம் செய்வதற்கும் மேலும் சில படிகளை கடக்க வேண்டியதாக இருக்கிறது. (மத் 16:24, ரோம 6:3,4)

இந்த ஒரு முயற்சி எடுக்கப்பட்டால், தேவனிடத்தில் தன்னுடைய ஜீவனை ஒப்புகொடுப்பதை ஜனங்களுக்கு முன்பாக சாட்சியாக, தண்ணீரினால் ஞானஸ்நானம் எடுத்து அதை அடையாளப்படுத்துவது ஏற்றதாக இருக்கும். இப்படிப்பட்ட தத்தம் செய்தலைக் குறித்து இதுவரை ஒருவர் யோசிக்காவிட்டால் அல்லது காலத்தை கடத்தினால், இந்த காரியத்தை குறித்த முடிவுகளை நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை (லூக் 14:26 -35)வாசித்தால் நலமாயிருக்கும்.

"ஒரு ஓய்வுநாளிலே பரிசேயரில் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டிலே அவர் போஜனம் பண்ணும்படிக்கு.. ." (லூக் 14:1) அமர்ந்திருக்கும் இந்த காட்சியை நம்முடைய மனதில் கொண்டுவரலாம். அந்த வீட்டில் அவருக்கு தெரிந்தவர்களும், அவரை அறியாதவர்களும் கூடியிருந்தார்கள். அனைவரும் அவருடைய உபதேசத்தை கவனித்துகொண்டிருந்தார்கள். 11ம் வசனத்தில் மனத்தாழ்மையை குறித்து பேசினார், இக்காலத்தில் செய்யும் நன்மைகளுக்கு பலன், நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் கொடுக்கப்படும் என்று 14ம் வசனத்திலே குறிப்பிட்டார்.

இவைகள் அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த ஒருவர் "அவரை நோக்கி - தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்" (வசனம் -15) "ஒரு மனுஷன் பெரியவிருந்தை ஆயத்தம்பண்ணி, அநேகரை அழைப்பித்த" உவமை பற்றிச் சொல்லுவதற்கு இவனுடைய வார்த்தைகள் இயேசுவை தூண்டியது. தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்திற்கு கிறிஸ்துவின் மூலம் தேவன் கொடுத்த அழைப்பை இது சுட்டிகாட்டுகிறது. அழைக்கப்பட்ட அனைவரும் வர மறுத்துவிட்டு, வெவ்வேறு சாக்கு போக்கு சொன்னார்கள். "என்னுடைய வீடு நிறையும்படிக்கு" (வசனம் -23) விருப்பமுள்ள அனைவரையும் அழைக்கும்படி, அந்த மனுஷன் ஆட்களை அனுப்ப முடிவுசெய்தார்.

இயேசு அவ்விடம் விட்டு சென்றபோது "அநேக ஜனங்கள் அவரோடேகூடப் பிரயாணமாய்ப்.." அவர்களிடமாய் அவர் திரும்பிப்பார்த்து -வசனம் 25, 26 மற்றும் 27ம் வசனங்களை சொன்னார். ஒருவர் இந்த அழைப்பை முழு சிந்தையோடும், விருப்பத்தோடும் ஏற்றுக்கொண்டு, தேவனிடத்தில் தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தால், இந்த அழைப்பிற்கு அவர் அற்புதமாக பதில் அளித்திருக்கிறார் என்று பொருள்படுகிறது, இல்லாவிட்டால் இந்த அழைப்பை ஏற்றுகொள்பவர்கள் பெறும் நன்மைகளை சிந்தித்து பார்க்கவேண்டியவர்களாக இருப்பார்கள்.

வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதங்களை மனதில் வைத்துகொண்டு, அவைகளுக்குண்டான நிபந்தனைகளை பார்க்கும்போது - "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்." (ரோம 2:7) என்பது தெரிகிறது. ஆயிரவருட ஆட்சியில் பரலோகத்தில் கிறிஸ்துவோடுகூட இந்த பூமியில் உள்ள முழு குடும்பங்களை ஆசீர்வதிப்பதற்கான ஒரு வாய்ப்பையும், சிலாக்கியத்தையும் சற்று எண்ணிப்பாருங்கள். அவருடைய அழைப்பிற்கு நாம் சாதகமாக பதில் அளிக்கவேண்டும் என்று நினைத்து, தேவன் இந்நாள் வரைக்கும் இந்த அழைப்பை நமக்கு நீடித்திருக்கிறார். "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1தெச 4:3)

# தத்தம் செய்யப்பட்டவர்களின் சிந்தனைகள்



"உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ,புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துகொண்டிருங்கள்" - பிலிப்பியர் 4:8

Benjamin Barton

நீங்கள் பேசக்கூடிய வார்த்தைகள் அல்லது நீங்கள் செய்யும் கிரியைகளை காட்டிலும் உங்கள் சிந்தனைகள் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. தேவனுடைய இராஜ்யத்தில் உங்களுக்குண்டான பங்கு, உங்களுடைய சிந்தனையின் அடிப்படையில் நிர்ணையிக்கப்படும். சிந்தனைகளே சகலத்திற்கும் துவக்கமாக இருக்கிறது. தேவன் இந்த முழு அண்ட சராசரத்தையும் சிருஷ்டிக்கவேண்டும் என்று சிந்தித்தபோது, அதன் சிருஷ்டிப்பு துவங்கியது.

காரியங்கள் வளர நாம் சிந்தனைகளை விதைகளாக விதைக்கிறோம். நாம் நல்ல பண்புகள் அல்லது குணங்கள் என்னும் வெள்ளாமையை வளர்த்துக்கொண்டிருக்கிறோம். கொரிந்து சபையை "தேவனுடைய பண்ணை" என்று குறிப்பிடுகிறார். விளை நிலங்களில் அநேக விதங்கள் உண்டு. சில வயல்கள் மிக செழிப்பாக தோன்றும், மற்றவைகள் சத்தில்லாதவைகளாக தோன்றும். இது தனிப்பட்ட நபர்களுக்கும் பொருந்தும். நேர்த்தியாக பயிரிட்டு வளருவதுபோல சிலர் நீடிய பொறுமை, அன்பு, தேவ வைராக்கியம், தெய்வீக தன்மை, நேர்மை இன்னும் பல குணங்களை தங்களுக்குள் வளர்க்கலாம். சில விளைநிலங்கள் களைகளால் அதிகமாக வளர்ந்திருக்கலாம். பொறாமை, எரிச்சல், கோபம் மற்றும் தீமையான குணங்களை காணலாம்.

நாம் ஒரு நல்ல பயிரை விளைவிப்பதற்காக நல்ல விதைகளை நாம் விதைப்பது போல நல்ல குணங்களை வளர்ப்பதற்கு நல்ல சிந்தனைகளை விதைக்கவேண்டும். விதைகள் அளவில் மிகவும் சிறியதாக இருந்தாலும், மிக பெரிய மரங்களை முளைப்பிக்கும். அதேபோல, சிந்தனைகளும் மிக சிறிய காரியம் தான், ஆனால் அது மிக பெரிதாக வளர்ச்சியடையும். இதை குறித்த அப்போஸ்தலனாகிய பவுல் - "மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான், ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான். (கலா 6:7,8)

விதைக்கிறவனுடைய உவமையில், சில விதைகள் வழி அருகிலும், சில விதைகள் பாறையிலும், சில விதைகள் முள்ளுள்ள இடங்களிலும், சில விதைகள் நல்ல நிலத்திலும் விழுந்தது. (மத் 13:3-9) நல்ல விதைகள் தேவனுடைய வார்த்தைகள் என்று இயேசு சொன்னார். நமக்கு அறிவை புகட்டும் நல்லொழுக்க போதனைகளை தேவன் நல்ல சிந்தனைகளின் தொகுப்பாக ஒரு புத்தக வடிவில் கொடுத்திருப்பதே தேவனுடைய வார்த்தைகளாகும். அதில் பாவத்தைக் குறித்து தேவன் என்ன சிந்திக்கிறார் என்றும், தூதர்களை பற்றி அவர் என்ன யோசிக்கிறார் என்றும், இயேசுவை பற்றி அவர் என்ன சிந்திக்கிறார் என்றும் உயிர்த்தெழுதலைப்பற்றி அவர் என்ன சிந்தித்தார் என்றும் துன்மார்க்கரை பற்றி அவர் என்ன சிந்தித்தார் என்றும் நாம் வேதத்தில் வாசிக்கலாம். நம்முடைய வேதாகமம் தேவனுடைய சிந்தையாக இருப்பதினால், இது மற்ற புத்தகங்களை காட்டிலும் வித்தியசமானதாக இருக்கிறது - ஏனெனில், " என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல... பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கும்." (ஏசா 55:8,9) என்று தேவன் உரைக்கிறார்.

"நான் நட்டேன், அப்பொலோ நீர் பாய்ச்சினான்" (1கொரி 3:6) என்று பவுல் கூறுகிறார். அதாவது அவர் இதுவரைக்கும் விதைக்கப்படாத சில நல்ல சிந்தனைகளை அவர்களின் மனதில் விதைத்தார் என்று பொருள்படுகிறது. அதற்குபின் அப்பொலோ அந்த சிந்தனைகள் வளர அவர்களை ஊக்குவித்தார் அல்லது நீர் பாய்ச்சினார் என்றும், அதற்குபின் காலப்போக்கில் தேவன் அவைகள் கனிதரும்படி வளர்ப்பார். ஆகவே விதைகளை விதைப்பது, சிந்தனைகளை சிந்திப்பதைக் குறிக்கும்.

## இரண்டு விதமான சிந்தனைகள்

இரண்டு விதமான விதைகள் உண்டு. உணவு வகைகள் மற்றும் பூக்கள் போன்ற நல்லவைகளை விளைவிக்கும் நல்ல விதைகளும், நல்ல செடிகளுக்கு கேடுண்டாக்கும் முள்ளுகள், விஷச் செடிகள் மற்றும் களைகளை விளைவிக்கும் தீமையான விதைகள். அதேபோல் இரண்டு விதமான சிந்தனைகள் உண்டு. நல்ல சிந்தனைகள் நீடிய பொறுமை, தாழ்மை, சாந்தம், கனிவு, விசுவாசம் போன்ற நல்ல குணங்களை வளரச்செய்யும். கெட்ட சிந்தைகள் பொறாமை, பகை, வஞ்சனை, புறம்கூறுதல் மற்றும் பல தீமையான குணங்களை வளர்ச்சியடைச் செய்யும். (யாக் 1:14-16)

நல்ல விதைகளை விதைத்தபின், அதை பராமரிப்பது மிக அவசியம். உரம் போட்டு, நீர் பாய்ச்சி,

ஜாக்கிரதையோடு நாம் அதை கவனித்தால் மட்டுமே அது நல்ல பலன் கொடுக்கும். நல்ல சிந்தனைகளையும் இப்படியாகவே நாம் வளர்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். சில நல்ல சிந்தனைகளை நம்முடைய இருதயத்தின் ஓரத்தில், ஒரு மூலையில் ஒட்டிகொண்டிருப்பதை காட்டிலும், அது வளரவேண்டும். அதனுடைய வளர்ச்சிக்கு நாம் பாடுபடவேண்டும். அதற்கு தேவையான தண்ணீரையும், உரத்தையும் போடவேண்டும். ஆனால் கெட்ட விதைகளை பொருத்தவரையில் இவைகள் எதுவும் அவசியமில்லை. அவைகள் வளருவதற்கு நீங்கள் பிரயாசப்படவும், பாடுபடவும் வேண்டாம். உங்கள் தோட்டத்தின் ஒரு மூலையில் அது ஒட்டிகொண்டால் போதும், உடனடியாக எந்த பராமரிப்புமின்றி அந்த தோட்டம் முழுவதிலும் வேகமாக வளர்ந்துவிடும். நமக்குள் விதைக்கப்படும் கெட்ட சிந்தனைகளும் இப்படியே இருக்கிறது. ஒரு வெற்றி சிறக்கும் விவசாயி தன்னுடைய தோட்டத்தில் நல்ல விதைகள் வளர்ச்சியடைய ஊக்குவித்து, கெட்ட விதைகள் வளர்ச்சியடையாதபடி அந்த தோட்டத்தை காத்துகொள்வான். அதேபோல் கிறிஸ்தவர்களும் தங்களுக்குள் இருக்கும் நல்ல சிந்தனைகளை வளரச் செய்து, கெட்ட சிந்தனைகளை வளர்ச்சியடையாமல் தடுத்து அவைகளை முற்றிலுமாக அழித்து விடவேண்டும்.

ஒரு செடி பலனை கொடுக்கும் காலம் வரும்போது, அதனுடைய விதைகளை அதிகதிகமாக கொடுக்கும். அதேபோல், ஒருவர் நல்ல குணங்களை வளர்க்க தேவையான தண்ணீர் ஊற்றி வளர்க்கும்போது, நல்ல சிந்தனைகளை ஏராளமாக அறுவடை செய்யலாம். ஆனால் கெட்ட சிந்தனைகளை விதைக்கிறவர்கள், தானாகவே வளர்ந்து அவர்கள் இன்னும் கேடுள்ளவர்களாக இருக்கும்படி அதிக கேடானவைகளை அறுவடைசெய்வார்கள்.

## நல்ல சிந்தனைகளை விதைப்போம்

நல்ல விதைகளோ, கெட்ட விதைகளோ எதுவானாலும் சரி, அவைகளை விதைக்கும் வரைக்கும் எந்த விதமான பிரச்சனைகளும் வராது. நல்ல சிந்தனைகளை சிந்திக்கும் வரைக்கும் அது எந்த பலனையும் தராதது போல, எந்த விதமான கெட்ட சிந்தனைகளை நீங்கள் சிந்திக்கும் வரைக்கும் அது எந்த கேடும் செய்யாது. சிந்தனை மற்றும் சிந்தனையை சிந்திப்பது என்ற இரண்டு காரியங்களுக்கும் மிக பெரிய வித்தியாசங்கள் உண்டு. ஒரு விதையை விதைப்பதற்கு முதலில் நீங்கள் அதை புதைக்கவேண்டும். ஒரு சிந்தனையை பற்றி சிந்திப்பது, ஒரு விதையை விதைப்பதற்கு ஒப்பாயிருக்கிறது. நல்ல விதையை விதைக்காவிட்டால் அதில் ஒரு பலனும் இல்லை. அதேபோல் ஒரு நல்ல சிந்தனையை சிந்தித்து, அதை வரவேற்று, அதை தியானம் செய்யும் வரைக்கும் எந்த நன்மையும் இராது.

சிந்தனைகளில் உள்ள வித்தியாசங்களை புரிந்துகொள்ள, இயேசுவை நாம் எடுத்துகொள்ளலாம். அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடன் நாற்பது நாள் அளவும் ஆகாரமின்றி வனாந்தரத்திற்கு கொண்டுசெல்லப்பட்டார். அந்த நாட்கள் முடிந்தவுடன் அவருக்கு பசியுண்டாயிற்று, சாத்தான் அவருடைய மனதில் "இந்த கல்லுகளை அப்பமாகும் படி செய்யும் " என்று ஒரு ஆலோசனையை கொடுத்தான். (லூ 4:3) ஆனால் இயேசு இந்த ஆலோசனையை புறக்கணித்தார். "மனுஷன் அப்பத்தினால் மட்டும் அல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலே பிழைப்பான்" (லூ 4:4) என்று அந்த சிந்தைக்கு பதில் அளித்தார். இந்த சிந்தனையை சாத்தான் கொடுத்தான். ஆனால் இயேசுவோ தன்னுடைய உள்ளத்தில் அதை விதைக்கவில்லை.

நம்முடைய சிந்தனைகளுக்காக நாம் குற்றம் சாட்டப்படுவதில்லை ஆனால் நாம் சிந்திப்பதற்காக குற்றம் சுமத்தப்படலாம். ஒரு நல்ல சிந்தனை நம்முடைய சிந்தனையில் தோன்றினால், அது மிகவும் தகுதியுள்ளவைகள் என்று நாம் முடிவெடுக்கக்கூடாது. அந்த சிந்தனைகளை நம்முடைய சிந்தையில் விதைக்குமுன் தேவனுடைய அங்கீகாரத்தை முதலில் பெறவேண்டும். அதேபோல் கெட்ட சிந்தனைகளும் இருக்கிறது. ஒருவர் நம்முடைய சிந்தையில் கெட்ட சிந்தனைகளை போட்டாலும், நாம் குறைகூற வேண்டாம். ஆனால் அவைகளை வரவேற்று, அவைகளை பற்றி சிந்திப்பதும் தவறு. "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்.." என்ற வசனங்கள் குறிப்பிடுகிறது.

இந்த ஒரு கருத்தை அப்போஸ்தலர் வெளிப்படுத்துகிறார் - "தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்." (கலா 6:8) தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இல்லாத சிந்தனைகளும், உலகத்தின் ஆவியைப் பெற்ற சிந்தனைகளை, மாம்சத்தில் விதைப்பது என்று பொருள். இதன் முடிவு அழிவு.

ஒரு வேளை உங்கள் சிறிய தோட்டத்தின் ஒரு பகுதியில் தானியங்கள் முளைத்திருக்கும்போது ஒரு கைபிடி நிறைய களைகளின் விதைகளை தூவிவிட்டால் என்ன நடக்கும் ? தீமையை விதைத்தால் தீமையான காரியங்களை அறுவடை செய்யலாம். நீங்கள் விதைத்த தானியத்தையும் அறுவடை செய்யலாம். ஆனால் நீங்கள் விதைத்த தானியங்கள், நீங்கள் எதிர்பார்க்கும் பலனை கொடுப்பதற்கு நீங்கள் கடினமாக உழைக்கவேண்டும். நீங்கள் தானியங்களுக்கு வைக்கும் உரங்களை களைகளும் எடுத்துகொள்ளும். அதேபோல் தவறான எண்ணங்கள் சிந்தையில் உதித்தால், நாம்

தீமையானவைகளை விதைப்பவர்களாக இருப்போம். நாம் தேவனுடைய ராஜ்யத்திற்கு பிரவேசிப்பதற்கு நாமே தடை விதிப்பவர்களாக இருப்போம். ஆகவே "ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்." என்று அப்போஸ்தலர் கூறுகிறார். நமக்குள் எழும் சிந்தனைகள் தேவ ஆவியோடே இசைந்திருந்தால், அந்த பாதையில் நம்முடைய கவனத்தை செலுத்துவோமானால், முடிவில் நாம் நித்திய ஜீவனை அறுவடை செய்யலாம். ஏனெனில், நாம் நல்ல விதைகளை விதைத்தோம். ஆகவே நியாயமாக அல்லது நேர்மையான காரியங்களை சிந்திப்பது எவ்வளவு முக்கியமாக இருக்கிறது என்று சற்று யோசித்து பாருங்கள்.

"உண்மை எதுவோ... அதையே சிந்தித்துகொண்டிருங்கள்". உண்மையில்லாத காரியங்கள் உங்கள் சிந்தனைக்கு வரும்பட்சத்தில் தயவு செய்து அதை நசுக்கி போடுங்கள். அசத்தியமான காரியங்கள் உறுதிப்படும் வரையில் அதை சிந்தித்து, அசைபோடுவதின் விளைவாக அந்த காரியங்கள் மிகைப்படுத்தப்படுகிறது.

எதைக் குறித்தாவது அல்லது எவர்களைக் குறித்தாவது, அசத்தியமான சிந்தனைகளை நாம் ஆதரிக்காதபட்சத்தில், தேவனைப் பற்றியும் அசத்தியமான காரியங்களை நாம் ஆதரிக்காதபடிக்கு எச்சரிப்போடிருக்கவேண்டும். உதாரணமாக, "நம்முடைய சோதனையின் நாட்களில் தேவன் நமக்கு கிருபையளிக்காவிட்டால் நாம் என்ன செய்வோம்" என்ற சிந்தனை நமக்குள் வரலாம். ஆனால் இது ஒரு தவறான சிந்தனை ஏனெனில், "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று அவர் சொல்லியிருக்கிறாரே. (எபி 13:5) மேலும், "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." (பிலி 4:19) என்று வாசிக்கிறோம். "உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். (சங் 84:11)இப்படியாக, ஒரு சில வசன பகுதிகளே ஒரு கிறிஸ்தவனுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்த போதுமானது. தேவன் நம்மை கைவிட்டுவிடுவார் என்று நாம் எண்ணினால், நிச்சயமாகவே நம்முடைய சிந்தையில் களைகளை விதைப்பவர்களாக இருப்போம். சந்தேகம் என்னும் களைகள் தானாக வளரும். அதற்குபின் நம்முடைய தகுதியற்ற நிலைமை அல்லது அபாத்திரமான நிலைமையின் காரணமாக, நாம் எதிர்பாராத நேரத்தில் தேவன் நிச்சயமாகவே கைவிடுவார். இப்படிநடந்தால், நம்முடைய விசுவாசம் முற்றிலுமாக அஸ்தமித்துவிடும். தேவனை பற்றி அசத்தியமான சிந்தனைகளை சிந்திப்பது எவ்வளவு ஆபத்தானது என்று காட்டுகிறது. தேவனை பற்றி தவறான சிந்தனைகளை ஏற்றுகொள்ளாத விசுவாசம் நம்மிடம் இருக்கவேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. ஆகவே உண்மை எதுவோ அதையே சிந்தித்து கொண்டிருங்கள், உண்மையல்லாத விஷயங்களை உங்கள் சிந்தை சிந்திப்பதற்கு ஒரு நொடிகூட அனுமதிகொடாதீர்கள். அதற்கும் மேல் அசத்தியமான காரியங்கள் உங்கள் சிந்தையில் தோன்றினால், அதைமுதலில் தடுத்து நசுக்கிவிடுங்கள்.

"ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ அவைகளையே சிந்தித்துகொண்டிருங்கள்" உலக ஜனங்களின் ஒழுக்கத்தை காட்டிலும், தேவனுடைய ஜனங்களின் ஒழுக்கம் வேறுபட்டதாக இருக்கிறது. மற்றவர்களை கொள்ளையிடாதவர்களை ஒழுக்கமுள்ளவர்கள் என்றும் இன்னும் பல காரியங்களில் ஒழுக்கமுள்ளவர்கள் என்று இந்த உலகம் கருதுகிறது. ஆனால் கிறிஸ்தவர்களை பொருத்த வரையில் இதை காட்டிலும் மேலான காரியங்களை ஒழுக்கம் என்று சொல்லப்படுகிறது. ஏனெனில், அவன் பெற்ற யாவும் ஆண்டவருக்குரியதாக இருக்கிறது. அவனுடைய கண்கள், காதுகள், நாவு, கைகள், கால்கள் அனைத்துமே ஆண்டவருக்குரியதாக இருக்கிறது. ஆண்டவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த அவயவங்களை தன்னுடைய சுயநலத்திற்காக பயன்படுத்தினால் அது ஒழுங்கீனமான செயலாக சொல்லப்படுகிறது. தேவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட கரங்கள் அவருக்கு விருப்பமில்லாத எந்த காரியத்தை செய்தாலும் அது ஒழுங்கின்மையான செயல். அதேபோல் தேவனுக்கு பிரியமில்லாத இடங்களுக்கு நம்முடைய கால்கள் சென்றால் அது ஒழுங்கின்மையான நடத்தையாகும். தேவனுடைய அனுமதியின்றி நாம் எதுவும் செய்யக்கூடாது. தேவனுக்கு எதிரான செயல்கள் மட்டும் ஒழுங்கின்மையான செயல் என்று சொல்லப்படாமல், அதை சிந்திப்பதே ஒழுக்கமற்ற செயல் என்று சொல்லப்படுகிறது. ஒழுங்கற்ற காரியங்களை குறித்த சிந்தைகள் உங்கள் உள்ளத்தில் தோன்றினால், அதை நசுக்குவதற்கு தேவனிடம் உதவி கேட்கலாம். அதற்குபின் நீங்கள் வெற்றியடையலாம்.

"நீதி எதுவோ அதையே சிந்தித்துகொண்டிருங்கள்" தேவன் அங்கீகரிக்காத எந்த வேலைகளையும் செய்வதற்கு ஒரு கிறிஸ்துவனுக்கு உரிமை இல்லை. அநீதியான சிந்தனைகளை ஆதரிக்கவும் அவன் உரிமைபெறவில்லை. நீதி செயல்களுக்கு முரனான காரியங்கள் அநீதி. உதாரண்மாக - நம்முடைய பலவீனங்களையும், அபூரணமான கிரியைகளையும் குறித்து தேவன் இரக்கமுள்ளவராக இருக்கவேண்டும் என்று விரும்புகிறது ஒரு நீதியான சிந்தனை, ஆனால் மற்றவர்கள் அதே பலவீனங்களில் காணப்படும்போது, தேவன் அவர்களை கடினமாக தண்டிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது அநீதியாகும். ஆகையால், நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களை

குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள், நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்." (மத் 7:1,2) நாம் மற்றவர்களுக்கு அளக்கிறபடியே நமக்கு தேவன் அளப்பார் என்ற காரியத்தை நாம் சிந்தித்தால் நாம் மற்றவர்களோடு எப்படிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திகொள்ளலாம் என்பதை சிந்தித்து பாருங்கள். ஆகவே இதில் நாம் கவனமாக இருக்கவேண்டும். நாம் மற்றவர்களை குறித்து நீதியாக எண்ணினால், நம்மைக் குறித்து தேவனும் அவ்வாறே எண்ணுவார். இதில் நாம் நீதியாக இருந்தால் தேவனுடைய இராஜ்யத்தில் நிச்சயமாக நமக்கு பங்குண்டு.

"கற்புள்ளவைகள் எவைகளோ அவைகளையே சிந்தித்துகொண்டிருங்கள்" இந்த காரியத்திலும் நாம் உலகத்தின் தரத்தை விட இன்னும் உயர்வான நிலையை அடையவேண்டும். நமக்குள் எந்தவிதமான சுயநலம், பொறாமை, எரிச்சல், பகை, குரோதம் இருந்தால் அது கற்பற்ற அல்லது அசுத்தத்தை குறிக்கும். உலகத்தால் இந்த காரியங்களை செய்தாலும், அவர்கள் பார்வையில் அவர்கள் நீதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். காலப்போக்கில் அவர்கள் செய்யும் தவறான காரியங்களை யாராலும் உணர்த்தமுடியாத அளவிற்கு அவர்கள் வந்துவிடுகிறார்கள். ஆகவே நம்முடைய சிந்தையில் கற்புள்ளவைகளை மட்டுமே சிந்திப்பதற்கு நாம் கவனமாக இருக்கவேண்டும்.

"அன்புள்ளவைகள் எவைகளோ அவைகளையே சிந்தித்துகொண்டிருங்கள்" மற்றவர்கள் அறியக்கூடாது என்ற அன்பில்லாத சிந்தனைகள் உங்களுக்குள் வந்தால் அதை தவிர்க்கவேண்டும். நாம் சிந்திக்கும் எந்த காரியத்தையும் மற்றவர்கள் அறிந்துகொள்ளத்தக்கதாக நம்முடைய தலையை தேவன் ஒரு கண்ணாடியைபோல் சிருஷ்டித்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு. உண்மையில் நாம் அனைவருக்கும் கண்ணாடி தலைகளை பெற்றிருக்கிறோம். சாத்தான் நம்முடைய சிந்தனைகளை அறிந்துகொண்டு, அதற்கு ஏற்ற சோதனைகளை நமக்குமுன் வைக்கமுடியும். நம்மை சந்தோஷிப்பிக்கும் உலக காரியங்கள் என்னன்ன என்று அதனால் உணரமுடியும். ஆகவே நாம் வெகு ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆகவே அன்பில்லாத காரியங்கள் எதுவானாலும் சரி, அதை நம்முடைய சிந்தையிலிருந்து களைந்து போடவேண்டும்.

"நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, அவைகளையே சிந்தித்துகொண்டிருங்கள்" அயல் வீட்டார் சொல்லும் அனைத்து காரியங்களையும் நாம் சிந்திக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. தேவன் எவைகளுக்கு நற்கீர்த்தியை கொடுத்திருக்கிறார் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். "என்னுடைய குடும்பத்தை நான் சிந்திக்கவேண்டும்" என்று நாம் பதில் அளிக்கலாம். ஏனெனில் -"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்." (1தீமோ 5:8) என்று வாசிக்கிறோம். நம்முடைய குடும்பத்தை பொருத்தவரையில் வேதாகமம் நமக்கு நல்லாலோசனைகளை கூறுகிறது. வேதாகமத்தில் சொல்லப்படாத எந்தவிதமான நற்கீர்த்தியுள்ள காரியங்களையும் நாம் ஊக்குவிக்கக்கூடாது.

"புண்ணியம் எதுவோ அதையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" நாம் நற்பண்புள்ள கிறிஸ்தவர்களாக வளர இப்படிப்பட்ட காரியங்களை சிந்திக்கவேண்டும். நல்ல பலன்களை கொடுக்காத எந்த காரியத்தை நாம் சிந்திக்கவேண்டாம். நம்முடைய சிந்தையில் வரும் தீமையான எண்ணங்களை விரட்ட, நன்மையான காரியங்களை சிந்திக்கவேண்டும். தவறான சிந்தனைகளை களைந்துபோடாததினால், விரக்தியாகும் அளவிற்கு ஜனங்களின் சிந்தனைகள் அடிக்கடி சிதறடிக்கப்படுகிறது. தவறான சிந்தனைகள் வரும்போது அவைகளை விரட்டுவதற்கு நாம் மூர்க்கத்தனமாக போராடவேண்டும் என்பது தவறு. அதற்கு பதிலாக ஒரு தவறான சிந்தை வரும்போது நலமான சிந்தனையை அதன் இடத்தில் வையுங்கள் அப்போது இந்த தவறான சிந்தனை தானாக ஓடிப்போகும். ஆகையால், புண்ணியங்களை சேர்க்கும் சிந்தனைகள் நம்முடைய அன்றாட கிறிஸ்துவ யுத்தத்தில் நம்மை பலப்படுத்தும்.

"புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துகொண்டிருங்கள்" தேவன் சில காரியங்களுக்காக உங்களை புகழுவார் என்று நீங்கள் அறிந்தீர்களானால், அவைகளை குறித்து சிந்தியுங்கள். அதன் விளைவாக நீங்கள் தேவனை புகழ முடிந்தால், "அப்படிப்பட்ட காரியங்களை குறித்தே சிந்தியுங்கள்".

இந்த வார்த்தைகளில், தேர்ச்சியடைந்த ஒரு கிறிஸ்தவன் வெற்றிபெற கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளது. ராஜ்யத்தில் நமக்கு இடம் உண்டாயிருக்குமா ? அல்லது இல்லாமல் போயிவிடுமா? என்ற கேள்விகளுக்கு உங்களுடைய சிந்தனைகளின் அடிப்படையில் பதில் அளிக்கப்படும். இது மிகவும் எளிமையானதாக இருந்தாலும், சிலர் இதை விரும்பி செயலாம். இந்த பாடத்தை கவனத்தில் கொள்ள இந்த வசனமே நமக்கு போதுமானது. "உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துகொண்டிருங்கள்."

களைகளா, பூக்களா

# உங்கள் தோட்டத்தில் இருப்பது என்ன ?



"என் சகோதரியே, என் மணவாளியே, நீ அடைக்கப்பட்ட தோட்டமும் மறைவு கட்டப்பட்ட நீரூற்றும் முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்." - உன்னதப்பாட்டு 4:12

Rick Sconyers

பொதுவாக ஒரு தோட்டத்தில் பல வகையான பூக்களும், செடிகளும், மரங்களும் புதர்களும் இருக்கும். இவைகள் செழுமையாக வளர நான்கு முக்கியமான காரியங்கள் தேவை - நல்ல மண், உரம், தண்ணீர், சூரியன். ஒரு தோட்டத்தை பராமரிக்க தோட்டக்காரனுக்கு அநேக கருவிகள் தேவைப்படும். ஆனால் களைகளை குறித்து நாம் என்னசொல்லுவோம் ? நமக்கு அவைகள் பிடித்திருந்தாலும், பிடிக்காமலிருந்தாலும், எல்லா தோட்டங்களில் இந்த களைகள் காணப்படுகிறது. தேவையற்ற இந்த களைகள் ஒரே இராத்திரியில் வேகமாகவும்,செழிப்பாகவும் வளர்ந்து விடுகிறது. இதை நாம் கட்டுப்படுத்தாமல் போனால், அந்த தோட்டமே பாழாய்போய் விடும். நல்ல செடிகள் அல்லது மரங்கள் மிக கடின உழைப்பால், ஐந்து அடிகள் வளரும் நேரத்தில், களைகள் இருபத்தைந்து அடிகளாக எந்த பராமரிப்பில்லாமல் தானாக வளர்ந்துவிடும்.

## துவக்கத்திலிருந்த தோட்டம்

அழகான பூக்களுடன், உள்ள செடிகளும், மரங்களும் நிறைந்த ஏதேன் தோட்டத்தை சற்று கற்பனைச் செய்து பாருங்கள். இன்றைக்கு இருக்கும் மிக அழகான தோட்டங்களை நாம் பார்த்தால் மட்டுமே நாம் ஏதேன் தோட்டத்தின் அழகை சிறிதளவாகிலும் உணர்ந்துகொள்ளமுடியும். ஆதியாகமத்தில் இப்படியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. "அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்து... தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி... தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்" (ஆதி 2:6,8,9)

இந்த தோட்டத்தில் பிதோலாகு இருந்தது. (வசனம் -12) நறுமண பிசினை கொடுக்கும் ஒரு விசேஷமான மரமாக இருந்தது. இப்படியாக இந்த தோட்டத்தில் நறுமணம் வீசியது.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி - நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம், ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். " (ஆதி 2:15-17)இப்படியாக ஆதாம் ஏதேனுடைய தோட்டக்காரரானார்.

அந்த தோட்டம் பூரணமான சுற்றுபுற சூழ்நிலையையும், பரிபூரணமான அமைப்பும், ஒரு பரிபூரணமான சிருஷ்டிப்பை கொண்டிருந்தது. தேவனுடைய ராஜ்யத்தில் இந்த முழு உலகத்திற்கும் வைத்திருக்கும் காரியத்தை இந்த தோட்டம் சித்தரிக்கிறது. புசிக்கவேண்டாம் என்று விலக்கப்பட்ட கனியை ஆதாம் புசித்ததினால் - "..நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய், அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும், வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்.... அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்." (ஆதி 3:17,18, 23)

"சபிக்கப்பட்ட இந்த பூமியில்" பழக்கமில்லாத ஆதாம் அதில் உள்ள அபூரணமான காரியங்களை தன்னுடைய கட்டுபாட்டிற்குள் கொண்டுவருவதற்கு அவர் எவ்வளவு பாடுபட்டிருக்கவேண்டும். நிலத்தை பாழாக்கும் முள்ளுகளையும், களைகளையும் அழிக்க அவர் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார். அவர் தன்னுடைய தோட்டத்தில் வேலை செய்தபோது, தேவனுடைய தோட்டத்தை பற்றியும், அங்கு அவர் தேவனோடு கொண்டிருந்த இனிமையான உறவையும் நினைத்து ஏங்கியிருக்கவேண்டும்.

நாம் தவறுகள் செய்யும் போது இப்படிப்பட்ட சிந்தனைகள் நமக்குள்ளும் எழுகிறது. நாம் நம்முடைய தவறுகளை திருத்தி, முன்னிருந்த நிலைக்கு திரும்பினால் எவ்வளவு நன்மையாக இருக்கும் என்று சிந்திக்கலாம். நாம் செய்த தவறுகளை பற்றி நமக்கு தெரியும், ஆனால் நாம் தவறுகள் செய்ய அனுமதிக்கப்பட்டதும், அதினால்.வரும் வேதனைகளும், இவையனைத்தும் நாம் கற்றுகொண்டு வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக அனுமதிக்கப்படுகிறது என்பதையும் உணர்வது அரிதாகவே இருக்கிறது.

## களைகள் அனுமதிக்கப்படுவதில்லை

களைகள், முள்ளுகள், நெரிஞ்சில்களையும் எந்த விதமான கட்டுபாடுகள் இன்றி வளரவிட்டால், அவைகள் பூமியில் உள்ள அனைத்து ஊட்டசத்துக்களையும்

உரிந்துவிட்டு, மற்ற எந்த செடிகளையும் வளரவிடாமல் சகலத்தை மேற்கொண்டுவிடும். அவைகள் மிகவும் ஆழமாக வேர்விடும். அவைகள் வளர்ந்தபின் அந்த வேர்களை பிடுங்குவது மிக கடினம். அவைகளை விட்டுவிட்டால், தனக்கு பிடித்த நல்ல செடிகளை தேர்ந்தெடுத்து அவைகளை வளரவிடாமல் நெருக்கி, அழித்து விடும். அதன் வேர்கள் நல்ல செடியின் வேர்களோடு பின்னி பிணைந்து எந்த சூழ்நிலையிலும் அந்த நல்ல செடிகள் வளருவதற்கு வாய்ப்பில்லாமல் நெருக்கிவிடும். நாம் ஒருவேளை இந்த களைகளை முழுமையாக வெட்டி எறிவதற்கு முயற்சிக்கும்போது இதை காணலாம்.

கோதுமை மற்றும் களைகளைப் பற்றிய உவமையை சற்று கவனமாக எண்ணிப்பாருங்கள். கோதுமை செடிகளுக்குள் வளரும் களைகள் கோதுமை செடியைபோலவே தோற்றம் அளிக்ககூடியதாக இருந்தாலும், அவைகள் விஷசெடிகளாக இருக்கிறது. இரண்டும் வளரும்போது களைகள் நிமிர்ந்து நிற்கும், கோதுமை மணிகள் உருவான காரணத்தினால் கோதுமை செடி வளைந்து காணப்படும். களைகள் மிகவும் ஆபத்தானது என்று மத் 13: 24-30ல் வாசிக்கிறோம். கோதுமை செடிகளுக்குள் களைகள் காணப்படுவதினால்,களைகளை முதலில் பிடுங்கிவிடலாமா என்று உழியக்காரர்கள் தங்களுடைய எஜமானிடம் கேட்டபோது "...வேண்டாம் களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்." (மத்13:29) என்றார். அதற்கு முன்பதாக விதைக்கிறவனுடைய உவமை பற்றி இயேசு சொன்னார். அதில் சில விதைகள் முள்ளுள்ள இடங்களில் விழுந்து, முள்ளுகள் அதை நெருக்கி போட்டது என்று வாசிக்கிறோம். (மத் 13:7)

நீடிய நாட்களாக களைகள் மற்ற செடிகளை அழித்ததைக் குறித்து சாலோமோன் ஞானி மிக துல்லியமாக விவரிக்கிறார் - "சோம்பேறியின் வயலையும், மதியீனனுடைய திராட்சத்தோட்டத்தையும் கடந்து போனேன். இதோ, அதெல்லாம் முள்ளுக் காடாயிருந்தது, நிலத்தின் முகத்தைக் காஞ்சோறி மூடினது.." (நீதி 24:30,31) மேலும் புதிய ஏற்பாட்டில் - "முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படு கிறதற்கேற்றதாயுமிருக்கிறது, சுட்டெரிக் கப்படுவதே அதின் முடிவு.." (எபி 6:8) என்று வாசிக்கிறோம்.

சில உவமைகளில் இந்த களைகள் எவ்வாறாக நல்ல செடிகளை பாழாக்குகிறது என்று விவரிக்கிறார். களைகள் பாவங்களையும் அதனால் வரும் விளைவுகளையும் அடையாளப்படுத்துகிறது என்று நாம் தெளிவாக சொல்லலாம். சில பாவங்கள் ஒரு ராத்திரியில் வளர்ச்சியடைலாம், அதை நாம் உடனடியாக அழித்துவிடவில்லை என்றால், அது மிக வேகமாக பரவி, சகலத்தையும் அழித்து விடும். ஆகவே நம்முடைய மாம்சத்தில் உள்ள பாவங்களை நாம் அநுதினம் கண்காணித்து வரவேண்டும். பொதுவான உலகத்தின் களைகள் மற்றும் களைகளை விதைப்பது சாத்தானுடைய வேலையாக இருக்கிறது. அவைகளை நாம் கட்டுபடுத்தவில்லை என்றால் அது நம்மை கட்டுபடுத்த துவங்கும்.

களைகள் நம்முடைய தவறுகள் மற்றும் தவறான பழக்கவழக்கங்களையும் அடையாளப்படுத்தும். தொடர்ந்து இந்த பாவங்களை செய்வோமானால், "இது எனக்கு நீதியாக இருக்கிறது" என்று சொல்லும் நிலைக்கு தள்ளப்படுவோம். இந்த களைகளை பிடுங்க நாம் கடைசிவரைக்கும் எந்த வித முயற்சிகளையும் எடுக்காவிடில், காரியங்கள் மிகவும் மோசமாகிவிடும். அதாவது நமக்குள் ஆழமாக வளர்ந்து கொண்டிருக்கும் தீய பழக்கவழக்கங்கள் மற்றும் தீமைகளை திருத்திகொள்வது எவ்வளவும் கஷ்டமான காரியம் என்று இங்கு தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது.

## விசேஷித்த பூக்கள் அல்லது செடிகள்

உங்கள் வீட்டில் உங்களுக்கு பிடித்த செடி அல்லது பூச்செடியிருந்தால் அதை நீங்கள் மறைத்து வைக்கமாட்டீர்கள். அனைவரும் பார்த்து இரசித்து, மகிழும்படியாக, அந்த செடி எந்த இடத்தில் வைத்தால் நன்றாயிருக்கும் என்று அறிந்து அதற்கேற்ற ஒரு இடத்தில் அதை வைப்பீர்கள். அந்த செடி மேலும் அதிகமான பூக்களை அல்லது கனிகளை கொடுக்கவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்கள்.

உங்களுக்கு பிடித்த களைகளை வைத்து நீங்கள் என்ன செய்வீர்கள் ? இப்படிப்பட்ட ஒரு காரியம் நடைமுறையில் இல்லை. "பிடித்தமான" என்ற வார்த்தையை நாம் நம்முடைய விருப்பம் அல்லது பிடித்தமானகாரியங்களை குறிக்கும். நமக்கு பிடித்த செடியை சுற்றி களைகள் வளருவதை நாம் காணும்போது, அதை உடனடியாக பிடிங்கி விடுவோம். நமக்கு பிடித்த செடி நம்மை பொருத்தவரையில் நமக்கு விலையுயர்ந்தாக இருக்கிறது. அவைகள் இரண்டையும் ஒரே இடத்தில் வளருவதற்கு நாம் என்றுமே அனுமதிப்பதில்லை. அதாவது ஒன்றுக்கொன்று விட்டுகொடுத்து வளரட்டும் என்று நாம் ஒருபோதும் சிந்திப்பதில்லை. ஏனெனில் இரண்டும் வளருவதற்கு வாய்ப்பில்லை.

நமக்கு பிடித்தமான அந்த செடி நம்முடைய நல்ல குணங்களை போலிருக்கிறது. நாம் இதை கவனத்தோடு வளரவிட்டால், நாம் தேவனுக்கும் மற்ற சகோதரர்களுக்கும் ஊழியம் செய்வதினால் நம்முடைய வெளிச்சம் மற்றவர்கள் முன் பிரகாசிக்கும். மற்றவர்களும் இதை கண்டு மகிழ்வார்கள். ஆனால் நம்முடைய மாம்சத்தின் கிரியைகளை வளரவிட்டால், அவைகளும் மற்றவர்களாக கவனிக்கப்படும். "அவர்களுடைய கனிகளால் அவர்களை அறிவீர்கள்" (மத் 7:20)

களைகள் முளைப்பிக்கும் பலன்கள் மற்றவர்களுக்கு ஆபத்தானதாக தான் இருக்கும். ஆகவே களைகள் மாம்சத்தின் கிரியைகளினால் வரும் பலனையும், நல்ல செடிகள் ஆவியின் கனிகளையும் அடையாளப்படுத்துகிறது. மற்றவர்களிடம் நாம் களைகளை (பாவங்கள்) கண்டால், நாம் அவர்களை குறைச் சொல்லி கொண்டே இருக்கிறோம். ஆனால் மற்றவர்களிடம் வளரக்கூடிய நல்ல செடிகளை நாம் பாராட்டி, ரசிப்பது எவ்வளவு மேன்மையாக இருக்கும் என்று சற்று சிந்தித்து பாருங்கள். மற்றவர்களை கவனிப்பதை விட்டு விட்டு, நம்முடைய தோட்டத்தில் என்னென்ன வளர்ந்து கொண்டிருக்கிறது, என்ற முக்கியமான கேள்வியை நாம் இப்பொழுது நமக்குள் எழுப்பலாம்.

ஏதேன் தோட்டத்தில் வளர்ந்த கனிகளின் தோற்றத்தை போலவே களைகளும் கனி கொடுக்கலாம். "அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்குஇன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து. புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் புசித்தான்." (ஆதி 3:6)

அந்த மரம் விஷமான களை அல்ல, ஆனால் ஏவாளை வஞ்சிக்க சாத்தான் தன்னுடைய பொய்யை உண்மை என்று நிரூபிக்க அந்த பரிபூரணமான மரணத்தின் கனியை பயன்படுத்தினான். இப்படியாக, நம்மை எத்தனை முறைகள் சாத்தான் வஞ்சித்திருக்கிறான். அதற்குபின் நாம் எவ்வளவு வருந்தியிருக்கிறோம்? நம்முடைய கவனத்தை திசைத்திருப்பும் வகையில், தேவனுடைய பார்வையில் ஏற்றுகொள்ளப்படாததாக இருந்தாலும் பொதுவாக உலகத்தின் பார்வையில் மதிப்புபெற்றதுமான காரியங்களை களைகளாக நம்முடைய சிந்தைக்குள் சாத்தான் விதைத்திருக்கலாம்.

தேவனை விட்டு நம்மை பிரித்து, இடுக்கமாக வழியில் நாங்கள் நடப்போம் என்ற பொருத்தனையை நாம் முறிப்பதற்காக சாத்தான் நம்மை வழிநடத்த விரும்புகிறான். சாத்தானுடைய சிந்தனைகளை நாம் அனுமதித்தால் நாம் செய்யும் தவறுகள் அனைத்தும் சரியே என்று நாம் முழுமையாக உணரும் அளவிற்கு நம்மை திறமையாக நம்பவைத்துவிடுவான். நாம் அவனை தடுக்கவில்லை என்றால் வெகு சீக்கிரத்தில் நாம் மரணத்தை தழுவலாம். ஆனால் பரலோகபிதாவின் கிருபைகளுக்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட குற்றங்களை நாம் செய்யும் போது, அவரிடம் உடனடியாக சென்று மன்னிப்பை கேட்டுவிடலாம். நமக்கு தேவைப்படும்போது நமக்காக பரிந்துபேசுவதற்கு ஒருவர் இருக்கிறார்.

மிக கவர்ச்சிகரமாக பூக்களுடைய இராட்சத களைகள் (ஹாகு வீட்ஸ்) உண்டு. ஆனால் ஒருவர் அதன் அருகில் சென்றால், அதிலிருந்து தெளிக்கப்படும் ஒரு சாரு, சூரிய வெளிச்சம் பட்டவுடன், தோல்களின் மேல் கொப்பளங்களை உண்டாகி, அந்த புண்கள் காய்ந்தபின் கருநிறத்தில் தழும்புகளை ஏற்படுத்திவிடும். அந்த சாரில் ஒரு துளி கண்களில் பட்டால், தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகவோ பார்வை போய்விடும். ஆனால் அந்த செடியை பார்வைக்கு மிக அழகாக இருக்கும். அதேபோல் நம்முடைய பார்வைக்கு நலமாக தோன்றும் அனைத்தும், நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏற்றதாக இருப்பதில்லை. மேலும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்கைக்கு பாதகமாகவும் இருக்கிறது.

## பல்வகை களைகள்

களைகளில் பல வகைகள் இருப்பது போல பாவங்களிலும் பல வகைகள் உண்டு. பவுல் சிலவற்றை குறிப்பிடுகிறார். "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன- விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள் கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே, இப்படிப்படடவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். " (கலா 5:19-22)

"வழக்கமான செயல்" என்பதை சற்று கவனியுங்கள். வழக்கமான செயல் என்றால் அனுதினமும் அதை பழக்கத்தில் கொண்டுவருவதற்காக, அந்த ஒரு காரியத்தை மீண்டும் மீண்டும் செய்வதாகும். மாம்சத்தின் கிரியைகளை நாம் செய்யாதிருப்பதற்கு என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று பவுல் நமக்கு ஆலோசனை சொல்லுகிறார். நாம் இப்படிப்பட்ட களைகளை களைந்து போடவேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம்.

அதற்குபின் நாம் பழக்கப்படுத்திகொள்ளவேண்டிய காரியங்களை பட்டியலிடுகிறார். "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை." (கலா 5 22,23)

இதோடுக்கூட சகோதர சிநேகத்தை கூட்டி வழங்குங்கள் என்று பேதுரு நமக்கு ஆலோசனை சொல்லுகிறார். இவைகளை நாம் பழக்கத்தில் கொண்டுவருவது எவ்வளவு முக்கியம் என்று நமக்கு அறிவுருத்துகிறார். ஏனெனில் -"...இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை" (11பேது 1:10)

நம்முடைய இருதயங்கள் - நம்முடைய தோட்டங்கள்

நாம் தேவனோடு உடன்படிக்கை செய்ய முடிவெடுத்தபின், தேவன் நம்மிடத்தில் விரும்பி கேட்கும் ஒரு காரியம் --"என் மகனே, உன் இருதயத்தை எனக்கு தா.." (நீதி 23:26) என்பதை உணரவேண்டும்நம்முடைய சரீரத்தில் மிக முக்கிய பகுதியான இருதயமே அன்பிற்கும் பாசத்திற்கும் மையமாக இருக்கிறது. அந்த இருதயத்தின் நோக்கங்களை தேவன் ஆராய்ந்து, அவைகளில் உண்மையானதை அறிய விரும்புகிறார். ஆகவே நாம் தாவீது பக்தனின் வார்த்தைகளை நினைவுகூறலாம் -"தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும், என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்." (சங் 139:23,24) அக்கிரமஞ்செய்கிற மனுஷரோடே ஆகாமியக் கிரியைகளை நடப்பிக்கும்படி என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும்.." (சங் 141:1)

நம்முடைய இருதயத்திலிருந்தும், நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படும் அளவிற்கு, வளர்ந்திருக்கும் பாவங்களாகிய களைகளை நாம் எப்படியாவது பிடிங்கி எரிவதற்கு நாம் கூடுமானவரைக்கும் முயற்சிசெய்யவேண்டும். இது ஜீவன் அல்லது மரணம் என்ற காரியம் நமக்குமுன் வைத்திருப்பதால் நாம் ஒவ்வொரு நாளும் நம்மை சுயபரிசோதனை செய்து பார்க்கவேண்டும். ஒருவேளை நாம் தெய்வீக நிலைமையில் மேன்மையான இடத்தையும் பெறலாம், பெறாமலும் இருக்கலாம்.. எல்லாம் நம்முடைய இருதயத்தின் நிலைமையை பொருத்தே அருளப்படும். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத் 5:8)

பவுல் எழுதுகிறபடி - "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்."(11கொரி 7:1) நம்முடைய பிதா நம்முடைய இருதயத்தை கவனித்துகொண்டிருக்கிறார், என்பதை நாம் உணர்ந்ததினால், நாமும் நம்முடைய இருதயத்தை கவனமாக பாதுகாக்கவேண்டும். நம்முடைய இருதயம் ஒரு தோட்டத்தை போலிருக்கிறது. எவைகளை விதைக்கிறோமோ அவைகள் வளரும். நம்முடைய சிந்தனைகளும், நம்முடைய வார்த்தைகளும், நம்முடைய கிரியைகளும் வெளிப்படுத்தும். இப்படியிருக்க பாவமான களைகளை நம்முடைய சிந்தை, வார்த்தை, கிரியைகளை விட்டு அகற்றவேண்டும். ஒரே ஒரு களையை வளரவிட்டாலும், தோட்டத்தில் வேறு எந்த செடிகளும் வளரவிடாமல், முழு தோட்டத்தையே நாசமாக்கிவிட்டும்.

ஆகவே நம்முடைய தோட்டத்தை மிக கவனத்தோடு பாதுகாத்து, பராமரிக்கவேண்டும். நாளுக்கு நாள் அதை இயேசுவின் சாயலுக்கு மாற்றவேண்டும். இப்படிப்பட்ட தோட்டத்தை தேவன் விரும்புகிறார். அதிகமான ஆவிக்குரிய கனிகள், வளர்ந்து பழுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அந்த இடத்தில் வேறு எதையும் அவர் எதிர்பார்ப்பதில்லை.

களைகளுக்கு எச்சரிப்பாக இருப்பதோடு அல்லாமல், மண் சரியான நிலையில் இருக்கிறதா என்று நாம் கவனிக்கவேண்டும். ஏனெனில் நல்ல விதைகளின் வேர்கள் மண்ணுக்குள் எளிதாக சென்று தனக்கு தேவைப்பட்ட ஊட்டசத்துக்களையும், தண்ணீரையும் உறிஞ்சிகொண்டு நல்ல பலனை தர, மண்ணின் தரம், சரியாக இருக்கவேண்டும்.

## ஆயுதங்கள்

எந்த வேலைகளையும் எளிதாக செய்ய ஏற்ற கருவிகள் தேவை. உலகம், சாத்தான் மற்றும் மாம்சத்தின் களைகளோடு போராடுவதற்கு, இந்த சுவிசேஷ யுகத்தின் அறுவடையின் இறுதி நாட்களில் தேவன் நமக்கு அநேக ஆயுதங்களை வேதத்தில் கொடுத்திருக்கிறார். இது ஆவியின் கனிகளை வளரச் செய்து நல்ல பலன்களை தருவதற்கு உதவியாக இருக்கிறது.

தேவன் நம்மை மிகவும் நேசிப்பதினால், நாம் அவரிடத்தில் விசுவாசமாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். ஆகவே நாம் ஒவ்வொருவரும் ஆவியில் வளருவதற்கு தேவையான அனுபவங்களையும், போதுமான ஆயுதங்களையும் கொடுக்கிறார். ஆனால் இவைகளை ஏற்றமுறையில் பயன்படுத்திகொள்வது ஒவ்வொரு தனி நபரும் பொறுப்பெடுத்துகொள்ளவேண்டும். நம்முடைய இரட்சிப்பு நிறைவேற நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்திகொள்ளவேண்டும். (11பேதுரு 1:10, பிலி 2:12)

எந்த மரமும் உடனடியாக அறுவடை செய்வதற்கு கனிகளை முளைப்பிக்காது. பழங்கள் பழுக்கும் வரை அது அநேக வளர்ச்சிக்குரிய நிலைகளை கடக்கவேண்டியதாக இருக்கிறது. நம்முடைய வாழ்க்கையிலும், இதே காரியங்கள் நடந்துகொண்டிருக்கிறது. புது சிருஷ்டியை போஷித்து பராமரித்து, முழு வளர்ச்சியடைய நம்முடைய ஜீவனுள்ள நாட்கள் முழுவதுமாக தேவைப்படுகிறது.

ஆகவே, நம்முடைய சுயத்தையும், உலகத்தின் காரியங்களையும், அதனால் வரும் சந்தோஷங்களையும் பலிசெலுத்தி விட்டு, நம்மை நாம் தேவனுடைய முழு சித்தத்திற்கு முழுமையாக ஒப்புகொடுப்போம். நாம் வெற்றியடைந்தால், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி..." என்ற வார்த்தைகளை நாம் கேட்கலாம். (மத் 25:23)

# ஆசாரியத்துவத்தின் பிரதிஷ்டை



பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும்வரைக்கும், எழுநாள் ஆசரிப்புக் கூடாரவாசலை விட்டுப் புறப்பாடாதிருங்கள், ஏழுநாளளவும் நீங்கள் பிரதிஷ்டைப்படுத்தப்படுவீர்கள்." - லேவி 8:33

Davin Stein

இயேசுவின் ஆசாரியத்துவத்திற்கு பங்கு வகிக்க, அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றுவதற்கு கொடுக்கப்படும் அழைப்பு ஒரு விசேஷித்த ஆசீர்வாதமாக இருக்கிறது. ஆகையால், சந்தேகத்திற்கு இடமின்றி இந்த வகுப்பாரை "சிறு மந்தை" என்று குறிப்பிடப்படுகிறது. (லூக் 12:32)

இவர்கள் சிறப்புரிமைப் பெற்று அழைக்கப்பட்ட அழைப்பில், வளர்ச்சியடைவதற்கு சகலமும் கையளிக்கப்படுகிறது. இவர்கள் "முன்குறிக்கப்பட்டவர்களின்" வகுப்பாருக்கு தேர்வு செய்யப்படுபவர்கள். இவர்கள் தனிப்பட்ட முறையில் முன்குறிக்கப்படுகிறதில்லை, மாறாக ஒரு குழுவாக தேர்வு செய்யப்படுகிறார்கள். ஆயினும், மரணபரியந்தம் விசுவாசமாக இருப்போர் மிக அற்புதமான பணிக்கு அமர்த்தப்படுவார்கள்.

திரைக்கு அப்புறத்தில், மெல்கிசெதேக்கின் முறைமையின்படி ஆசாரியர்களாக, மகிமையடைந்து, முழு மனுக்குலத்தையும் வெற்றிகரமாக பரிசுத்தமான பெரும் பாதையில் நடத்தி அவர்களை பரிபூரணமான நிலைக்கு முழுமையாக விடுவிப்பதே அதன் கடைசி பலனாக இருக்கும்.

இந்த சிறு மந்தைக்குண்டான வருங்காலத்திற்கான ஆயத்தபணிகளையும், அதன் தேவையான கட்டளையையும் குறித்து நம்முடைய ஆண்டவர் எல்லா காரியங்களையும் கற்பித்திருக்கிறார். அதில் லேவியர்களின் ஆசாரியத் துவத்தின் பிரதிஷ்டை, மிக அற்புதமான நிழலாக நமக்கு கொடுக்கப பட்டிருக்கிறது. பொதுவாக நிஜத்தை, நிழலோடு ஒப்பிடுகையில் நிழல் சற்று குறைவாகவே காணப்படுகிறது. மிக சிறப்பாகவும், அதிக மகிமையுள்ளதாகவும் புரிந்துகொள்வதற்கு கடினமாக இருக்கும். நிஜத்தை, ஒரு அளவிற்கு (பகுதி) மட்டுமே நிழலால் எடுத்து காட்ட முடிகிறது. ஆனாலும் அது தீமையானது என்று சிந்திக்கவேண்டிய அவசியமில்லை. இந்த "சிறு மந்தை" வகுப்பாருக்கு ஆசாரியத்துவத்தின் பிரதிஷ்டையில் உள்ள நிழல் எண்ணி முடியாத பாடங்களை கொடுத்து ஊக்குவிக்கிறது.

ஐந்து ஆகமங்களில் (பென்டாக்கு) இரண்டு அறிக்கைகளை நாம் காணலாம். மோசே இந்த பிரதிஷ்டையில் நடத்தவேண்டிய முறைமைகளையும் கட்டளைகளையும் யாத்திராகமம் 29ம் அதிகாரத்தில் பிதாவாகிய தேவன் கொடுத்திருக்கிறார். அந்த கட்டளைகளை நிறைவேற்றின காரியங்கள் லேவியராகமம் 8ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் கணக்கீடு இணையாக இருக்கிறது. ஆனால், ஒரே விதமாக இருப்பதில்லை. மேலும் இவைகளில் உள்ள வித்தியாசத்தை நாம் ஒப்பிட்டு பார்க்கும்போது, அந்த பணியின் சில சம்பவங்களை நாம் தெளிவுபடுத்தி கொள்ளலாம்.

"கர்த்தர் மோசேயை நோக்கி - நீ ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து, வஸ்திரங்களையும் அபிஷேகதைலத்தையும், பாவநிவாரணபலிக்கு ஒரு காளையையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒருகூடையில் புளிப்பில்லா அப்பங்களையும் கொண்டு வந்து.."- (லேவி 8:1,2)

இந்த வசனத்தில் சொல்லப்பட்டவைகளை இரண்டு நிலைகளில் பிரிக்கலாம். முதலாம் நிலை ஏழு உருப்படிகளாக குறிப்பிடலாம்.

1. ஆரோன்

2. அவருடைய குமாரர்கள்

3. வஸ்திரங்கள்

4. அபிஷேக தைலம்

5. காளை

6. இரண்டு ஆட்டுக்கடாக்கள்

7. ஒரு கூடையில் புளிப்பில்லா அப்பங்கள்

ஏழு என்ற எண் பரிபூரணத்தையும், முழுமையையும் அடையாளப்படுத்துகிறது. முழு மனுக்குலத்தையும் தேவனிடத்தில் கொண்டுவந்து சேர்க்கும் பணிக்காக முழுமையாக தேர்ச்சி பெற்று, தகுதியடைந்த ஒரு ஆசாரியனை நியமிப்பதற்கு பிதாவாகிய யேகோவா தேவன் செய்த முன்னேற்பாடுகளின் முழுமையையும், பரிபூரணத்தையும் இந்த ஏழு உருப்படிகள் குறிப்பிடுகிறது என்று நாம் கருதலாம். தேவனை வழிபடுபவர்களை தேவனோடு இணைப்பதே - ஆசாரியனுடைய முக்கிய பங்கு.

சில உருப்படிகள் பன்மையில் பட்டியலிடப்பட்டிருக்கிறது. அதாவது இரண்டு ஆட்டுக்கடாக்கள், நான்கு குமாரர்கள். இந்த எண்களை நாம் கணக்கிடும் போது, வரும் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

1. ஆரோன்

2. நாதாப் (ஆரோனுடைய குமாரன் -1)

3. அபியு(ஆரோனுடைய குமாரன் -2)

4. எலியேசர் (ஆரோனுடைய குமாரன் -3)

5.இத்தாமர் (ஆரோனுடைய குமாரன் -4)

6. ஆரானுடைய வஸ்திரங்கள் (1)

7.நாதாபினுடைய வஸ்திரங்கள் (2)

8. அபியுவினுடைய வஸ்திரங்கள் (3)

9. எலியேசருடைய வஸ்திரங்கள் (4)

10. இத்தாமருடைய வஸ்திரங்கள் (5)

11. அபிஷேக தைலம்

12. ஒரு காளை

13. ஆட்டுக்கடா (1)

14. ஆட்டுக்கடா (2)

15. ஒரு கூடை புளிப்பில்லா அப்பங்கள்

இந்த உருப்படிகளின் கணக்கீடு மற்றொரு முக்கியமான எண்ணை நமக்கு கொடுக்கிறது. பதினைந்த என்ற எண் விடுதலையை அடையாளப்படுத்துகிறது. (நவம்-டிசம் 2004 ஹெரால்டை காண்க) மீண்டுமாக இதன் காரணமாக மனுக்குலத்தை பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் மீட்பதற்கு ஆசாரியத்துவத்தின் தனிப்பட்ட நபர்களே பொறுப்புள்ளவர்களாக இருப்பார்கள்.

" கர்த்தர் மோசேயை நோக்கி - நீ ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து..." என்று சொல்லப்படுகிறது. இங்கு ஆரோனுடைய பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது ஆனால் அவருடைய குமாரரின் நாமங்கள் சொல்லப்படவில்லை. நம்முடைய ஆண்டவராம் இயேசு, மீட்புக்காக நிஜமான பிரதான ஆசாரியரராக விசேஷித்த விதமாக, உலகம் தோன்றுவதற்கு முன்னே முன்குறிக்கப்பட்டு, நியமிக்கப்பட்டவர் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது. "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து...உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார். (1பேது 1:19-20, வெளி 13:8)

ஆனால் மற்ற ஆசாரியர்கள் நம்முடைய ஆண்டவரை போல தனிப்பட்ட முறையில் முன்குறிக்கப்படவில்லை. நாம் அனைவரும் தனிப்பட்ட முறையில் அல்ல, ஒரு வகுப்பாராக முன்குறிக்கப்பட்டிருக்கிறோம். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். நமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே..." (எபே 1:3,4)

நாம் பெற்றுகொண்டிருக்கும் இயேசுகிறிஸ்துவின் சாயலே நம்முடைய முன்குறித்தலை உறுதிப்படுத்தி, அவருடைய ஆசாரியத்துவத்தில் நம்மையும் ஒரு உறுப்பினராக தகுதிப்படுத்தும். "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்..." (ரோ 8:29)

செயல்முறையில் நாம் இயேசுவின் சாயலில் மாறவேண்டுமானால், முதலில் நம்முடைய சிந்தை, இருதயத்தின் எண்ணங்கள், அறிவாற்றல் மற்றும் குணலட்சணங்கள் உண்மையில் இயேசுவை போல் மறுரூபமாக்கப்படவேண்டும். "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்,....உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (குறிப்பு - "மறுரூபம்" என்ற வார்த்தை "மெத்தாமோர்பூ" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்படிருக்கிறது. புழுவிலிருந்து பட்டாம்பூச்சி வருவதின் செயல் முறையை இந்த வார்த்தை பொருள்படுத்துகிறது. நிஜமான ஆசாரியன் பூமிக்குரிய நிலையிலிருந்து, பரலோகத்திற்குரிய நிலைக்கு மாறுவதற்கு அவன் கடைபிடிக்கவேண்டிய காரியங்களை இந்த ஒரு செயல்முறை மிக அழகான எடுத்துகாட்டாக இருக்கிறது. ) அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். (1கொரி 15: 49,53) "... தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோ 12:2)

கிறிஸ்துவுக்காக நாம் அனுதினம் பலிசெலுத்துவதின் விளைவாக இந்த மறுரூபம் நடைபெறுகிறது. (ரோ 12:1) துவக்கத்தில் லேவியர்களின் ஆசாரியத்துவம் செலுத்தும் பலிகள் கீழ்காணும் அனைத்தையும் கொண்டிருந்தது.

"சபையெல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாகக் கூடிவரச்செய் என்றார். கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே மோசே செய்தான், சபை ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாகக் கூடின போது, மோசே சபையை நோக்கி - செய்யும்படி கர்த்தர் கட்டளையிட்ட காரியம் இதுவே என்று சொல்லி... " -லேவி 8:3-5

இஸ்ரயேலின் சேனையின் எண்ணிக்கை ஒரு மில்லியனை தாண்டியது. (யாத் 12:37) இவர்கள் அனைவரும் ஆசரிப்புக் கூடார வாசலில் எப்படிக் கூடியிருக்க முடியும்? ஒரு வேளை எல்லாருக்கும் பதிலாக

கோத்திர தலைவர்கள் அந்த சடங்குகளை கண்டு சாட்சி கொடுப்பதற்கு ஆசரிப்புக்கூடார வாசலில் வந்திருக்கவேண்டும் என கருதுகிறோம். இதை கண்டவர்கள் மற்றவரிடம் அறிவித்தார்கள்.

நாம் இந்த உலகத்தில் பயணிக்கும்போது, நம்முடைய ஆசாரிய வாழ்க்கை மற்றும் பலிகளை காணும் சாட்சிகள் நம்மை சுற்றியும் இருக்கிறார்கள். நம்மை சுற்றியுள்ள அனைவரும் நம்மை கவனித்துகொண்டிருக்கிறார்கள். அநேகர் ஆசாரியத்துவத்தை செயல் முறையில் கண்டுகொண்டிருப்பதை உணராதிருக்கிறார்கள். ஆனால் இந்த உலகம் நம்மை முதலில் பாராட்டினாலும், பின்பு பகைக்கிறது. ஆனால் நம்மை குறித்த அனைத்து சாட்சிகளும், நம்மை நிச்சயமாக நினைவில் கொண்டிருப்பார்கள். அவர்கள் கண்ட யாவையும் இராஜ்யத்தில் தொடர்புப்படுத்தி பார்ப்பார்கள். நாம் அனைவரும் ஆசாரியர்களாக செய்த வேலைகளை பின் வைத்து போகிறோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இவையனைத்தும் நம்முடைய நண்பர்களாலும், உறவினர்களாலும் மீண்டும் நினைவுக்குகொண்டுவரப்படும். ஒரு வேளை இதை சித்தரிப்பதற்காகவே மோசே அனைவரையும் அழைத்திருக்கலாம். (குறிப்பு -எண்ணாகமம் 11ம் அதிகாரத்தில் சாட்சியளிப்பதைப் பற்றி மற்றும் ஒரு காரியம், ஆசரிப்புக்கூடாரத்தின் பயணத்தின் போது எடுத்துசெல்லும் வஸ்திரங்கள் சித்தரிக்கிறது. ஆசரிப்புக்கூடாத்தை மற்றொரு இடத்தில் ஸ்தாபிப்பதற்காக எடுத்து செல்லும் பொழுது, வெண்கல தண்ணீர் தொட்டியை தவிர, ஒவ்வொரு தட்டுமுட்டு சாமான்களும், மற்ற எல்லாவற்றையும் அதன் அதன் சித்திரவேலைகள் மற்றவர்களின் பார்வைக்கு தெரியாதபடி மூடிவிடுவார்கள். பெரும்பாலான பொருட்கள் தகசு தோலினால் முடப்பட்டிருந்தது. நாம் மாம்சத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கையை இந்த உலகம் பார்த்துக்கொண்டிருப்பதை இது அடையாளப் படுத்திகிறது. ஆனால் உடன்படிக்கை பெட்டி தகசு தோலால் மூடப்பட்டு, அதற்கு மேல் நீல நிற ஆடையினால் மூடப்பட்டிருந்தது. உடன்படிக்கை பெட்டி மகிமையடைந்த சபையை அடையாளப்படுத்துவதினால், இந்த அடையாளங்களின் கலவை மிக தெளிவா கவுள்ளது. சபை மகிமையடைந்த பின் அவர்களின் மாம்சம் இனி ஒருபோதும் காணப்படுவதில்லை. ஆகவே இந்த நீலநிறத்தினால் மூடப்பட்டது மிக பொருத்தமாகவே இருக்கிறது. ஆனால் இந்த நீலநிறம் இந்த உலக பயணத்தில் பயணிக்கும் மாம்சத்தில் உள்ள சபையின் விசுவாசம் மெய்ப்பிக்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கையில் சந்திக்கும் அநேக தனிநபர்களால் பரிசோதிக்கப்பட்டு பிரதிபலிக்கப்படும் விசுவாசத்தை அடையாளப்படுத்துகிறது. இவர்களே ஆசாரியத்துவ பிரதிஷ்டையின் சாட்சிகள்.)

கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்து அவர்களை ஜலத்தினால் ஸ்நானம்பண்ணுவித்து.." -லேவி 8:6

சடங்காச்சாரமான இந்த ஸ்நானம், துப்பரவு மற்றும் தூய்மை ஆசாரியர்களின் ஏற்றுகொள்ளுதலை அடையாளப்படுத்தும். இயேசு பாவமில்லாதவராக இருந்ததினால் அவருக்கு எந்த சுத்திகரிப்பு தேவைப்படவில்லை. ஆனால், மனுஷனாகிய ஆரோன் அப்படிப்பட்டவர் அல்ல. ஆகவே நிஜத்திற்கு ஏற்றவாறு அவர் சுத்திகரிக்கப்படவேண்டியதாக இருந்தது. ஆரோனின் குமாரர்களும், நிஜமான சபையும், கட்டாயமாக சுத்திகரிக்கப்பட்டு, பிரதஷ்டை துவங்குமுன்னதாகவே அவர்கள் நீதிமான்களாக்கப்படவேண்டும்.

"அவனுக்கு உள்ளங்கியைப் போட்டு, இடைக்கச்சையைக்கட்டி, மேலங்கியை உடுத்தி, ஏபோத்தைத் தரித்து, அதின்மேல் ஏபோத்தின் விசித்திரமான கச்சையைக்கட்டி, அவனுக்கு மார்ப்பதக்கததை அணிந்து, மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்மீம் என்பவைகளையும் வைத்து, அவன் தலையிலே பாகையைத் தரித்து, பாகையின்மேல் அவன் நெற்றியிலே பரிசுத்த கிரீடம் என்னும் பொற்பட்டத்தை கட்டினான்." - லேவி 8:7-9

ஆரோனுப் அவனுயை குமாரர்களும் பிரதிஷ்டையின் போது அவர்களுடைய வஸ்திரங்களை கொண்டு வரவில்லை. மோசே அவைகளை கொண்டு வந்ததாக வாசிக்கிறோம். நம்முடைய பிரதஷ்டைக்காக தேவைப்படும் எல்லாவற்றையும் பிதாவாகிய யோகோவா தேவன் இயேசுவின் மூலம் நமக்களித்திருக்கிறார் என்பது இங்கு தெளிவாக காட்டுகிறது.

இதை தொடர்ந்து மோசே ஆரோனுக்கு அந்த மகிமையுள்ள வஸ்திரங்களை உடுத்துவித்தார். பொதுவாக பிரதான ஆசாரியன், பாவநிவாரண நாளின் பலிகள் செலுத்தப்பட்ட பின்பு, மகிமையானதும் அழகானதுமான இந்த வஸ்திரத்தை அணிந்துகொள்வது வழக்கமாக இருந்தது. (லேவி 16:23,24) ஆனால் இங்கு எந்த விதமான மிருகம் பலிசெலுத்துபடுவதற்கு முன் பிரதான ஆசாரியன் வஸ்திரங்களை அணிந்தது ஆச்சரியமாக இருக்கிறது. ஏன் இப்படி நடந்தது ?

இயேசு தனிப்பட்ட முறையில் தன்னை பிரதிஷ்டைசெய்தபோது, யோர்தானில், அவர் பரிசுத்த ஆவியால் ஜெனிப்பிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மகிமையுள்ள அழகான வஸ்திரம் கொடுக்கப்பட்டது. அதாவது அவர் பிரதான ஆசாரியனுடைய பொறுப்பை ஏற்றுகொண்டார் என்பது பொருளாகும். பாவநிவாரண நாளின் முடிவில் அவர் தன்னுடைய பலியை முழுமையாக செலுத்தினபின் அவர் அந்த பாத்திரத்திற்கு முழுமையான உரிமைக்காரராகிடுவார்.

நம்மை பொருத்தவரையில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இது உண்மையாகவே இருக்கிறது. தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு நாம் தனிப்பட்ட முறையில் ஒப்புகொடுக்கும் போது, நாம் தேவனுடைய குடும்பத்தினராக இருப்பதற்கு அடையாளமாக அவருடைய பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுகிறோம். பவுல் இதைப்பற்றி கூறும்போது, வருங்காலத்தில் நாம் அனைத்தையும் சுதந்தரிக்கும்படி இப்பொழுது பரிசுத்த ஆவியை முத்திரையாக பெற்றிருக்கிறோம் என்கிறார். (குறிப்பு - வருங்காலத்தில் நாம் பெறப்போகும் கிரீடத்திற்கு அநேக வாக்குத்தத்தங்கள் இருப்பினும், நாம் சுதந்தரித்திருக்கும் பரிசுத்தஆவியினாலே நாம் பரிசுகளை பெறுவோம் என்று குறிக்கிறது. இன்று மாம்சத்தில் நாம் பெற்றிருக்கும் உடைமைகளை பற்றி இந்த வேத பகுதி காட்டுகிறது - "இதோ, சீக்கிரமாய் வருகிறேன், ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.." (வெளி 3:11) அடுத்து லேவி 8ம் அதிகாரத்தில் ஆரோன் மற்றும் அவருடைய குமாரர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது மாம்சத்தில் இருக்கும் சபை ஜனங்களின் பிரதிஷ்டையின் சடங்குகள், சித்தரிக்கப்படுவது மற்றும் ஒரு கூடுதலான ஆதாரத்தை கொடுக்கிறது."நீங்கள் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார்." (எபே 1:13,14)

"பின்பு மோசே, அபிஷேகதைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்தி, அதில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுக்களையும், தொட்டியையும் அதின் பாதத்தையும் பரிசுத்தப்படுத்தும்படிக்கு அபிஷேகம் பண்ணி, அபிஷேகதைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிஷேகம்பண்ணினான்." - லேவி 8:10,12)

இந்த அபிஷேக தைலம், பழைய ஏற்பாட்டின் இஸ்ரயேல் ஜனங்களுக்கு சிறந்த பொருளாக இருந்திருக்கவேண்டும். அருமையான நறுமணம் வீசும் பொருட்களிலிருந்து பிழியப்பட்ட கலவை, ஒலிவ எண்ணையோடு சேர்த்து, ஆசரிப்புக்கூடாரத்தின் ஆன்மீக காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆசாரியர்களை தவிர வேறு எந்த மனுஷனும் இதை உற்பத்திப்படுத்தினால் தேசிய சட்டத்திற்கு விரோதமானதாக இருந்தது. (யாத் 30:33)

ஆசாரியத்துவம் நிலைநிறுத்தும் காலத்திற்கு முன்னதாகவே இந்த முழு ஆசரிப்புக்கூடாரம் நிறுவப்பட்டது. இயேசு தன்னுடைய முதல் வருகையில் பிரதான ஆசாரியரின் பணியை நிறைவேற்றுவதற்கு வருவதற்கு முன் நடந்த ஆயத்தவேலைகளை இவைகள் அடையாளப்படுத்துவதாக கருதப்படுகிறது. நிஜமான ஆசாரிப்புக்கூடாரம் அமைப்பதற்கான ஆயத்தவேலைகள் இயேசுவுக்குமுன், அவருடைய வரலாற்றை எடுத்துக்காட்டுகிறது. ஏனெனில், "உலக தோற்றத்திற்கு முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி...." (வெளி 13:8)

இப்படியாக, பிரதான ஆசாரியன் மற்றும் அவருக்கு கீழ் பணிபுரியும் ஆசாரியர்கள் பிரதிஷ்டை செய்யும் காலம் வரும்போது, சகலமும் நன்மையான வரிசையில் நடந்தது. (யாத் 40:13-15, எண் 3:3)

ஆகவே மோசே ஆசரிப்புக்கூடாரத்தை அபிஷேகித்தபின் ஆரோனிடத்தில் வந்து அவருடைய தலையின் மேல் எண்ணை வார்த்தார். இங்கு இரண்டு அபிஷேகங்களை பற்றி விவரிக்கப்படுகிறது. லேவி 8 :10-12 ல் முதல் அபிஷேகத்தை பற்றியும், லேவி 8: 30ல் இரண்டாவது அபிஷேகத்தைப் பற்றி சொல்லப்படுகிறது.

அபிஷேக தைலம் தேவனுடைய பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகிறது. அவருடைய தெய்வீக வல்லமை அவருடைய சித்தத்தை நிறைவேற்ற பயன்படுத்தப்படுகிறது. இதில் ஆரோன் முழு ஆசாரியத்துவத்தையும் அடையாளப்படுத்துகிறார் - தலை மற்றும் சரீரம். சங்கீதம் 133 இந்த செயல் முறையை மிக துல்லியமாக விவரிக்கிறது. "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது ? அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்... ஒப்பாயிருக்கிறது. " (சங் 133 1,2)

தலை அபிஷேகம் பண்ணப்பட்டது, அந்த எண்ணை சரீரம் முழுவதுமாக நனைத்தது. தேவனை அடையாளப்படுத்தும் மோசே இங்கு அபிஷேகிக்கிறார். ஆரோனுக்கு கீழ் உள்ள ஆசாரியர்களின் அபிஷேகத்தை பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. இப்படியாக, பிரதான ஆசாரியருக்கு ஊழியம் செய்யும் ஆசாரியர்கள், தனித்தனியாக அபிஷேகிக்கப்படுகிறதில்லை என்பது தெளிவாகிறது. ஆகவே, நாம் ஏற்றுகொள்ளப்பட்டு, இயேசுவின் சரீரத்திற்கு அங்கங்களாகும் போது மட்டுமே, அந்த அபிஷேகத்திற்கு நாமும் பங்காளிகளாக முடியும்.

"பின்பு மோசே கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, ஆரோனின் குமாரரை வரவழைத்து, அவர்களுக்குஅங்கிகளை உடுத்தி, இடைக்கச்சைகளைக் கட்டி, குல்லாக்களைத் தரித்து. ." - லேவி 8:13

மீண்டுமாக ஆசாரியர்கள் நிறைவேற்றவேண்டிய பொறுப்புகளுக்கு தேவைப்பட்டவைகளை தேவன் கொடுக்கிறார்.

"பாவநிவாரண பலிக்கான காளையைக் கொண்டுவந்தான், அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்." - லேவி 8:14

காளையின் பலியின் நிழல்களில் இயேசுவை தவிர வேறு எந்த காரியத்தையும் காண்பது அரிது. ஆனால் இந்த சூழ்நிலையில் இது எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. ஆரோனும் அவருடைய குமாரர்களும் காளையின் தலையின் மேல் கரங்களை வைத்தார்கள். ஆகவே, இங்கு சபையும் காளையை அடையாளப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. காளை பரிப்பூரண மனுஷனை அடையாளப்படுத்தும் பட்சத்தில், ஆரோனின் குமாரர்கள் மாம்சத்தில் உள்ள சபையை அடையாளப்படுத்துவது விநோதமான ஒரு காரியமாக இருக்கிறது. உண்மையில், பரிபூரணமான இயேசு மற்றும் மாம்சத்தில் அபூரணமாக இருக்கும் சபை ஜனங்களை வித்தியாசப்படுத்தி அவைகளை பற்றி புரிந்துகொள்வதற்காக லேவி 16ம் அதிகாரத்தில் இரண்டு பலிகளைப் பற்றி சொல்லப்படுகிறது. ஒன்று காளை மற்றொன்று ஆட்டுக்கடா. இந்த காளையில் சபையை எவ்வாறாக அடையாளம் கண்டுகொள்வது ?

சபை மாம்சத்தில் செலுத்தும் பலிகள் அனைத்தும் ஏற்றுகொள்ளப்படுவதும் ஏற்றுகொள்ளப்படாததும் இயேசுவையே சார்ந்திருக்கிறது என்ற காரியத்தை எடுத்துக்காட்டும் நிழல்களில் இது ஒரு முக்கியமான கோட்பாடாக இருக்கிறது. (எபே 1:6) எல்லா சிறப்புகளும் அவருக்குள் இருக்கிறது. நாம் அவரோடுக்கூட கணக்கிடப்படுவதற்கு சிறப்புரிமை பெற்றிருந்தாலும், இயேசுவின் பலி தனித்துவம் வாய்ந்தது. இதை தவிற நாம் எதையும் கூட்டமுடியாது. இப்படியாக நாம் கிருபை பெற்ற வகுப்பாராக இருக்கிறோம். நாம் இதை பெற அபாத்திரராக இருக்கிறோம். நாம் ஆசாரியரர்களாக அழைக்கப்பட்டு, இயேசுவோடுகூட பலிசெலுத்தி, அவரோடுக்கூட உழைத்து, பாவநிவாரண பலியின் ஒரு பகுதியாக இருக்கும் சிறப்புமை பெற்றதை இந்த நிழல் நமக்கு போதித்தாலும், - (தலை மற்றும் சரீரம்) - தேவனுக்கு முன் இயேசுவே மதிப்பை பெறுகிறார்.

இந்த வசனத்தை குறித்து மற்றுமோர் கருத்து - இந்த காளை எங்கிருந்து வந்தது ? ஆரோன் அதை கொண்டுவந்தாரா ? இல்லை. இஸ்ரயேல் ஜனங்கள் இதை கொண்டுவந்தார்களா ? இல்லை. மோசே கொண்டுவந்தார். பலிகளுக்கு தேவையான அனைத்தும் தேவன் கொடுத்திருக்கிறார் என்பதை காட்டுகிறது. ".. அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது, பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர். " (எபி 10: 5)

"அப்பொழுது அது கொல்லப்பட்டது, மோசே அதின் இரத்தத்தை எடுத்து, தன் விரலினால் பலிபீடத்தின் கொம்புகளின்மேல் சுற்றிலும் பூசி, பலிபீடத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, மற்ற இரத்ததைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றிவிட்டு, அதின்மேல் பாவநிர்த்தி செய்யும்பொருட்டு அதைப் பரிசுத்தப்படுத்தினான்." - லேவி 8:15

இயேசுவை யார் கொன்றது ? அவரை சிலுவையில் அறைந்த ரோமர்கள் என்று நாம் சொல்லலாம் அல்லது யூதர்கள் என்றும் சொல்லலாம் அல்லது இயேசு தாமே இந்த மரணநிலைக்கு தன்னை முழுவிருப்பத்தோடு ஒப்புக்கொடுத்தா என்றும் நாம் சொல்லலாம். இவையணைத்தும் உண்மையாக இருந்தாலும், மற்றும் ஒரு பதிலை சேர்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம் - தேவன் இயேசுவை ஒப்புக்கொடுத்தார். மோசே அந்த காளையை கொன்றபோது, ஆரோனும் அவருடைய குமாரர்களும் பணிவாக அவர் அருகில் நின்ற ஒரு காரியம், மேல் சொல்லப்பட்டதை குறிப்பிடுகிறது. இதில் நாம் ஆச்சரியப்படுவதற்கு இடம் இல்லை ஏனெனில், இரட்சிப்பின் நூலாசிரியர் நம்முடைய பிதாவாகிய தேவனும், உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியுமாக நம்முடைய ஆண்டவராம் இயேசு இருக்கிறார்கள். நம்முடைய பிதாவாகிய தேவன் தாமே பாவமான மனுக்குலத்திற்கு பூரிபூரணமான பலி தேவை என்று முன்னறிந்து, தன்னுடைய ஒரே பேரான குமாரனை பலியாக மரிக்க ஒப்புக்கொடுத்தார். ஆகவே நம்முடைய யேகோவா தேவன் தம்முடைய குமாரனை "நம்முடைய இரட்சகர்" என்று அழைக்கிறார்.

"... ஏனெனில் எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்." (1தீமோ 4:10, யூதா 25, தீத்து 3:4, 2:10, லூக்க 1:47, 1தீமோ 2:3)

காளையின் இரத்தத்தில் கொஞ்சத்தை எடுத்து பலிபீடத்தின் நான்கு கொம்புகளிலும் மோசே பூசினார். கொம்புகள் வல்லமையை அடையாளப்படுத்துகிறது. மிக பெரிய கொம்புடைய மிருகம் மிகவும் பலமாக இருக்கும். பழங்காலத்தில் படைவீரர்கள் தங்களுடைய வல்லமையை வெளிப்படுத்தி, தங்களுடைய எதிராளிகளை பயமுறுத்துவதற்காக தங்களுடைய தலைசீராக்களின் மேல் இந்த கொம்புகளை பொருத்திகொள்வது வழக்கமாக இருந்தது. ஆகவே பலிபீடத்தின் கொம்புகள் பலிபீடத்தின் வல்லமையை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் அந்த பலிபீடம் வல்லமையால் நிரப்பப்படவேண்டும். ஏனெனில் அநேக பலிபீடங்கள் கட்டப்பட்டாலும், அதில் செலுத்தப்படுகிற அனைத்து பலிகளையும் தேவன் அங்கீகரித்து விடுவார் என்று எண்ணுவது தவறு. அதில் பூசப்படும் காளையின் இரத்தமே அந்த பலிபீடத்திற்கு வல்லமையை அனுமதித்து, அதற்குபின் செலுத்தப்படும் பலிகளும்

அங்கிகரிக்கப்பதற்கு வழிவகுக்கிறது. பரிபூரண மனிதனாகிய இயேசுவின் இரத்தமே தேவனுக்கேற்ற பலிகளை செலுத்துவதற்கு அந்த பலிபீடத்தை திறக்கக்கூடியதாக இருக்கிறது.

மீதியுள்ள காளையின் இரத்தம் பலிபீடத்தின் அடியில் பூமியின் மேல் ஊற்றப்பட்டது. மனிதனுடைய பாவத்தினால் சபிக்கப்பட்ட பூமியை, அதனுடைய சாபத்திலிருந்து இயேசுவின் இரத்தம் மீண்டும் கிரையத்திற்கு கொள்ளும். (ஆதி 3:17, 5:29) ஆகவே ஜனங்கள் மற்றும் இந்த பூமி இருவரும் அவருடைய இரத்தத்தினால் இரட்சிக்கப்படுவார்கள்.

"பின்பு மோசே, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, குடல்கள்மேல் இருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேல் இருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின்மேல் தகனித்து, காளையையும், அதின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரித்தான்." - லேவ 8:16,17

அந்த பலிபீடம் அதிகாரப்பூர்வமாக அங்கிகரிக்கப்பட்டபின் அதின் மேல் செலுத்தப்படும் முதல் பலி - காளையின் கொழுப்பு (வைராக்கியம்) மற்றும் ஜீவனை தரக்கூடிய உள்ளுறுப்புகள் (சிறப்பான திறமைகள்).புகை மேலே எழும்புவதினால், தகனபலிகள் செலுத்தப்படும் அந்த பலிபீடத்தின் மேல் வைக்கப்பட்ட அனைத்தையும் தேவன் அங்கிகரித்தார் என்று காட்டுகிறது. (குறிப்பு - லேவி 8:16ம் வசனத்தில் "தகனிக்கப்படும்" என்ற வார்த்தைக்கு "சுகந்தவாசனை" என்று சொல்லப்படுகிறது) ஆகவே, பொதுவாக தகன பலிகள் தேவனால் ஏற்றுகொள்வதை காட்டுகிறது. ஏனெனில் பலிபொருள் முழுவதுமாக எரிந்து அதன் புகை மேலே செல்லுகிறது. "சர்வாங்க தகனபலி" என்பதற்கும் இதுவே பொருள். (சங்கீ 51:19) இது முழுமையாக எரிக்கப்படுகிறது. (குறிப்பு - இந்த சொற்றொடர், ஒலோகௌட்டோமேட்டா என்ற ஒரே கிரேக்க வார்த்தையிலிந்து மொழிபெயர்க்கப்பட்டது. இதிலிருந்து வரக்கூடிய ஆங்கில வார்த்தை - " holocaus". (எபி 10: 6,8)

அர்ப்பணிப்பின் எந்த நிலை தேவனுக்கேற்றதாக இருக்கும் என இந்த நிழல் நமக்கு கற்பிக்கிறது. நாம் நம்முடைய அன்றாட பலியின் ஜீவியத்தில், தேவனுடைய ஆராதனையில் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டால், இவ்விடத்தில் நம்முடைய பலிபொருத்தமானதாக இருக்கும். நம்முடைய தாலந்துகளை அவருக்காக கொடுப்பதற்கு வைராக்கியத்தோடிருந்தால், நம்முடைய வைராக்கியம் என்னும் கொழுப்பு மிக பிரகாசமாக தகனிக்கப்படும். நம்முடைய காலம், சொத்து, பலம், நம்முடைய ஞானம் அனைத்தையும் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அவருக்கென்று ஒழுங்காக ஒப்புக்கொடுத்தால், நாமே முழுமையான பலியாக ஒப்புகொடுத்துவிட்டோம். தத்தம் செய்த அனைவரும் இக்கேள்விகளை தங்களுக்குள்ளே கேட்கக்கடவோம் - "என்னுடையவைகள் அனைத்தும் பலிபீடத்தின் மேல் உள்ளதா?" நமக்கு உண்டான யாவற்றிலும் கொஞ்சம் குறைந்தாலும் அதை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை.

காளையின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியிலே சுட்டெரிக்கப்பட்டது. எரியும் மாம்சம் மற்றும் மயிரின் மணத்தை நீங்கள் முகர்ந்திருந்தால், அதன் துர்நாற்றத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள். தேவனால் ஏற்றுகொள்ளப்பட்ட அதே பரிசுத்தமான பலி இந்த உலகத்தால் எவ்வாறு பார்வையிடப்படுகிறது என்பதை பாளையத்தில் எரியும் துர்நாற்றம் அடையாளப்படுத்துகிறது. முடி பொசுங்குவதை போல இந்த பலிகளையும் அவர்களுக்கு அருவருப்பாக தோன்றுகிறது. ஜனங்கள் மதரீதியாக தங்களுடைய ஜீவனை அர்ப்பணிப்பது எவ்வளவு ஞானமுள்ள காரியம் என்று ஜனங்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. நேரம் மற்றும் தாலந்துகளின் பரிதாபமான விரயம் என்று நினைத்துகொண்டிருக்கிறார்கள்.

பின்பு அவன் சர்வாங்க தகனபலிக்கு ஆட்டுக்கடாவைக் கொண்டுவந்தான், அதின் தலைமேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அது கொல்லப்பட்டது. மோசே அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்தான். ஆட்டுக்கடா சந்து சந்தாகத் துண்டிக்கப்பட்டது, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, மோசே அதின் தலையையும் துண்டங்களையும் கொழுப்பையும் தகனித்தான். குடல்களையும் தொடைகளையும் தண்ணீரால் கழுவினபின், மோசே ஆட்டுக்கடா முழுவதையும் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கான சர்வாங்க தகனபலியாகத் தகனித்தான்." - லேவி 8:18-21

ஆட்டுக்கடா பலிபொருளாக இருப்பதினால், தேவனுடைய அங்கீகரிப்பை பெற்றிருக்கிறது என்ற பொருளை உணர்த்துகிறது. அவர்களின் பலிக்கு அடையாளமாக மீண்டும், ஆரோனும் அவனுடைய குமாரர்களும் அவர்களின் கைகளை அதன் மேல் வைத்தார்கள். அவர்களுடைய இந்த துவக்கத்தை தேவனுடைய கண்ணோட்டத்தில் அங்கிகரிக்கப்படுகிறது.

மோசே ஆட்டுக்கடாவை சந்து சந்தாக துண்டித்து, அதன் கால்களையும், உள்புறத்தையும் கழுவினார் ஆனால் அதனுடைய தலையை அவர் கழுவவில்லை. இங்கு இயல்பாக சபை அபூரணமாக இருப்பதையும், இயல்பாக இயேசு பூரணமாக இருப்பதையும் இது குறிப்பிடுகிறது. ஆட்டுக்கடாவின் தலை இயேசுவை அடையாளப்படுத்துவதினால் சுத்திகரிக்கப்படவேண்டிய அவசியமில்லாதிருந்தது. அவர் குற்றமில்லாத பரிபூரண மனுஷனாக இருந்தார்.

(1பேதுரு 1:19) ஆனால் ஆட்டுக்கடாவின் சரீரமாகிய சபை அபூரணமாக இருப்பதினால், அவைகளை ஏற்றுகொள்ளப்படுவதற்காக அது சுத்திகரிக்கப்பட வேண்டியதாக இருந்தது.

"பின்பு பிரதிஷ்டைப்படுத்துவதற்குரிய மற்ற ஆட்டுக்கடாவைக் கொண்டுவந்தான், அதின் தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள். பின்பு அது கொல்லப்பட்டது, மோசே அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆரோனுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரலிலும் வலதுகாலின் பெருவிரலிலும் பூசினான். பின்பு ஆரோனுடைய குமாரரையும் அழைத்தான், மோசே அந்த இரத்தத்திலே கொஞ்சம் அவர்களுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரலிலும் வலது காலின் பெருவிரலிலும் பூசி, இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து..." - லேவி 8:22-24)

இரண்டாவது ஆட்டுக்கடா பிரதிஷ்டை பண்ணவேண்டிய ஆட்டுக்கடா என்று குறிப்பிடப்பட்டது. இந்த பலி, சபை மற்றும் கிறிஸ்துவின் மேலும் மற்ற அனைத்து பலிகளினால் வரும் பயன்களை காட்டுகிறது. இயேசு நமக்காக செலுத்தின பலியை நாம் புரிந்துகொண்டு மதிப்பிட்டால், இந்த நிழலில் சொல்லப்பட்டவைகளின் நிஜமான மூன்று காரியங்களை செய்ய உந்தப்படுவோம். ஆரோன் மற்றும் அவருடைய குமாரர்களுக்கும், அவர்களின் வலது காது மடல்களில், வலது பெருவிரல்களில், வலது கால்களின் பெருவிரல்களில் இரத்தம் பூசப்பட்டது. இந்த உறுப்புகளை நாம் அடையாளமாக ஒப்பிட்டுபார்ப்போம்.

## வலது காது -

தேவனையும் அவருடைய சத்தியங்களையும் கேட்பதற்கு நம்முடைய செவிகளை அர்ப்பணிப்பது. தேவன் அவருடைய வார்த்தைகளின் வழியாகவும், சகோதரர்கள் வழியாகவும், அனுபவங்களின் வழியாகவும் இன்னும் நாம் எதிர்பார்க்காத வழிகளிலும் அவர் நம்மோடு பேசுகிறார். தேவனுடைய வார்த்தைகள் எந்தவிதமான வழிகளில் வந்தாலும், அதை அடையாளம் கண்டுகொள்வதற்கு கேட்கிற காதுகளை நாம் பெற்றிருக்கவேண்டும்.

## வலது கரத்தின் பெரும் விரல் -

தேவனுடைய வேலைகளை அர்ப்பணிப்போடு செய்தல். நாம் அனைத்தையும் தேவனுடைய மகிமைக்காக செய்யவேண்டும் என்றிருந்தாலும், நாம் அன்றாட செய்யும் அனைத்து வேலைகளும் தேவனுடையது அல்ல. ஆனால் நம்முடைய இந்த உலகத்திற்கான கடைமைகள் முடித்தவுடன், மிஞ்சியிருக்கும் நேரம் நம்முடைய தேவனுடைய வேலைகளுக்கே உரியது. நாம் தேவனுக்காக இன்னும் அதிகமான வேலைகளை செய்ய கவனத்தோடு வாய்ப்புகளை தேடவேண்டும். தேவனுடைய ஜனங்களுக்கு செய்யப்படும் வேலை தேவனுக்கென்று வேலை செய்வதாக கணக்கிடப்படும். ஆகவே இப்படிப்பட்ட அர்ப்பணிக்கப்பட்ட வேலைகளை செய்வதற்கான வாய்ப்புகளை தேடுவதற்கு நாம் அனைவரும் ஊக்குவிக்கப்படவேண்டும்.

## வலது காலின் பெரும் விரல்

தேவனுடைய சத்தியத்தில் அர்ப்பணிக்கப்பட்ட நடத்தை. நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட நடக்கை - விசுவாசத்தின் நடக்கையாக இருக்கிறது. இராஜ்யத்தின் தரிசனம் மற்றும் தினந்தோறும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நினைவுகூறுவதே, நம்முடைய நடத்தையின் ஒரு பகுதியாக இருக்கிறது. நம்மை போல் நடக்கும் சகோதரர்களோடு நாம் கொள்ளும் ஐக்கியம் நம்மை அந்த பாதையில் நடக்க அதகமாக ஊக்குவிக்கும். நம்முடைய விசுவாசத்தின் நடத்தை, ஆராதனையின் மிகுந்த சிறப்புரிமைகளை நமக்கு கொடுக்கும். நாம் இடுக்கமான பாதையில் நடக்கும்போது, நம்முடைய கண்களை இயேசுவின் மேல் பதித்துவிட்டு அவரை பின்பற்றுகிறோம். இப்படிப்பட்ட ஆவிக்குரிய பயணங்கள் நம்முடைய தத்தம் செய்யப்பட்ட வாழ்க்கையில் ஐசுவரியமுள்ள ஆசீர்வாதத்தை கொடுக்கும்.

இப்படியாக, பிரதிஷ்டைபண்ணப்பட்ட ஆட்டுக்கடா, தத்தம் செய்யப்பட்ட வாழ்க்கை எதை அடிப்படையாக கொண்டுள்ளது என்றும் தத்தம் செய்யப்பட்டதினால் வரும் பலன்களை அநுதின வாழ்கையில் எவ்வாறு பிரதிபலிக்கவேண்டும் என்றும் நமக்கு மிக ஆழகான, செயல் பூரவமான பாடத்தை கற்றுகொடுத்திருக்கிறது: நம்முடைய தத்தம் செய்யப்பட்ட வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும், இயேசுவின் இரத்தத்தில் உள்ள பரிசுத்தமான ஆவியைக் குறித்த ஆழமான சிந்தனைகளை கொண்டிருக்கவேண்டும்.

பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஆட்டுக்கடாவின் இரத்தத்தை கொஞ்சம் எடுத்து பலிபீடத்தை சுற்றி மோசே தெளித்தார். அர்ப்பணிக்கப்பட்ட சபையின் கிரியைகள் அவர்களை மட்டும் சுத்திகரிக்காமல், அவர்களை சுற்றியுள்ள காரியங்களையும் சுத்திகரிக்கிறது. நாம் தேவனை சேவிக்கும்போது, இந்த பூமிக்கு உதிவகளை செய்யமுடியாது ஆனால் அதற்கு சாதகமான காரியங்களை அனுமதிக்கலாம்.. (மத் 5:13-16)

கொழுப்பையும், வாலையும், குடல்கள் மேலிருந்த கொழுப்பு முழுவதையும், கல்லீரலின்மேலிருந்த ஜவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும், வலது முன்னந்தொடையையும் எடுத்து, கர்த்தருடைய சந்நிதியில் வைத்திருந்த புளிப்பில்லா அப்பங்களின் கூடையிலுள்ள புளிப்பில்லா அதிரசத்தில் ஒன்றையும், எண்ணெயிட்ட அப்பமாகிய அதிரசத்தில் ஒன்றையும், ஒரு அடையையும் எடுத்து அந்தக் கொழுப்பின்மேலும் முன்னனந்தொடையின்மேலும் வைத்து, அவைகளையெல்லாம் ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் அவன் குமாரருடைய

உள்ளங்கைகளிலும் வைத்து, அசைவாட்டும் பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டி.." - லேவி 8:25-27)

மோசே எல்லா பொருட்களையும் ஒரு தட்டில் எடுத்து வைத்திருக்கவேண்டும். அந்த தட்டை ஆரோனும் அவருடைய குமாரர்களின் கைகளிலும் கொடுத்து, அந்த பலி பொருட்களை அசைவாட்டும் பலியாக அசைவாட்டும்படி சொல்லியிருக்கவேண்டும். அசைவாட்டும் பலி ஒரு விநோதமான பலியாக இருக்கிறது. அவர்களின் கைகள் அசைந்து கொண்டே இருந்தது. எவ்வளவு நேரம் இப்படி அசைவாட்டினார்கள் ? இதைப் பற்றி வசனங்கள் எதுவும் குறிப்பிடவில்லை. அவர்கள் சோர்ந்து போகும் வரைக்கும் அசைவாட்டியிருக்கவேண்டும். இந்த அசைவாட்டும் பலி எவ்வளவு நேரம் கைகளில் இருக்கவேண்டும் என்றும் அந்த கைகள் எவ்வளவு நேரம் அசைவாட்டப்படவேண்டும் என்றும் மோசே மட்டுமே தீர்மானித்தார்.

நம்முடைய தத்தம் செய்யப்பட்ட வாழ்க்கையில் நம்மால் முடிந்த மட்டும் செய்யக்கூடிய திறமையான தொடர் செயல்களை இந்த அசைவாட்டும் பலி குறிப்பிடுகிறது. நம்முடைய பலிக்கான பொருட்களை அந்த தட்டில் வைக்கப்பட்டிருக்கும் உருப்படிகள் காட்டுகிறது. நம்முடைய அனுதின பலிகளுக்காக நாம் அர்ப்பணிக்கும் நம்முடைய வாழ்க்கையை, பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆட்டுக்கடாவின் தனித்தனி உறுப்புகள் அடையாளப்படுத்துகிறது.

மூன்று விதமான அப்பங்கள் நமக்கு மற்றொரு பாடத்தை கற்பிக்கிறது. இதன் இணையான வேத பகுதியில்(யாத் 29:2), கூடுதலான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. " புளிப்பில்லா அப்பத்தையும், எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளையும் கோதுமையின் மெல்லிய மாவினால் பண்ணி.."

முதலில் புளிப்பில்லா அப்பங்களைப் பற்றி சொல்லப்படுகிறது. புளிப்பு பாவத்தை அடையாளப்படுத்துகிறது. புளிப்பில்லா அப்பங்கள் பாவமில்லாத நிலையை காட்டுகிறது. ஆகவே இந்த புளிப்பில்லா அப்பம் கிறிஸ்துவுக்குள் நாம் பெற்ற நீதிமானாக்கப்பட்ட நிலைமையை குறிக்கிறது. இது தேவனுடைய சுத்த கிருபையினால், இயேசுவின் இரத்தத்தின் மூலமாக நமக்கு அருளப்பட்டது.

இரண்டாவது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லா அதிரசங்களைப் பற்றி சொல்லப்படுகிறது. பரிசுத்த ஆவியினால் (எண்ணை) ஜெனிப்பிக்கப்படுவதின் மூலம் நம்முடைய சுத்திகரிப்பு துவங்குகிறது என்பதை எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத இந்த அதிரசங்கள் மிக அழகாக காட்டுகிறது.

கடைசியாக எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லா அடைகளைப் பற்றி சொல்லப்படுகிறது. இதுவும் புளிப்பில்லா அப்பமாக இருக்கிறது. ஆனால் இது மிகவும் மெலிதானதாக இருந்தது. அதன்மேல் பூசப்பட்ட எண்ணையினால் அது ஓரளவிற்கு ஒளியை ஊடுருவி பாய செய்யக்கூடியதாக இருந்திருக்கவேண்டும். ஒருவர் எந்த தடையும் இன்றி அதன் வழியாக எளிதில் வெளிச்சத்தை கண்டிருக்கலாம். நம்முடைய வருங்கால மகிமையின் நம்பிக்கையை இந்த அப்பத்தின் குணங்கள் அடையாளப்படுத்துவதாக கருதலாம். இந்நாள் வரைக்கும் ஆசாரியர்களின் ஒரு பகுதி மாம்சத்தில் இருப்பதினால் இது முழுமையான மகிமையை அடையாளப்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் இந்த மகிமையை பெறுவதற்கான நம்பிக்கைக்கு, நாம் பெற்றிருக்கும் விலையேறபெற்ற வாக்குறுதிகள் நமக்கு அநுதினமும் வல்லமையை தருகிறது. இந்த வாக்குத்தத்தங்களின் தெளிவான விளக்கங்களும், குறிப்புகளும் இப்போது மங்கலாக காணப்பட்டாலும், அதின் வழியாக வெளிச்சம் நமக்கு அதிகமான நம்பிக்கையை கொடுக்கிறது.

"பின்பு மோசே அவைகளை அவர்கள் உள்ளங்கைகளிலிருந்து எடுத்து, பலிபீடத்தின் மேலிருக்கிற தகனபலியின்மேல் தகனித்தான், அவைகள் சுகந்த வாசனையான பிரதிஷ்டைப் பலிகள், இது கர்த்தருக்குத் தகனபலியானது. " - லேவி 8:28

மோசே அவர்களின் கைகளிலிருந்த பலிபொருட்களையும் எடுத்து, பலிபீடத்தின் மேல் தகனித்தார். இப்படியாக நம்முடைய பலிகள் அவரை பிரியப்படுத்தும் நேரம் வரும்போது அதை ஏற்றுகொள்ளகிறார். நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில், தேவன் "போதும்" என்று சொல்லும் வரை தொடர்ந்து நாம் பலி செலுத்தி கொண்டே இருக்கவேண்டும். நாம் எந்த சூழ்நிலையிலும் நாம் செலுத்திக்கொண்டிருக்கும் பலிகளை நிறுத்தவோ, அதிலிருந்து சற்று இளைப்பாறவோ கூடாது. இதற்கான அதிகாரமும் நமக்கு கொடுக்கப்படவில்லை. நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளும், சவால்களும், தேவனுக்கென்று ஏறெடுக்கப்படும் பலிகளை எந்த விதத்திலும் தடுத்துவிடக்கூடாது. தேவன் நமக்கனுமதிக்கும் பாரங்கள் நம்மை அதிகதிகமாக உறுதிப்படுத்தும் என்பதை அவர் அறிந்திருக்கிறார். சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும் சரி, நாம் தேவனுக்கு பலி செலுத்துவதில் என்னென்ன காரியங்கள் முடியுமோ, அவைகளை விடாமுயற்சியோடு தொடர்ந்து நீடிய பொறுமையோடு நடப்பிக்கவேண்டும். நம்மால் செய்யமுடியாத காரியத்தை தேவன் என்றுமே நம்மிடம் எதிர்பார்ப்பதில்லை. குறித்த காலம் வரும்போது, தேவன் நம்முடைய பலிகளை சுகந்த வாசனையாக ஏற்றுகொண்டு, "என்னிடம் மேலே வாரும்" என்று அழைத்துகொள்வார். அப்போது நாம் முழுமையான இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்போம்.

"பின்பு மோசே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாடும்

பலியாக அசைவாட்டினான். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே அது மோசேயின் பங்காயிற்று. மோசே அபிஷேகதைலத்திலும், பலிபீடத்தின்மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும், அவன் குமாரர்மேலும், அவர்கள் வஸ்திரங்கள்மேலும் தெளித்து, ஆரோனையும் அவன் வஸ்திரங்களையும், அவன் குமாரரையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தப்படுத்தினான்." - லேவி 8:29,30)

மீதியிருந்த இரத்தம் கொஞ்சம் தைலத்தோடு கலக்கப்பட்டு, ஆரோனும் அவனுடைய குமாரர்களின் வஸ்திரங்களின் மேல் தெளிக்கப்பட்டு அவைகள் சுத்திகரிக்கப்பட்டது. முதலில் அவர்களை கழுவி சுத்திகரிக்கும் போது அதில் இரத்தம் இருக்கவில்லை. முதலில் சுத்திகரிக்கப்பட்டது ஒரு துவக்கமாக இருந்தது. ஆனால் இங்கு உலக தோற்றதிற்கு முன் அடிக்கப்பட்ட ஆட்டின் இரத்தத்தினாலும்,தேவனுடைய பரிசுத்த ஆவியினாலும் முழுமையாக சுத்திகரிக்கப்பட்டது. அதற்குபின் மோசே அசைவாட்டும் பலியை எடுத்துகொண்டார். பரிசுத்தவான்கள் மாம்சத்தில் பூரணப்படுவதை இது காட்டுகிறது.

"பின்பு மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் நோக்கி - நீங்கள் அந்த மாம்சத்தை ஆசரிப்புக் கூடார வாசலிலே வேவித்து, ஆரோனும் அவன் குமாரரும் அதைப் புசிப்பார்களாக என்று கட்டளையிட்டிருக்கிறபடியே, அங்கே அதையும் உங்கள் பிரதிஷ்டைப் பலிகளுள்ள கூடையில் இருக்கிற அப்பத்தை புசித்து, மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியிலே சுட்டெரித்து..." - லேவி 8:31,32

தனிநபர்கள் தேவனுடைய சத்தியத்தின் ஒவ்வொரு பகுதியாக படித்து புரிந்துகொள்வதை - பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஆட்டின் மாம்சத்தையும் அப்பத்தையும் புசிப்பது எடுத்துக்காட்டுகிறது. நாம் எதைபுசித்தாலும், அதை உட்கொண்டு நமக்குள் ஒரு பகுதியாக தக்கவைத்துகொள்வோம். சத்தியத்தையும் இப்படியாகவே நாம் உட்கொள்ளவேண்டும். பிரதிஷ்டையை பொருத்தவரையில், தேவனுடைய சித்தத்தை செய்வதில் இந்த நிழல்களில் நம்மையே பொருத்தி பார்க்க கற்றுகொள்ளவேண்டும்.

"பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும்வரைக்கும், ஏழுநாள் ஆசரிப்புக் கூடாரவாசலை விட்டுப் புறப்படாதிருங்கள், ஏழுநாளளவும் நீங்கள் பிரதிஷ்டைப்படுத்தப்படுவீர்கள். இன்று செய்ததுபோல, உங்கள் பாவநிவர்த்திக்காக இனிமேலும் செய்யவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார். நீங்கள் சாகாதபடிக்கு ஏழுநாள் இரவும் பகலும் ஆசரிப்புக் கூடாரவாசலிலிருந்து, கர்த்தருடைய காவலைக் காக்கக்கடவீர்கள், இப்படி நான் கற்பிக்கப்பட்டேன் என்றான். கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளையிட்ட எல்லாக் காரியங்களையும் ஆரோனும் அவன் குமாரரும் செய்தார்கள்." - லேவி 8 : 33- "பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும்வரைக்கும், ஏழுநாள் ஆசரிப்புக் கூடாரவாசலை விட்டுப் புறப்படாதிருங்கள்" என்று ஆரோனுக்கும் அவருடைய குமாரர்களுக்கும் சொல்லப்பட்டது. (குறிப்பு - ஆசரிப்புக்கூடார வாசலைவிட்டு நீங்கள் ஏழு நாள் அளவும் புறப்படவேண்டாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த ஏழு நாள் அதே இடத்தில் தரித்திருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. சொல்லர்த்தமாக நாம் பார்த்தால் அதில் அநேக காரியங்கள் நடைமுறை வாழ்க்கைக்காக செய்யவேண்டியதாக இருக்கும். பரிசுத்தவான்கள் ஏழு சபைகளின் காலக்கட்டத்தில் அவர்களுடைய தத்தம் செய்யப்பட்ட வாழ்க்கையில் எந்த அளவிற்கு ஆசரிப்புக்கூடாரத்தோடு ஐக்கியப்பட்டிருக்கிறார்கள் என்பதை அந்த ஏழு நாளும் ஆசாரியர்கள் அதன் வாசலில் தரித்திருப்பதை காட்டுகிறது.) இயேசு மற்றும் சபையின் பலி செலுத்தி முடிப்பதற்கு, சுவிசேஷ யுகம் முழுவதும் தேவைப்படும் என்பதை இது காட்டுகிறது.

இந்த காலத்தைக் குறித்த கூடுதலான விளக்கத்தை யாத் 29 அதிகாரம் நமக்கு கொடுக்கிறது - "இந்தப்பிரகாரம் நான் உனக்குக் கட்டளையிட்டபடி எல்லாவற்றையும் நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் செய்வாயாக, ஏழு நாளளவும் நீ அவர்களைப் பிரதிஷ்டைபண்ணி, பாவநிவிர்த்திக்காக ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு காளையைப் பாவநிவாரண பலியாகப் பலியிட்டு, பலிபீடத்துக்காகப் பிராயச்சித்தம் செய்தபின், அந்தப் பலிபீடத்தைச் சுத்திசெய்யவேண்டும், அதைப் பரிசுத்தப்படுத்தும்படி அதை அபிஷேகம்பண்ணக்கடவாய். ஏழுநாளளவும் பலிபீடத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, அதைப் பரிசுத்தமாக்கக்கடவாய், பலிபீடமானது மகா பரிசுத்தமாயிருக்கும், பலிபீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருக்கும்." (யாத் 29 35 -37)

மேலே சொல்லப்பட்ட செயல் முறைகள் அனைத்தும் ஏழு நாளளவும் அதாவது தினமும் செய்யவேண்டியதாக இருந்தது. இனி வருங்காலத்தில் செய்யும் வேலைகளுக்காக, இந்த சுவிசேஷ யுகத்தில் தொடர்ந்து தத்தம் செய்யப்பட்ட பணிகளை செய்வதின் முக்கியத்துவத்தின் பாடத்தை இங்கு நமக்கு அதிகமாக வலுப்படுத்தப்படுகிறது. இந்த யுகத்தில் இவர்களின் வளர்ச்சி, பலப்படுத்தல், சுத்திகரிப்பே முதன்மையான வேலையாக இருக்கிறது. இது முழுமையாக நிறைவடையும்போது, பாவத்திலும், மரணத்திலும் இருக்கும் மனுக்குலத்தை இயேசு மற்றும் சபையின் கரங்கள் மீட்க துவங்கும் போது, இரட்சிப்பின் அடுத்த நிலை ஆரம்பமாகும். அப்பொழுது இவர்கள் ஆசாரியர்களாக தகுதிபெற்று, தேவனுக்கு மகிமை உண்டாகும் படி தங்களுடைய பணியை வெற்றிகரமாக செய்து முடிக்க பயிற்சி பெற்றிருப்பார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல்

# நாம் தத்தம் செய்தலின் களிக்கூறுதலின் எடுத்துக்காட்டு



நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் - 1கொரிந்தியர் 11:1

Wade Austin

பவுலின் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கைக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக வைக்கப்பட்டிருக்கிறது. அவர் "சுவிசேஷத்தை" பற்றி எழுதிய கடிதங்களை நாம் அறிவுக்கூர்மையுடன் ஆராய்ந்து பார்க்கலாம். சிலஇடங்களில் "தேவனுடைய நற்செய்தி" என்றும் சிலஇடங்களில் "கிறிஸ்துவின் நற்செய்தி" என்றும் பெரும்பாலான இடங்களில் வெறுமையாக "சுவிசேஷம்" என்றும் குறிப்பிடுகிறார். (ரோம 1:1,15,16)

இந்த சுவிசேஷம் "பூமியில் உள்ள முழு குடும்பங்களையும்" ஆசீர்வதிப்பதற்கான தேவனுடைய திட்டத்தின் விபரங்கள் (ஆதி 28:14, கலா 3:8), இஸ்ரயேல் ஜனங்களின் இரட்சிப்பு (ரோம 10:1, 11:26) மற்றும் சபைக்குண்டான அழைப்பை பற்றிய விபரங்களை கொண்டுள்ளது.(ரோம1:7, 1கொரி 1:2) நம்முடைய இருதயங்களிலும், சிந்தைகளிலும் சுவிசேஷம் ஏற்படுத்தக்கூடிய நல்ல உணர்வுகளை தரும் கற்பனைகளையும், கட்டளைகளையும் பற்றியுள்ள பவுலின் கடிதங்களில், உள்ள பகுதிகளை மட்டும் நாம் பார்க்கலாம். குறிப்பாக, " நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்" என்பதை நம்முடைய வாழ்க்கையில் கடைபிடிக்க, நாம் நம்மையே ஊக்குவிக்கப்படுவதற்கு பவுலின் ஜீவியத்திலிருந்தும், அவருடைய வார்த்தைகளிலிருந்தும் நடைமுறை பாடங்களை கவனத்தோடு எண்ணிப்பார்ப்போம்.

தனக்காக இருக்கும் அறிவு பயனற்றது. அன்பின் வல்லமை அறிவை மேற்கொண்டுவிடும். "நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. (1கொரி 13:2) நாம் அனைவரும் நம்முடைய வாழ்க்கையில் கண்ணாடியைபோல தேவனுடைய மகிமையை பிரதிபலித்து, மகிமையின்மேல் மகிமையடைந்து தேவனுடைய சாயலை அடையவேண்டும் என்று பவுல் கூறுகிறார். (11கொரி 3:18) தேவன் அன்பாகவே இருக்கிறார். நாம் நம்முடைய முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும் அவரில் அன்பு கூர்ந்து, நம்மை நேசிப்பது போல பிறனையும் நேசிப்பதினால், அவரை பிரதிபலிக்கிறோம்.

தேவனுடைய கிருபையை பற்றி பவுல் தெளிவாக அறிந்திருந்தார். "அப்படியிருந்தும், நான் என் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன், தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமலும், எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும், அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்." (கலா 1:15-17)தேவன் அவரை தெரிந்துகொண்டார் என்பதை பவுல் விசுவாசித்தார் என்பதை இது காட்டுகிறது. மேலும் அவர் சுத்தமான கிருபையினால் மட்டுமே அழைக்கப்பட்டார் என்பதையும் உணர்ந்தார். இந்த விசுவாசத்தை பவுல் எழுதிய அநேக கடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறார். அதுமட்டும் அல்ல இது ஒவ்வொரு தனிநபருக்கும் கொடுக்கப்பட்ட பரம அழைப்பு என்பதையும் தெளிவாக விவரித்தார். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பு...." (பிலி 3:14)

பவுலின் கடிதங்கள் மனத்தாழ்மையையும், தேவனுடைய அளவற்ற இரக்கத்தினாலும், அன்பினாலும் ஏற்பட்ட பக்தி வைராக்கியத்தையும் நமக்கு அறிவிக்கிறது. அவர் மனமாற்றமடைந்த அந்த நொடியிலிருந்து தன்னுடைய ஜீவன் தேவனுக்கு சொந்தமாக்கினார். அவர் தேவனை சேவிக்க முடிவுசெய்து, தன்னுடைய ஜீவனை தேவனுக்கென்று உயிருள்ள பலியாக ஒப்புக்கொடுத்தார்.

பவுல், சகோதரர்களுக்கு எழுதின கடிதத்தில், தேவனுடைய கிருபையை வல்லமையாக நினைப்பூட்டினார். "எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பை பாருங்கள், மாம்சத்தன்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார் உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்.மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்...... அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். (1கொரி 1:26,29,31)

இந்த அழைப்பைக் கேட்டு உடன்படிக்கை செய்யும் யாவரும் மிக தாழ்மைப்படவேண்டும். ஏனெனில், மிக பெரிய அப்போஸ்தலனாகிய பவுல், இந்த அழைப்பிற்கு தன்னை அபாத்திரராக எண்ணினார்.தன்னுடைய பிதாவின்

சித்தத்திற்கு தன்னை பக்தி வைராக்கியோத்தோடு அர்ப்பணிக்க அவர் எந்த விதத்திலும் தடுமாறவில்லை. பவுலின் நிருபங்கள், போதனைகள், பயணங்கள் அனைத்தையும் நாம் பார்க்கும் போது, அவருடைய வாழ்க்கையை இவ்வண்ணமாக தத்தம் செய்வதற்கு அவரை தூண்டியது என்ன ? "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" (11கொரி 5:14) என்று எந்தவித தயக்கமின்றி பதில் அளிக்கிறார்.

பவுலின் ஜீவியத்திலும், அவருடைய எழுத்துக்களிலும், தேவன் நம்மேல் வைத்த அன்பையும், நாம் தேவன் மேல் வைத்திருக்கும் அன்பையுமே மைய பாடமாக கொண்டிருக்கிறார். தன்னுடைய குமாரனை நமக்கு பரிசாக கொடுத்து, தேவன் தனக்குள்ளிருந்த மிகசிறந்த அன்பை மெய்ப்பித்து காட்டினார். நம்முடைய ஆண்டவராம் இயேசு தன்னுடைய ஜீவனை சிலுவையில் கொடுத்து தன்னுக்குள் இருந்த மிகச்சிறந்த அன்பை மெய்ப்பித்து காட்டினார். நாம் பிதாவின்மேல் வைத்த அன்பை மிக சிறந்த முறையில் மெய்ப்பிக்கவேண்டுமானால் பவுலின் ஆலோசனைகளை பின்பற்றக்கூடியவர்களாக இருக்கவேண்டும். "நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை... இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்.. உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோம 12:1,2)

பவுல் தன்னுடைய பாவத்திலிருந்து பெற்ற விடுதலையானது, இயேசுவை நேசிக்கவும், தன்னுடைய ஜீவனை சுவிசேஷ பணிக்கு ஒப்புக்கொடுக்கவும் பலவந்தப்படுத்தியது. சுவிசேஷத்தின் மையக் கருத்தை (பாவத்திலிருந்து பெறும் விடுதலை) அறிந்துகொள்ளவேண்டியது அவசியம் என்று விரும்பினார். "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்." (1கொரி 2:2) ஏனெனில், பவுலை பொருத்தவரையில் தத்தம் செய்தல் என்பதற்கு - "உங்கள் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும் தேவனிடத்தில் அன்பு கூறுங்கள்" என்று அர்த்தம். தேவன் தன்னுடைய குமாரனை கொடுத்து, முந்தி நம்மிடத்தில அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூரவேண்டும். (1யோவா 4:19) ஒருவர் தேவனுடைய அன்பில் நிலைத்திருந்தால் மட்டுமே அவருடைய கரங்களில் பயன்படுத்தப்படும் கருவிகளாக இருக்கமுடியும். நம்மை மீட்டத்தினால் நாம் அவரிடத்தில் மனத்தாழ்மையாக இருப்போமானால், தேவனுடைய சொல்லிமுடியாத கிருபை நம்முடைய இருதயத்தை ஊடுருவி பாயும். ஒருவேளை தேவனுடைய அன்பு, நாம் அவரை நேசிக்கும் அளவிற்கு நம்மை தூண்டினால் - நாம் சுத்திகரிக்கப்பட்டு, நம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறோம் என்று அறிந்துகொள்ளலாம்.

"ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களூமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு, அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்." (11தீமோ 2:20,21) பவுலின் எழுத்துக்கள் மற்றும் அவர் சொன்ன எடுத்துக்காட்டுகளின் மூலம் நாம் எவ்வாறு தேவனுடைய வழிநடத்துதலுக்காக காத்திருக்கவேண்டும் என்றும் அவருக்குமுன் எவ்வாறு தாழ்மைப்படவேண்டும் என்றும் நம்முடைய சகோதரர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நாம் எவ்வாறு சேவை செய்யவேண்டும் என்றும் நாம் தேவனுடைய மகிமைக்காக எவ்வாறு வாழ்வது என்றும் கற்றுக்கொள்ளலாம்.

## தேவனைப் பற்றி கற்றறிதல்

பவுல் மனமாற்றம் அடைந்த பின், அவர் தேவனோடு தனிமையிலிருக்க விரும்பினார் -"..உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணாமல், எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும், அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும், தமஸ்கு ஊருக்குத் திரும்பிவந்தேன்." (கலா 1:16,17) அரபு தேசத்தில், அவர் தேவனோடு தனிமையில் சஞ்சரித்த நாட்களின் விளைவாக, அவர் தேவனுக்கு மட்டும் கீழ்படியவேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கவேண்டும். இந்த ஒரு மாதிரியை நம்முடைய வாழ்க்கையிலும் பின்பற்றி நாம் தேவனுக்கென்று உடன்படிக்கை செய்த காரியத்தில் நம்மை முழுமையாக ஒப்புக்கொடுக்கவேண்டும்.

பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தை தவிர வேறெந்த நிருபமும், தத்தம் செய்தலைப் பற்றி முழுமையாக வெளிப்படுத்துவதில்லை. அவர் ரோமாபுரியில் காவலிலிருந்தபோது இந்த நிருபத்தை எழுதினார். ரோமாபுரி சபையில் சிலர் அவரை நெருக்கினார்கள். ஆகவே அவர் - "சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள். சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள். இதனாலென்ன ? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார். அதனால் சந்தோஷப்படுகிறேன், இன்னும் சந்தோஷப்படுவேன். அது உங்கள் வேண்டுதலினாலும் இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்." (பிலி 1:15-19) என்றார்.

இருப்பினும், இந்த நிருபத்தில் பவுல் தன்னுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்தி, தத்தம் செய்யப்பட்ட ஒரு

வாழ்க்கையில் ஒருவர் எவ்வாறு சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதையும் நமக்கு மாதிரியாக வைத்திருக்கிறார். இயேசுவை பொருத்தவரைக்கும் -"அவர் தமக்கு முன் வைத்திருக்கும் சந்தோஷத்தின் பொருட்டு சிலுவையை சந்தோஷமாக சகித்தார்" என்று வாசிக்கிறோம். அதே மனநிலையை பவுலும் கொண்டிருந்தார். நாமும் இந்த மனநிலையை கொண்டிருக்கவேண்டும் - "கிறிஸ்து இயேசுவிலிருக்கும் சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலி 2:5) பிலிப்பியருக்கு எழுதின நிரூபத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம், களிக்கூறு போன்ற வார்த்தைகளை கிட்டத்தட்ட இருபது முறைகள் பயன்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டில் வேறு எந்த புத்தகத்திலும் இதை நாம் காணமுடியாது. பிலிப்பியருக்கு எழுதின நிரூபத்தின் சுருக்கத்தை எழுதிய வாரன் வெர்ஸ்பி, நம்முடைய வாழ்கையில் உள்ள சந்தோஷங்கள் - ஜனங்கள், கவலைகள், சுற்றுப்புறசூழ்நிலைகளால் - எவ்வாறு திருடப்படுகிறது என்று தெளிவாக விவரித்துள்ளார். இந்த திருடரிடமிருந்து நாம் எவ்வாறு நம்மை பாதுகாத்துக்கொள்ளவேண்டும என்று பவுலின் நிருபம் நமக்கு ஆலோசனை கூறுகிறது.

முதலாம் அதிகாரத்தில், நம்முடைய சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும் நாம் எப்படி மகிழ்ச்சியாக இருப்பது என்று பவுல் குறிப்பிடுகிறார். இரண்டாம் அதிகாரத்தில் ஜனங்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் நாம் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறார். மூன்றாம் அதிகாரத்தில் உடமைகள் நம்முடைய சந்தோஷத்தை எவ்வாறு திருடிச்செல்கிறது என்று விவரிக்கிறார். நான்காம் அதிகாரத்தில் நம்முடைய சந்தோஷத்தை இழந்துபோகும் படி கவலைகள் நம்மை மேற்கொள்ளக்கூடாது என்றும் குறிப்பிடுகிறார். இந்த காரியங்களை பற்றி தவறாக நோக்கங்கள், தேவனுடைய ஆசீர்வாதங்களினால் நாம் பெற்ற சந்தோஷங்களையும், அனைத்தையும் மேற்கொள்ளக்கூடிய அவருடைய ஆதரவையும் திருடிச்செல்ல முடியும்.

## ஒரே நோக்கமுடையவராக இருத்தல்

நாம் ஒரே சிந்தையுடையவராக இருந்தால், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் சந்தோஷமாக இருக்கலாம் என்று முதலில் பவுல் கூறுகிறார். நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய சூழ்நிலைகள் பெரும்பாலும் நம்முடைய கட்டுபாட்டை தாண்டிவிடுகிறது. அவைகள் நம்மை துக்கத்திற்குள்ளாக்குகிறதை தெரிந்து கொண்டிருக்கிறோமா அல்லது தேவன் நமக்களித்த ஆசீர்வதங்களை எண்ணி சந்தோஷமாக இருப்பதை நாம் தெரிந்துகொண்டிருக்கிறோமா ? சூழ்நிலைகள் நம்முடைய சந்தோஷங்களை திருடி செல்லாதபடி நாம் செய்வது ?

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலி 1:21) என்று பவுல் எழுதினார். அவர் மாம்சத்திலிருந்த வரைக்கும், பவுல் சுவிசேஷத்தை அறிவித்தார் - "கிறிஸ்து எனக்கு ஜீவன்". அவர் மரிக்கும் காலம் வந்தபோது, அவர் விசுவாசத்தை காத்துக்கொண்டு, இனி பெறப்போகும் ஜீவ கிரிடத்தை பற்றி அவர் சுட்டிக்காட்டினார் - (சாவு எனக்கு ஆதாயம்) தேவனுக்கு தத்தம் செய்ததில், அவர் ஒரே மனநிலையை கொண்டிருந்தார். பிற்காலத்தில் தன்னுடைய ஆண்டவரோடு பரலோகத்தில் இணைவதை தவிர, வேறு எந்த விதமான மாற்று கருத்துக்களையும் அவருடைய இருதயத்தில் அவர் சிந்திக்கவில்லை.

கிறிஸ்துவை பிரசங்கித்ததினால், பவுல் எல்லா சூழ்நிலைகளிலும், மகிழ்ச்சியடைந்தார். சிறையிருப்புகளும், கட்டுகளும் சுவிசேஷத்தை அதிகமாக பிரஸ்தாபிக்க வாய்ப்பளித்தது. இப்படிப்பட்ட பலன்களை அவர் அடைந்ததற்காக அவர் மகிழ்ச்சியடைந்தார். மற்றவர்களிடம் இரக்கத்தை எதிர்ப்பார்த்து அல்லது தன்னுடைய கோபத்தில் அவர் இக்காரியங்களை செய்யாதிருந்தால், நிச்சயமாக அவருடைய ஊழியங்கள் மங்கியிருக்கும். நாம் பெற்ற வெளிச்சத்தை எந்த சூழ்நிலையிலும் நாம் பிரகாசிப்போமா? இவைகள் அனைத்தும் தேவனால் அனுமதிக்கப்பட்டதென்றும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்றும் எண்ணுவோமா ? பவுல் எந்த விதத்திலும் தடுமாறாமல் தேவனை சேவித்தது போல நாமும் ஒரே சிந்தையுடையவராக இருக்கிறோமா ?

பிலிப்பியருக்கு எழுதின முதலாம் நிரூபத்தில், அவருடைய சூழ்நிலைகளில் மகிழ்ச்சியாக இருக்க அனுமதித்த மூன்று முக்கியமான நோக்கங்களை பற்றி பவுல் விவரிக்கிறார். முதல் பதினோரு வசனங்கள் சுவிசேஷத்தில் அவர் பெற்ற ஐக்கியத்தைப் (மூன்று வசனங்கள்)பற்றி சொல்லப்படுகிறது. தேவனுடைய திட்டத்தை அறிந்துகொள்வதினால் மட்டும் அல்ல, சுவிசேஷத்தின் நிமித்தம் நாம் பெற்ற சகோதரர்களின் ஐக்கியத்தில் கிடைக்கும் சந்தோஷம் நமக்கு எவ்வளவு ஆசீர்வாதங்களை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது.

சில நேரங்களில் நமக்குள் வரும் கருத்துவேறுபாடுகள் நம்மை சோதனைக்குள்ளாக்கிவிடும். ஆனால் கருத்து வேறுபாடுகளை தடைசெய்யாமல், அவைகளை சோதித்து அறிந்து அறிவில் தேர்ச்சி அடையவேண்டும் என்று ஒன்பது மற்றும் பத்தாம் வசனங்களில் கூறுகிறார். "மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி.." (பிலி 1:9,10)

"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோம 8:28) நாம் இந்த வசனத்தை விசுவாசித்தது போல நடந்துகொள்கிறோமா? நாம் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியாதபடி நம்முடைய சூழ்நிலைகள் நம்மை தடைசெய்கிறதா ? பவுல் சுவிசேஷத்தை அறிவிக்க

தன்னுடைய சூழ்நிலைகளை சாதகமாக்கிகொண்டார், அதே ஆவியை நமக்குள்ளும் ஊக்குவிக்கிறார்.

நாம் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருக்கும் வரைக்கு, மற்றவர்கள் நம்மைக் குறித்து பேசுவசதை பற்றி பயப்படவேண்டாம் என்று பிலிப்பியர் முதலாம் அதிகாரத்தில் உள்ள கடைசி வசனத்தில் கூறுகிறார். நாம் எதற்காகவும் பயப்படாமல், கிறிஸ்துவுக்குள் இருக்கும் சுயாதீனத்தை பயன்படுத்தவேண்டும் என்று பவுல் தன்னுடைய சுவிசேஷத்தில் வலியுருத்துகிறார். (27,28) இப்படிப்பட்ட சரியான வழியில் நம்முடைய விசுவாசத்திற்காக போராடவேண்டும். போராட்டம் என்ற கிரேக்க வார்த்தைக்கு மல்யுத்தம் என்று பொருள்படுகிறது. நாம் இந்த யுத்தத்தை தனியாக போராடுவதில்லை. நாம் துன்மார்க்கமான ஆவிக்குரியவைகைகளோடும், இந்த உலகத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும் போராடுகிறோம். (எபே 6 :12) நம்மோடு நம்முடைய சகோதரர்களும் போராடுவதை நினைக்கும்போது நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

நம்முடைய சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும், ஒரே சிந்தையுடையவர்களாக ஐக்கியப்பட்டு, சோர்வில்லாமல் சுவிசேஷத்தை பிரசித்தப்படுத்தி, விசுவாசத்தில் நிலையாக நின்றால் நிச்சயமாக நாம் சந்தோஷமாக இருக்கமுடியும் என்பதே இந்த அதிகாரத்தின் சுருக்கமாக இருக்கிறது.

## பொறுமையோடு பணிந்திருத்தல்

பொறுமையுள்ள சிந்தையோடிருந்தால், எப்படிப்பட்ட ஜனங்கள் மத்தியிலும் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று இரண்டாம் அதிகாரத்தில் பவுல் குறிப்பிடுகிறார். நம்மை சுற்றியுள்ள சூழ்நிலைகள் நம்முடைய கட்டுபாட்டை மீறுவதைபோல நம்மை சுற்றியுள்ள ஜனங்களும் நம்முடைய கட்டுபாட்டை மீறி நடப்போர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களுடைய நடத்தையும், எதிர்பார்ப்புகளும் நம்மை துக்கப்படுத்த விடக்கூடாது. மற்றவர்கள் சந்தோஷமாக இருப்பதற்கு நாம் ஜீவிக்கிறோமா? மற்றவர்களின் நடத்தை எப்படியாக இருந்தாலும் சரி நாம் சந்தோஷமாக இருக்கலாம்.

"ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மை யினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர் களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவா னாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது, அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலி 2:3-8)இயேசுவின் வார்த்தைகளை பவுல் எதிரொலித்தார் -"உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்." (மத் 20:27)

பொறுமையோடு பணிந்திருக்கும் மனநிலையை கொண்டவர்கள் தங்களுடைய இரட்சிப்பை எளிதில் சுதந்தரித்து கொள்ளலாம். "..அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்." (பிலி 2:12) "போபோஸ்" மற்றும் "டிரோமோஸ்" என்ற இரண்டு கிரேக்க வார்த்தைகளுக்கு "பயம்" மற்றும் "நடுக்கம்" என்று பொருள்படும். பவுல் இதே வார்த்தைகளை எபேசியர் 6-5-7ம் வசனங்களில் பயன்படுத்தியுள்ளார். "வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து, மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கும் ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து.." தன்னுடைய எஜமானனுக்கு பயந்து நடுங்கும் ஊழியக்காரர்கள் இருக்கலாம், ஆனால் நாமோ மனுஷனை பிரியப்படுத்துபவர்களாக அல்ல, தேவனை பிரியப்படுத்துபவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய ஊழியக்காரனாக இருக்கும் பட்சத்தில் ஜீவியத்திற்குரிய ஆதாரம் என்னவென்று அறிந்திருப்பதை போல, தேவன் தன்னுடைய நன்மையான சந்தோஷங்களை நிறைவேற்ற நமக்குள் கிரியை செய்கிறார் என்பதையும் நாம் உணரவேண்டும்.

தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நமக்குள் உண்டாக்குகிறவர் என்று பிலி 2:13ம் வசனம் குறிப்பிடுகிறது. ஆகவே ஜனங்கள் என்ன செய்தாலும், எப்படியிருந்தாலும் நாம் எதற்கும் அஞ்சக்கூடாது அல்லது நம்முடைய சந்தோஷம் அவர்களால் பறிபோய்விட அனுமதிக்கக்கூடாது. "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே (கெஹன்னா) அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்."(மத் 10:28) நிச்சயமாக நாம் தேவனுடைய வல்லமையை கண்டு நடுங்குகிறோம், ஆனால் அதே வல்லமை நமக்குள் அவருடைய சித்தத்தை செய்யும்போது நாம் மகிழ்கிறோம்.

மனத்தாழ்மையின் சாந்தமான ஆவியும், பொறுமையோடு பணிந்திருக்கும் குணலட்சணமும் பவுலின் முயற்சிகளை காட்டியது - " சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியை சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி,

வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது." (1கொரி 2:1-5)

சுருக்கமாகச் சொல்லபோனால், தேவனுடைய மிகசிறந்த வாக்குத்தத்தங்களையும், மனத்தாழ்மையுள்ள சிந்தையை அடிப்படையாக கொண்ட தேவ வல்லமையும் நமக்குள் இருந்தால், எந்தவிதமான ஜனங்கள் மத்தியிலும் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று பவுல் பிலிப்பியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் வழியாக நமக்கு கற்றுகொடுக்கிறார்.

## ஆவிக்குரிய சிந்தையோடு இருக்கக்கடவீர்கள்

பிலிப்பியர் மூன்றாம் அதிகாரத்தில் நீங்கள் ஆவிக்குரிய சிந்தனைகளை உடையவர்களாயிருந்தால், உங்கள் உடைமைகளுக்கு மத்தியிலும் நீங்கள் சந்தோஷமாக இருக்கலாம் என்று கற்றுகொடுகிறார். "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்.. பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்.. . " (மத் 6:19,20) எத்தனை பேர்கள் இந்த புத்திமதியை கவனிக்கிறார்கள் ? சிலர் மனதில் வடிவமைத்திருக்கும் கற்பனைகளை எதிர்ப்பார்த்து, அது கிடைக்காத பட்சத்தில் மிக வருத்தத்தோடும் துக்கத்தோடும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

19 மற்றும் 20ம் வசனங்கள் இந்த அதிகாரத்தின் திறவு கோலாக இருக்கிறது. "அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்."

"நமக்கு இன்னென்ன காரியங்கள் இருந்தால் இன்னும் சந்தோஷமாக இருந்திருக்கலாம்" என்று சில நேரங்களில் நாமும் சிந்திப்பதுண்டு. பணமும், பொருட்களும் நமக்கு உண்மையான சந்தோஷத்தை கொடுக்காது என்று நாம் நன்கு அறிந்திருக்கிறோம். இருப்பினும் நாம் சில பொருட்களை தேடுகிறோம், அது கிடைக்காத பட்சத்தில் வருந்துகிறோம். ஏன் ? ஏனெனில், "என்னுடைய இராஜ்யம் இந்த உலகத்திற்குரியது அல்ல" (யோவ 18: 36) என்ற இயேசுவின் சிந்தை நமக்குள் முழுமையாக இல்லை என்பதை காட்டுகிறது.

- கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் மற்றும் இனி வருங்காலத்தையும் குறித்து -

பவுல் தன்னையே ஒரு மாதிரியாக பயன்படுத்தினார். கடந்த காலத்தை பொருத்தவரையில் - "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப் படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன்." (பிலி 3:7-11) பவுல் தனக்குள்ளே "கிறிஸ்துவினுடைய விசுவாசத்தை" நங்கூரமாக பாய்ச்சியிருந்தார். கிறிஸ்துவை பற்றியும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தைப் பற்றியும், அவர் மகிமையில் முதலாவது உயிர்த்தெழுப்படுவதையும் தவிர வேறு எந்த காரியத்தையும் அவர் பொருள்படுத்தவில்லை, அதாவது மதிக்கவில்லை.

நிகழ்காலத்தை பொருத்தவரையில் - ஓட்டபந்தயத்தில ஓடுகிற யாவரும் ஒரே ஆவிக்குரிய சிந்தையோடு ஓடுவதற்கு ஊக்குவிக்கிறார். "சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை, ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து. முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம், எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ... சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்." (பிலி 3- :3,15, 17)

வருங்காலத்தை பொருத்தவரையில், பரலோகத்தில் நாம் கிறிஸ்துவோடு இருக்கும் போது நாம் பெறும் மகிமைக்கு நம்முடைய கவனத்தை திருப்புகிறார். "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத்

தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாகமறுரூபப்படுத்துவார்." (பிலி 3:20,21)

## கவலைக்கு இடமின்றி உறுதியாகயிருங்கள்

பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தின் கடைசி அதிகாரத்தில், கவலைகளை தோற்கடிக்கும் உறுதியான மனநிலையைப் பெறுவதற்கான வழியை போதிக்கிறது - "நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள், நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்.." (மத் 6:34) "மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தாராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்." (ரோம 8:38,39) என்று நாம் முழுமையாக நம்பினால் நம்முடைய சந்தோஷங்களை கவலைகள் திருடிசெல்ல வாய்ப்பிருக்காது.

அதேபோல, பிலிப்பியர் நான்காம் அதிகாரத்தில் -"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." (பிலி 4:6,7) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

இந்த அதிகாரத்தில் முதல் எட்டு வசனங்கள் கிறிஸ்துவின் சிந்தையை உண்மையாக சித்தரிக்கிறது. கிறிஸ்துவின் நோக்கத்தையும், அதனால் அவருக்குள் ஏற்பட்டிருந்த சமாதானத்தையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. அவர் தேவனோடு கொண்டிருந்த நம்பிக்கையான உறவே, அவருடைய நோக்கத்திற்கு அஸ்திபாரம் இட்டது. "மேலும் அவருடைய சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாம் முன்குறிக்கப்பட்டிருக்கிறோம் (எபே 1:11) என்று நாம் விசுவாசித்தால் தேவனுடைய பாதுகாப்பிற்காக நாம் கவலைப்படவேண்டாம். நம்முடைய ஊழியத்திற்காக எடுக்கும் முயற்சிகளுக்கு வரும் தடைகளை எண்ணி நாம் சோர்ந்துபோகாமல், தேவனுடைய நோக்கம் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையோடு மகிழ்ச்சியாயிருப்போம்.

உறுதியான மனநிலையை பெற நேர்மையான நோக்குடன் ஜெபிக்கவேண்டும், நேர்மையான நோக்குடன் சிந்திக்கவேண்டும் மற்றும் நேர்மையான நோக்குடன் வாழவேண்டும். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்." (பிலி 4:6) நம்முடைய சோதனைகளுக்காக ஜெபிக்கும் படி பவுல் எங்கும் குறிப்பிடவில்லை. தேவன் நமக்காக அளித்த கிருபைகளுக்காக நம்முடைய ஜெபங்களில் - தெய்வீக ஆராதனை, துதி, போற்றுதல் மற்றும் எல்லாவற்றிற்காகவும் நன்றியறிதல் -காணப்படவேண்டும். தானியேல் தன்னுடைய இக்கட்டான காலத்தில் தேவனை நோக்கி ஜெபித்தது போல நாமும், ஜெபத்தின் வழியாக, குழப்பங்களுக்கு மத்தியில் கவலைகளை மேற்கொண்டு, சமாதானமான மனநிலையை பெறலாம். "அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி 4:7)

நேர்மையான சிந்தனைகளைப் பற்றியும் பவுல் எழுதியுள்ளார் - "கடைசியாக, சகோதரரே, உண்மை... ஒழுக்கம்... நீதி... கற்பு... அன்பு.... நற்கீர்த்தி.... புண்ணியம். .... புகழ் போன்ற காரியங்கள் எவைகளோ, அவைகளையே சிந்தித்துகொண்டிருங்கள்" (பிலி 4:8) இந்த வசனத்தை பற்றி அநேக பிரசங்கங்கள், புத்தகங்களும் எழுதப்பட்டிருக்கிறது. ஒருவேளை நீங்கள் தவறான சிந்தையில் இருப்பீர்களானால், தயவு செய்து இந்த வசனத்தின் ஆழமான பொருளை அறிந்துகொள்ளுங்கள்.

அடுத்து நேர்மையான வாழ்க்கை - காரியத்தை கற்றுகொள்வது ஒரு காரியம், அதை பெற்றுகொள்வது மற்றொரு காரியமாக இருக்கிறது. தேவனுடைய வார்த்தைகளிலிருந்து அவர் கொடுக்கும் ஆலோசனைகளை நம்முடைய உள்ளான மனுஷன் பெற்றுகொண்டு அதன் கோட்பாடுகளை தழுவிகொள்ளவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள், அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார். " (பிலி 4:9) ஒரு மனுஷனை பற்றிய நல்ல செய்தி நமக்கு மகிழ்ச்சியை கொடுக்கலாம். ஆனால், மற்றவர்களின் நல்ல கிரியைகளை நாம் காணும்போது, நாம் ஊக்குவிக்கப்படலாம். நாமும் அவரை போல நம்முடைய ஜீவனை தத்தம் செய்து ஒரே நோக்கத்திற்காக நம்மை நாம் ஒப்புக்கொடுக்கவேண்டும். அதேபோல், நம்மால் முடிந்த வரைக்கும் தேவனை மகிமைபடுத்தும்படி நம்முடைய மேன்மையான வாழ்க்கையின் மூலம் மற்றவர்களையும் ஊக்குவிக்கவேண்டும்.

நேர்மையான ஜெபம், நேர்மையான சிந்தை, நேர்மையான ஜீவியம், நமக்கு எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை கொடுக்கும். இவைகளின் மூலம் நாம் கிறிஸ்துவின் சாயலை தரித்துக் கொள்ளும்படி கவலையற்ற மனநிலையை பெற்றுகொண்டு, உறுதியும் பாதுகாப்பையும் பெறலாம். நாம் நேர்மையான முறையில் ஜெபிக்காமலும், சிந்திக்காமலும், ஜீவிக்காமலும் இருப்போமேயானால், நம்முடைய சுற்றுபுறசூழ்நிலையும், நம்மை சுற்றியுள்ள ஜனங்களும், நம்முடைய உடமைகளும், இந்த உலகத்தின் கவலைகளும்

தேவனோடு நாம் கொண்ட உறவினால் அவருக்குள் நாம் பெற்ற சமாதானத்தையும், சந்தோஷத்தையும் திருடிசென்றுவிடும். தேவனோடு பேசுவதைக்கூட இது காலப்போக்கில் தடுத்துவிடும்.

நாம் நேர்மையானவைகளை சிந்திக்காமல் இருப்பதினால், மற்றவர் நம்மை பற்றி என்ன நினைப்பார்கள் என்று எரிச்சலடையலாம். நம்முடைய எளிமையான நடத்தை குறித்து என்ன நினைபார்கள் என்று நாம் மிகவும் மனவேதனைப்படலாம் அல்லது அவர்களுக்கு நம்மை பற்றி அறியாதிருந்தால், அவர்கள் நம்முடைய குறைகளைப் பற்றி அறிந்துகொள்வார்களோ என்றும் நாம் அஞ்சலாம்.

பவுலைபோல நாம் தினமும் தேவனோடு பேசலாம். அவருடைய நன்மைகளையும், சிருஷ்டிப்பின் சௌந்தரியங்களையும் தியானித்து, தேவனுடைய சமூகத்தை விட்டு வந்த மோசேவின் முகம் பிரகாசித்தது போல நம்முடைய வாழ்க்கையில் அவருடைய மகிமையை பிரதிபலிப்போம்.

ஆனால் மோசேயின் முகத்தில் உள்ள பிரகாசம் மங்கியது. இஸ்ரயேலர்கள் அதை காணாதபடிக்கு அவர் முகத்தை மூக்காடிட்டு கொண்டார். நாமோ, நித்தியமான உடன்படிக்கையையும், நித்தியமான மகிமைக்கான வாக்குறுதியையும் பெற்றிருக்கிறோம். ஆகவே நாம் நம்முடைய முகங்களை மூடிக்கொள்ளவேண்டாம். ஆனால் தினமும் தேவனுடைய மகிமையில் களிக்கூர்ந்து, அதை நம்முடைய வாழ்விலும் பிரதிபலிப்போமாக. தேவனுடைய கிருபையாலே ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். (11கொரி 3:18)

தத்தம் செய்யப்பட்ட நம்மனைவரின் வாழ்க்கைக்கு, பவுலின் ஜீவியம், வார்த்தைகள், கிரியைகள் ஒரு சிறந்த எடுத்துகாட்டாக விளங்குகிறது. உலகத்தின் கவலைகள், சூழ்நிலைகள், ஜனங்கள், உடைமைகள், கவலைகள் - நம்முடைய பரலோக தந்தையிடம் நாம் கொண்டுள்ள உறவை திருடிச் சென்றிருந்தால், தயவு செய்து நாம் அப்போஸ்தலனாகிய பவுலின் நிருபங்களை திருப்புவோம். விசேஷமாக பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தை வாசிப்போம். "அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை மகிழ்ச்சியாய் ஜீவிப்பது எப்படி" என்பதற்கு பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தை சிறந்த கையேடாக பயன்படுத்தலாம்.

ஒரே சிந்தையுடைவர், தாழ்மையோடு பணிந்திருக்கும் மனநிலையுடையவர், ஒரே ஆவிக்குரிய சிந்தையுடையவர் மற்றும் ஒரே உறுதியைகொண்டுள்ளவர், இயேசுவை மாதிரியாக கொண்டு, மரணம் வரைக்கும் கீழ்படிதலோடிருக்க முடியும் என்பதை இந்த நிரூபம் நமக்கு கூறுகிறது. விசுவாசத்தை காத்துகொள்ள கடுமையாக முயற்சிப்போம், நம்முடைய கீழ்படிதல் சந்தோஷம் என்னும் கனிகளை மிகுதியாக கொடுக்கும். நாம் அவரோடுக்கூட மரித்தால் அவரோடுக்கூட வாழுவோம். அவரோடுக்கூட பாடுகளை அனுபவித்தால், அவரோடுக்கூட ஆளுகையும் செய்து "பூமியில் உள்ள குடும்பங்களையும் ஆசீர்வதிப்போம்".

## மேலும் இறுதியாக....

"அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து பறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்." (மாற் 1:35)

இந்த சம்பவம் மாற்கு சுவிசேஷத்தின் துவக்கத்தில் காணப்பட்டாலும், இயேசுவின் சுவிசேஷபணி நடந்த இரண்டாம் வருடம் சம்பவித்தது. (மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா இயேசுவின் ஞானஸ்நானம் மற்றும் அவருடைய சோதனைகளிலிருந்து கடந்து சென்றார்கள். யோவான் மட்டுமே அதற்கு இடையில் உள்ள காரியங்களை குறிப்பிடுகிறார்.)

ஒரு வருடத்திற்கு பிறகு இயேசுவின் மற்றொரு உருக்கமான ஜெபத்தை லூக்கா பதிவு செய்திருக்கிறார். "அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி, ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்." (லூக்கா 6:12) இந்த இரண்டு நிகழ்வுகளிலும், தன்னுடைய ஊழியத்தின் நிருவாகத்தை குறித்த ஒரு உறுதியான முடிவு அவருடைய சிந்தையில் காணப்படுகிறது. முதலாவது முறை அவர் ஜெபித்தபின் -"அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம்பண்ண வேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள், இதற்காகவே புறப்பட்டுவந்தேன்.." (மாற் 1:38) என்று இயேசு கூறுனார். அடுத்து அவரடைய சீஷர்களில் பன்னிரெண்டு போர்களை விசேஷித்த அப்போஸ்தலர்களாக தேர்வு செய்தார்.

நம்முடைய தத்தம் செய்யப்பட்ட வாழ்க்கையில் தேவனுடைய வழிநடத்துதலை தேடி அதை நடைமுறைப்படுத்துவது மிக அவசியம். சில நேரங்களில் தேவனுடைய சித்தத்தை செய்வதை காட்டிலும் அதை உறுதி செய்வது மிக கடினமாகிவிடுகிறது. சில நேரங்களில் அதை புரிந்துகொண்டபின் நடைமுறை படுத்துவது மிக கடினமாகவும் இருக்கிறது. நம்முடைய ஆண்டவர் நமக்காக விட்டு சென்ற மாதிரியை பின்பற்றுவோம். மேலும், நாம் உண்மையோடு பரலோக ஞானத்தை தேடி அவைகளின் உதவியோடு இயேசுவை பின்பற்றுவோம்.

இயேசு கற்பித்த பாடங்கள்

# இறுதி நாள்



".. என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது, நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள்.." -மத் 26 :38

David Rice

நம்முடைய பாவங்களுக்காக கல்வாரி சிலுவையில் தூக்கப்படும் நம்முடைய ஆண்டவரின் வாழ்க்கையின் கடைசி நாளாகிய நீசான் பதினாலாம் தேதிக்கு வந்திருக்கிறோம். மேற்கில் சூரியன் மறைந்துகொண்டிருக்கிறது. இன்னும் வெளிச்சமாகவே இருந்தாலும், அந்த நாள் முடிந்துகொண்டிருக்கிறது - கிட்டத்தட்ட 2000 வருடங்களுக்கு முன் - வியாழக்கிழமை வெள்ளிகிழமையாக மாற்றிகொண்டிருந்தது. இரவின் இருளை அகற்ற விளக்குகள் பொருத்தப்பட்டது. தேவ குமாரனுடைய எதிரிகளும் அந்த இருளில் கணக்குகளை முடித்துகொண்டிருந்தார்கள்.

ஆறு நாளுக்கு முன் இயேசுவும் அவருடைய சீஷர்களும், பெத்தானியாவில் ஒரு நண்பருடைய வீட்டில் விருந்துக்கு சென்றபோது மரியாள் விலையுயர்ந்த நலதம் என்னும் தைலத்தை இயேசுவின் சிரசின் மேல் ஊற்றினாள், மீதியிருந்ததை அவருடைய பாதத்தில் ஊற்றினாள், பாதங்களில் உள்ள தைலத்தை தன்னுடைய மயிரினால் துடைத்தாள். அவளுடைய சகோதரனாகிய லாசரு மரணத்திலிருந்து எழுந்த காரியம் அவள் நினைவில் பசுமையாக இருந்தது. அதற்கு முன்னும் அவள் இயேசுவை நேசித்தாள். அவருடைய பாதங்களில் அமர்ந்து அவருடைய போதனைகளை கேட்டுக்கொண்டிருந்தாள்.

அந்த தைலத்தின் நறுமணம் அந்த வீடு முழுவதையும் நிரப்பியது. இந்த சம்பவத்திற்கு ஓராயிர வருடங்களுக்கு முன் சாலோமோன் - "ராஜா தமது பந்தியிலிருக்குந்தனையும் என்னுடைய நளததைலம் தன் வாசனையை வீசும்." (உன்ன 1:12)என்று எழுதினார். அதை இயேசுவும் நினைவுக்கூர்ந்தார். அதற்குபின் அவருடைய மரணத்தை அடையாளப்படுத்தும்படி வெள்ளைபோளத்தினாலும், வாசனை பிசினினாலும் சுற்றப்படுவார் என்றும் அதினால் இந்த முழு உலகத்திற்கும் ஆரோக்கியம் வரும் என்றும் இயேசு அறிந்திருந்தார். ஆனால் இங்கு அன்பின் நறுமணம் அவருடைய இருதயத்தை நிரப்பியது.

மறுநாள் காலையில் - திங்கள் கிழமை, நீசான் மாதம் பத்தாம் தேதி - அவர் சுமந்து வந்த கிருபை மற்றும் சத்தியத்தின் புதிய போதனைகளை அடையாளப்படுத்தும் அந்த கழுதைக் குட்டியின் மேல் இயேசு எருசலேமை சுற்றி பவனிவந்தார். அங்கிருந்த ஜனக்கூட்டங்கள் ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். ஆனால் இது அவருடைய மரணத்தை முன்னறிவித்தது. பஸ்கா ஆடு, நீசான் பத்தாம் தேதி அன்று தேர்வு செய்யப்பட்டது. அதேபோல் அந்த பத்தாம் தேதி அன்று முழு இஸ்ரயேலுக்கும் எருசலேமில் இயேசு அறிமுகப்படுத்தப்பட்டார்.

செவ்வாய் கிழமை, இயேசு அத்திமரத்தை சபித்தார், ஆலயத்தை சுத்திகரித்தார், அந்த நாள் முழுவதும் அவர் ஜனங்களுக்கு போதித்தார்.

புதன் கிழமை அன்று, ஆலய தலைவர்கள் அவரை பிடிக்கும்படி வகைதேடி ஆள் அனுப்பினார்கள். ஆனாலும் அது பிரயோஜனமற்றதாக இருந்தது. "சேவகர் பிரதியுத்தரமாக - அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்" (யோவான் 7:46)ஆனாலும் அந்த நாள் முழுவதிலும் இயேசு தேவனுடைய வேலைகளை செய்துகொண்டிருந்தார். அந்த நாள் முழுவதிலும், ஜனங்களுக்கு போதித்து, பகிரங்கமாக இஸ்ரயேலரின் தலைவர்களை கண்டித்து, இனி வரும் நியாயத்தீர்ப்பை குறித்து எச்சரித்தார். மாலையில் பெத்தானியாவுக்கு சென்று, அங்கிருந்த ஒலிவ மலையில் சற்று நேரம் இளைப்பாறி, மத்தேயு 24மற்றும் 25ம் அதிகாரங்களில் உள்ள உவமைகளையும், தீர்க்கதரிசனங்களையும் சீஷர்களுக்கு சொன்னார்.

அடுத்து வியாழக்கிழமை மாலை நேரம். அந்த நாள் முழுவதும் தன்னுடைய சீஷர்களோடு பெத்தானியாவில் இருந்தார். சூரியன் மறைந்தபின் கடைசி கட்ட சம்பவங்கள் வெளிப்பட துவங்கியது.

இயேசு இரண்டு சீஷர்களை அனுப்பி, அவர்கள் இராபோஜனம் புசிப்பதற்கு, ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தும்படி சொன்னார். அவர்கள் இருவரும் நகரத்திற்குள் பிரவேசிக்கும்போது ஒரு மனுஷன் தண்ணீர் பானையுடன் காணப்படுவார் - "அவனுக்கு பின் சென்று அவன் நுழையும் வீட்டிற்குள் பிரவேசித்து அந்த வீட்டெஜமானை நோக்கி - நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச் சொன்னார் என்று சொல்லுங்கள் என்றார்." அவன் கம்பளமுதலானவைகள் விரித்திருக்கிற மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறையை உங்களுக்குக் காண்பிப்பான் என்றார். ஒரு வேளை அவர்கள் எருசலேமுக்குள் நுழைந்தபின் அப்படிப்பட்ட ஒரு மனுஷனை அவர் காணாதிருந்தார்களானால் அல்லது தண்ணீர் குடம் சுமந்த அநேகரை அவர் கண்டிருந்தார்களானால் அல்லது இவர்கள் தாமதித்து சென்றதினால் அவரை காணாமல் விட்டிருந்தால் அல்லது அந்த மனிதன் அவர்களை தவறான வீட்டிற்கு அழைத்துசென்றிருந்தால் என்ன நடந்திருக்கும். நிச்சயமாக இவைகள் எதுவும் நடக்கவாய்ப்பில்லை. அதேபோல, இந்த சுவிசேஷ யுகம் முழுவதிலும் எல்லா பரிசுத்தவான்களும் குறித்த காலத்தில் இயேசுவால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரர்களை (தண்ணீர் சுமந்துகொண்டு போகும்) கண்டு அவருக்கு பின் சென்று தங்களுடைய எஜமான் அவர்களுக்காக வைத்திருக்கும் சகல ஆசீர்வாதங்களையும் கண்டடைகிறார்கள்.

அந்த ஸ்தலத்தை சீஷர்கள் ஆயத்தப்படுத்தினார்கள். "வேளை வந்தது", அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள்." (லூ 22:14) பஸ்காவின் போது உட்கொள்ளவேண்டிய போஜனத்தை சீஷர்கள்

ஆயத்தப்படுத்தியிருப்பார்கள் என்று சில சகோதரர்கள் கருதுகிறார்கள். சிலர் கடைசி ராபோஜனத்திற்கு முன் அவர்கள் புசித்த உணவு என்கிறார்கள். ஆனால் பொதுவாக யூதர்கள் அனைவரும் பலியிடவேண்டிய ஆட்டை அந்த நாளை தொடர்ந்து வரும் மத்தியானத்தில் அடிக்கும்படி ஆலயத்திற்கு கொண்டுபோவார்கள். அந்த நேரத்தில் இயேசு தாமே பாடுகளை முடித்து, சிலுவையில் ஜீவனை விட்டார். இரண்டு காரியங்களிலும், நிழலான பஸ்கா பல நூற்றாண்டுகளுக்கு முன் அறிவிக்கப்பட்டது போல நிஜமான பஸ்கா ஆடாகிய இயேசு நீசான் 14ம் தேதி அன்று மரித்தார்.

## மாலை நேர உபசரிப்பு

அந்த மாலையில் இயேசுதாமே விருந்தோம்பு பவராக இருந்தார். மாலை நேரம் சாயங்கால நேர நிகழ்வுகள் துவங்கும் முன் வரும் விருந்தாளிகளுக்கு ஒரு கோப்பை பானம் கொடுப்பது பாரம்பரிய பழக்கமாக இருந்தது. இதை "ஆசீர்வாதத்தின் பாத்திரம்" என்று அழைக்கப்பட்டது. உணவுக்கு முன் இயேசு இந்த ஆசீர்வாதத்தின் பாத்திரத்தை கொடுத்தார். ஆனால் அவரோ அதை குடிக்காமல், "அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி - நீங்கள் இதைவாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்" (லூக் 22:17) என்றார். அதைக் குறித்து அவர் விவரிக்கையில் - தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவ தில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"ஆசீர்வாதத்தின் பாத்திரம்" என்பதற்கு நாம் பெற்ற இந்த பாத்திரத்திற்காக தேவனை புகழ்வதாகும். ஆகவே நாம் தேவனை நன்றியறிதலோடு ஸ்தோத்தரிப்போம். 1கொரி 10 :16ம் வசனத்தில் "ஆசீர்வாதத்தின் பாத்திரத்தை" பற்றி குறிப்பிடுகிறார். மேலும் லூக்கா சொல்லுவதை போல இயேசு அதற்குபின் இரண்டு அடையாளங்களை அறிமுகப்படுத்தினதற்கு முன்னதாகவும், உணவு புசித்துக்கொண்டிருக்கும்போதும் இதை கொடுத்தார். ஆனால் எந்த வேதபகுதியிலும், திராட்சைரசம் - நாம் நன்றியோடு பெற்றுகொள்ளும், நம்முடைய ஆண்டவராம் இயேசு சிந்திய ஈடுபலியின் இரத்தத்தை குறிக்கும். இந்த இரத்தம் இல்லாமல் நமக்குள் ஜீவன் இராது.

## கடைசி ராபோஜனம்

இராபோஜனம் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கையில், சில காரியங்கள் மேற்கொள்ளப்பட்டதை இயேசு கவனித்தார் - இயேசுவால் அல்ல, அவருடைய சீஷர்களால் கண்டறியப்பட்டது. மாலை நேரத்தில் இளைப்பாற விருந்தாளிகளின் கால்களை கழுவுவது யூதர்களுக்குள் வழக்கமாக இருந்தது. அவர்கள் அனைவரும் பெத்தானிவிலிருந்து மூன்று மைல்கள் நடந்து வந்தார்கள். ஆனால் எந்த ஒரு சீஷனும் மற்றவர்களை சேவிக்க இந்த ஒரு வாய்ப்பை பயன்படுத்திகொள்ளவில்லை.

இயேசு பயன்படுத்திகொண்டார். யோவான் மட்டுமே அவருடைய சுவிசேஷத்தில் இந்த சம்பவத்தை பதிவு செய்திருக்கிறார். அவர் ஒரு சீலையை எடுத்து, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், துடைக்கவும் துவங்கினார். நிச்சயமாக சீஷர்கள் ஏதோ ஒரு பாடத்தை கற்றிருக்கவேண்டும். ஆனால் அவர் பேதுருவிடம் வரும் போது, பேதுரு மிகவும் பதற்றமாக இயேசு தன்னை சேவிப்பதை மறுத்தார். பேதுரு ஆண்டவர் மேல் அதிகமாக பாசம் வைத்திருந்தார். அவர் நல்ல ஆவியை கொண்டிருந்தார். ஆனால் இயேசு அதைவிட அதிகமாக பேதுருவை நேசித்தார். மிக ஆழமான காரியங்களை மனதில் வைத்திருந்தார். இயேசு அவர்களுக்காக மரிக்க போகிறார். இனி ஒருவரும் அவர்களுக்கு சேவகம் செய்ய இருக்கமாட்டார்கள் என்று எண்ணி இதை செய்தார். அவரால் மட்டுமே சுத்திகரிக்கமுடியும் என்பதை அடையாளமாக காட்டினார். நம்மையும் அவர் மட்டுமே சுத்திகரிக்கமுடியும்.

"... நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார்" (யோவான் 13:8) இந்த வார்த்தைகள் நம் அனைவருக்குமே பொருந்தும். இயற்கையாகவே நாம் அனைவரும் பாவிகள். நாம் அவரால் சுத்திகரிக்கப்படாவிட்டால் நிச்சயமாக நாம் அவரோடு பங்கு வகிக்க முடியாது. நாம் தேவனுடைய புத்திரர்களாக இருப்பதற்கு, தேவனுடைய குமாரனே நம்மை சுத்திகரிப்பது நாம் பெற்ற ஆசீர்வாதம் அல்லவா ? இயேசு நமக்காக இதை செய்தால், நாமும் இதே ஆவியை பெற்றவர்களாக மற்றவர்களை சேவிக்க விரும்பவேண்டும். ஒவ்வொருவரும் நம்முடைய ஆண்டவரிடமிருந்து இந்த பாடத்தை கற்று கொள்ளவேண்டும்.

இதற்குபின் தெளிவாக இயேசு தன்னுடைய மரணத்திற்கான இரண்டு அடையாளங்களை அறிமுகப்படுத்தினார். அப்பம் மற்றும் பாத்திரம். அதற்குபின் இயேசு - " இதோ, என்னைக் காட்டிக்கொடுக கிறவனுடைய கை என்னுடனேகூடப் பந்தியிலிருக்கிறது" (லூக் 22:21) என்றார். யோவானின் சுவிசேஷம் அதற்குபின் யூதாஸின் காரியத்தை பற்றி சொல்லுகிறது. இது ஒரு அறிவாற்றலுக்குரிய காரியமாக அவருக்கு இருக்கவில்லை. ஆனாலும் அவரை கலங்கசெய்தது. "இயேசு... ஆவியிலே கலங்கி - உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறனென்று சாட்சியாகச் சொன்னார்." (யோவ13:21)

இந்த செய்தி அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. ஒவ்வொருவரும் தங்களை சுற்றி பார்த்துகொண்டார்கள். யாரை குறித்து அவர் பேசுகிறார் என்று அறியாமல், "நானோ" என்று கேட்டார்கள். (மாற் 14:19) பேதுரு சற்று தூரத்திலிருந்தினால், இயேசுவுக்கு அருகில் இருந்த யோவானை பார்த்து, இயேசு யாரை குறித்து சொன்னார் என்று செய்கை காட்டினார். அதற்கு இயேசு -"நான் இந்தத் துணிக்கையைத் தொய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தொய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்." (யோவான் 13:26) இதை யோவான் மட்டுமே கேட்டிருக்க முடியும். ஏனெனில் யோவான் மட்டுமே இந்த காரியத்தை பதிவு செய்திருக்கிறார். "நீ செய்கிறதை சீக்கிரமாய் செய்" என்றார். அவன் பண்டிகைக்குத்

தேவையானவைகளைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள். (யோவா13:29)

யூதாஸ் போய்விட்டார். அதற்கு பின் தன்னுடைய பிரிவை சீஷர்கள் தாங்கி கொள்வதற்காக அவர்களை ஆயத்தப்படுத்த துவங்கினார். இருக்கும் கொஞ்ச நேரத்திற்குள் அவர் என்ன சொல்லியிருக்க முடியும் ?

(1) அவர்களை விட்டு அவர் போகபோகிறார் என்பதை அறிவித்தார்.

(2) அவர்களுக்கு ஒரு புதிய கட்டளையை கொடுத்தார் - "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்." (யோவா 13:35) உண்மையான கிறிஸ்தவர்கள் "அனைவரையும் நேசிக்கும்" அடையாளத்தை கொண்டிருப்பார்கள்.

(3) பேதுரு இயேசு சொன்னவைகளை மறுத்து, அவர் எங்கு சென்றாலும் பின் செல்வதற்கும், தேவைப்பட்டால் அவருடைய ஜீவனையே கொடுப்பதற்கும் முழு உற்சாகத்துடன் தன்னை ஒப்புகொடுத்தார். சில வாரங்களுக்கு முன் இதே காரியங்களை பேதுரு கூறினார். அப்பொழுது மற்ற அனைத்து சீஷர்களும் அதை ஆமோதித்தார்கள். ஆகவே இயேசுவோடு எருசலேமுக்கு போனால் இயேசுவிற்கு ஆபத்திருப்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். பயம் அவர்களை கவ்வியது, இயேசு பேதுருவை எச்சரித்தார், சேவல் கூவும் முன்னே அவர் மூன்று முறைகள் இயேசுவை மறுதலிப்பார் என்று சொன்னார்.

(4) நம்முடைய கலாச்சாரத்தில் இந்த பழக்கம் இல்லாதிருந்தும், ஒரு மணவாளன் தன்னுடைய மணவாட்டியிடம் பேசுவதை போல் இயேசு தன்னுடைய சீஷர்களிடம் பேசினார். ஒரு யூத பெண்ணின் திருமண ஒப்பந்ததிற்கு முன் அவளுக்கு ஒரு பாத்திரத்தில் திராட்சைரசம் வழங்கப்படும். அவள் அந்த திருமணத்திற்கு சம்மதித்தால் அந்த பாத்திரத்தை வாங்கி குடிப்பாள். அதேபோல் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு பாத்திரத்தை கொடுத்தார் அவர்கள் அனைவரும் அதை வாங்கி குடித்தார்கள். அதற்கு பின் அவர் "நான் போய் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவேன்" என்றார். பொதுவாக யூதர்கள் திருமணத்திற்காக பரிசம் போட்டு விட்டால், மணவாளன் உடனடியாக வீட்டிற்கு சென்று ஒரு தனி அறையை உண்டுபன்னுவார்கள். அதை ஆயத்தப்படுத்திய பின் அவர்களுடைய மணவாட்டியை வந்து அழைத்துசெல்வார்கள். "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்ததுக்கொள்ளுவேன்." (யோவ 14:3) என்றார். இப்பொழுது கிறிஸ்து வந்துவிட்டார். மரித்த பரிசுத்தவான்கள் சேர்க்கப்பட்டுவிட்டார்கள். தேவனுடைய கிருபையால், நாம் விசுவாசத்தை காத்துக்கொண்டால், நம்முடைய மரணத்தில் நாமும் அவர்களோடு ஒரு பங்கை பெறுவோம்.

(5) தோமா, பிலிப்பு மற்றும் யூதா சில கேள்விகளோடு அவரை பின்தொடர்ந்தார்கள். அவர்கள் பிற்பாடு புரிந்துகொள்ளும்படி அவர்களுக்கு இயேசு பதில் அளித்தார். வருங்காலத்தில் இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருப்பதாக சொன்னார். அவர் சென்ற பின் பரிசுத்த ஆவியினால் முடிவு வரைக்கும் வழிநடத்தப்படுவார்கள் என்றார். இதற்கு இடையில், ஒரு மனுஷன் இயேசுவின் வார்த்தைகளை தனக்குள் காத்துகொண்டால், தேவனும், இயேசுவும் அவனிடம் தங்குவார்கள் என்றார். நமக்குள் அவர்கள் தங்கியிருக்கிறார்களா ?

## கெத்சமனேவை நோக்கி பயணித்தல்

இவைகளை சொல்லி முடித்த பின் "எழுந்திருங்கள், நாம் புறப்படவேண்டும்" என்று சொல்லி யோவான் 14ம் அதிகாரத்தில் துவங்கின அவருடைய உபதேசத்தை முடித்தார். கிழக்கு பக்கமாக தன்னுடைய சீஷர்களோடு அவர் நடந்து செல்கையில், நாம் களை நருக்கப்பட்டு, கிறிஸ்துவோடுக்கூட இணைக்கப்பட்டு, ஆவிக்குரிய கனிகளை மிகுதியாக தரவேண்டும் என்று உபதேசித்தார். அவ்வழியில், ஆலயத்தின் கதவுகளில் செதுக்கப்பட்டிருந்த திராட்சை செடியையும், கிளைகளையும் இந்த உபதேசத்தை சொல்லும்படி தூண்டியிருக்கவேண்டும்.

அவர் அன்பின் பிரமாணத்தை மறுபடியும் நினைவுகூர்ந்து, அனைவரும் அவருடைய சிநேகிதர்கள் என்ற நம்பிக்கை ஊட்டினார். நேரம் கடந்து செல்ல செல்ல இன்னும் சில விலையேறப்பெற்ற காரியங்களை சொன்னார் - நல்ல கனிகளை கொடுக்கும் படியாக இவர்களை இயேசு தெரிந்துகொண்டு, வழிநடத்தினார் என்று அவர்களுக்கு சொன்னார்.

தேவனுடைய எதிரிகளால் பகைக்கப்பட்டு, வெறுக்கப்படுவார்கள். ஆனாலும் அவர்களுக்கு பதில் சொல்லக்கூடாது என்று போதித்தார். தேற்றவாளனாகிய பரிசுத்த ஆவி உங்களை தேற்றுவார் என்று மீண்டுமாக சொன்னார்.

அதற்குபின் அவர் முன் சொல்லிய காரியங்களை திரும்பவும் சொன்னார். "நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார்." (யோவ 16:16) அக்காலத்தில் அவர்கள் ஆழ்ந்த வேதனையில் இருப்பார்கள் என்பதை அங்கு குறிப்பிட்டார். ஆனாலும், அவர் மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுந்தவுடன் மகிழ்ச்சியோடு, புதுப்பிக்கப்பட்ட ஆவியோடும், பக்திவைராக்கியத்தோடும், விசுவாசத்தோடும் அவரை காண்பார்கள் என்றார். "அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான். "(யோவா16:22) என்றார். அவர் இதை சொல்லும் போது ஏதோ மறைபொருளாக தோன்றினாலும், வெகு சீக்கிரத்தில் அதை புரிந்திருப்பார்கள்.

அதற்குபின் அவர் வெளிப்படையாக பேசினார். அவர் தான் பிதாவினிடத்திலிருந்து வந்தார் என்பதையும், மீண்டும் இந்த உலகத்தை விட்டு பிதாவினிடத்தில் திரும்புவதையும் பற்றி சொன்னார். ஆனால், ஒரு சோதனை வருகிறது, ஒரு குறுகிய காலத்திற்கு நீங்கள் சிதறுண்டு, அவன்வன் தன்தன் இடத்துக்குப் போய்விடுவீர்கள் என்றார்.

அதற்குபின் சீஷர்களை பலப்படுத்தவும், ஊக்குவிக்கவும், அவர்களின் காதுகள் கேட்க அவர் பரலோக பிதாவை நோக்கி ஜெபித்தார்.(யோவா 17)

இந்த நேரத்திற்குள் அவர்கள் எருசலேமுக்கு கிழக்கேயுள்ள கிதரோன் என்னும் ஆற்றண்டைக்கு வந்து சேர்ந்தார்கள். சற்று தூரத்தில் ஒலிவ மலையில் கெத்சமனே தோட்டம் இருந்தது. பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை அழைத்து கொண்டு அந்த தோட்டத்திற்கு இயேசு சென்றார். இதுவரைக்கும் அனைத்தும் தேவனுடைய சித்தத்தின்படி நடந்துகொண்டிருக்கிறதா என்று மூன்று முறை பிதாவினிடம் ஜெபித்தார். உணர்ச்சிமிக்க ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டார். அவர் சுமந்து வந்த இறைபணியானது, நம்முடைய கற்பனைக்கு எட்டாத அழுத்ததை இயேசுவுக்கு தந்தது. ஆனால் தூதர்கள் வந்து அவரை தேற்றினார்கள். அவருடைய இருதயம் சமாதானப்படுத்தப்பட்டது. யாக்கோபு மற்றும் பேதுரு உறங்கினாலும்,, அவருடைய உணர்ச்சிமிக்க அந்த ஜெபத்தை மறைவிலிருந்த கேட்ட யோவான் நமக்காக பதிவுசெய்திருக்கவேண்டும். (மாற் 14:51, 52)

## சுற்றுப்புற சூழ்நிலை

நம்முடைய ஆண்டவர் ஜெபத்தில் கடுமையாக முயற்சிக்கும் வரை, பிதாவாகிய தேவன் எந்த இடையூறுகளையும் அனுமதிக்கவில்லை. அதற்கு பின் பிதா குறித்த காலம் வந்தது. யூதாஸ் இயேசுவை முத்தமிட்டு காட்டிகொடுப்பதற்கு ஒரு கூட்டத்தோடு வந்தான். இயேசுவை பிடிக்கவந்தோரிடம் அவரே தன்னை அறிமுகப்படுத்திகொண்டார். அவர்கள் அனைவரும் பின்னிட்டு விழுந்தார்கள். அதற்கு பின் அவர் அவர்களை விட்டு நடந்து சென்றிருக்கலாம். ஆனால் அவர் பிடிபடவேண்டிய காலமாக இருந்ததினால், அவர் அங்கு தரித்து நின்றார். அதற்குபின் மல்கூசினுடைய காதுகளை சொஸ்தமாக்கி, மற்ற அனைத்து சீஷர்களையும் அந்த போர் சேவர்களின் கைகளுக்கு விடுவித்தார்.

இருள் சூழ்ந்த அந்த நேரத்தில், அவர் தனிமையில் தன்னுடைய பிதாவோடிருந்தார்.

இயேசு அன்னாவிடம் கொண்டுசெல்லப்பட்டார். அங்கு அவர் கட்டப்பட்டு,அந்த வருடம் பிரதான ஆசாரியராக இருந்த காய்பாவினிடத்தில் அனுப்பப்பட்டார். பேதுருவும், யோவானும் அவருக்கு பின்சென்றார்கள். காய்பாவின் விட்டிற்குள் நுழைய யோவான் அனுமதிகேட்டுகொண்டார். இந்த காலகட்டத்தில் பேதுரு ஆபத்தில் அகப்பட்டு, இயேசுவை மூன்று முறை மறுதலித்தார். மூன்றாவது முறை அவர் மறுதலித்தபோது சேவல் கூவியது. சேவல் கூவும் போது இயேசு பேதுருவை திரும்பி பார்த்தார். பேதுரு வெளிபோய் மனங்கசந்து அழுதார் என்று லூக்கா தன்னுடைய சுவிசேஷத்தில் குறிப்பிடுகிறார்.

இதற்கு இடையில், காய்பாவின் தலைமையில் விசாரனைகள் நடந்தது. அவர்கள் பல பொய்யான சாட்சிகளை தேடியும், அவைகள் ஒவ்வாமல் போனது. ஆனால் கடைசியில் இயேசு ஆலயத்திற்கு எதிராக சொன்ன ஒரு எச்சரிப்பை அவர்கள் தங்களுக்கு சாதகமான குற்றமாக எடுத்துக்கொண்டார்கள். காய்பா கனத்திற்குரிய மனிதனாக இருந்தபடியால், ஜீவனுள்ள தேவன்பேரில் ஆணையிட்டுக் கேட்கிறேன் என்று அவன் கேட்கும் வரையில், அங்கு இயேசு எந்தவிதமான பதிலையும் சொல்லவில்லை. இறுதியாக - "நீர் சொன்னபடிதான், அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்." (மத் 26:64)

அவர்களுக்கு தேவைப்பட்டது இந்த வார்த்தைகள் அல்ல, ஆனால் இவருடைய மறு உத்தரவு அவர்கள் எதிர்பார்த்ததை நெருங்கி வந்தது. உடனே பிரதான ஆசாரியன் பேரச்சம் கொண்டவனாக, தன்னுடைய வஸ்திரங்களை கிழித்துகொண்டு, அவருக்கு தீர்ப்பளிக்கும்படி அலறினான், அங்கு கூடியிருந்த ஆலோசனை சங்கத்தார் அவன் விரும்பிய தீர்ப்பை அறிவித்தார்கள். பொழுது விடிந்த பின் இவரை பிலாத்துவினிடத்தில் கொண்டு செல்ல வேண்டியிருந்தால், அதற்கு இடைப்பட்ட நேரத்தில், அங்கிருந்த போர்ச்சேவகர்கள் இயேசுவை கேலி செய்யவும், அவர் மேல் துப்பவும், அவர் முகத்தை மூடிவிட்டு, அவரை அறைந்தபின் அடித்தவன் யார் என்று கூறசொன்னார்கள். அவர்கள் அனைவரும் சோர்ந்துபோகும் வரைக்கும் பொழுதுபோக்கான இந்த விளையாட்டை தொடர்ந்து விளையாடினார்கள்.

## அதிகாலை

விடிந்தவுடன் ஆசாரியர்களும், மூப்பர்களும் அவர்களின் தீர்ப்பை மீண்டும் உறுதி செய்துவிட்டு, இயேசுவை பிலாத்துவிடம் கொண்டுவந்தார்கள். இயேசு பிலாத்துவிடம் குறைவாக பேசினார் ஆனால் ஆசாரியர்களும், மூப்பர்களும் சொன்ன குற்றச்சாட்டை பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை. பிலாத்து இயேசுவை கண்டு அதிசயப்பட்டான். அவர் குற்றமில்லாதவர் என்பதையும் அவன் நன்கு உணர்ந்தான். பிலாத்தின் மனைவி- "நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம். .." (மத் 27:19) என்று பிலாத்துவை எச்சரித்தாள். பிலாத்து சட்டப்பூர்வமாக-".. இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை.." (லூ 23:4) என்று சொன்னான். ஆனால் அவர் மேல் குற்றம் சாட்டினவர்கள், அதிகதிகமாக கூக்குரலிட்டு - "இவன் கலிலேயா நாடுதொடங்கி இவ்விடம்வரைக்கும் யூதேயாதேசமெங்கும் உபதேசம்பண்ணி, ஜனங்களைக் கலகப்படுத்துகிறான் என்று வைராக்கியத்தோடே..." சொன்னார்கள்.

கலிலேயா ? இவன் கலிலேயனா ? கலிலேயாவை ஆட்சிபுரிந்த ஏரோது அந்நேரத்தில் எருசலேமுக்கு வந்திருந்தான். இதை அறிந்த பிலாத்து இயேசுவை ஏரோதிடம் அனுப்பினான். ஏரோது வெகு நாட்களுகாக இயேசுவை பற்றி கேள்விப்பட்டதினால், அவரை காண மிகவும் ஆவலாயிருந்தான். ஆனால் இயேசு ஒரு வார்த்தையும் அவனிடத்தில் பேசவில்லை. ஆகவே அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்திற்கு அனுப்பினான்.



இயேசு இரண்டாவது முறையாக பிலாத்துவுக்கு முன் நிறுத்தப்பட்டார். அவன் இயேசுவை சாட்டையினால் கொடூரமாக அடித்து (ஒரு மிருகத்தனமான செயல் ) விடுதலை செய்யலாம் என்று முடிவுசெய்தான். இயேசு வாரினால் அடிக்கப்பட்டார், முள்ளுகளினால் ஒரு முடியை பின்னி அவர் சிரசின் மேல் வைத்து, "நீர் யூதரின் ராஜாவோ" என்று பழித்துரைத்து, தொடர்ந்து அடித்துகொண்டேயிருந்தார்கள். அடிக்கப்பட்ட இயேசுவை பிலாத்து ஜனங்கள் முன் நிறுத்தி, அவர்களின் இரக்கத்தை பெற விரும்பினான். ஆனால் அவர்கள் அனைவரும் - சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். இவன் தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும் என்றார்கள்." (யோவான் 19:6,7)

தேவனுடைய குமாரனா ? இதைக் கேட்ட பிலாத்து மிகவும் பயந்தான். அவன் மீண்டுமாக இயேசுவினிடத்திற்கு போய் -"நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான்." (யோவ 19:9) இயேசு மாறுதரம் ஒன்றும் சொல்லவில்லை. தப்புவிக்கவும், மரணத்திற்குள்ளாகவும் எனக்கு அதிகாரம் உண்டு என பிலாத்து இயேசுவை நோக்கி கூறும்போது - " பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது..." (யோவ 19:11) என்றார். மௌனமாக அவர் தேவனோடிக்கிறார் என்பதை புரியவைத்தார்.


இப்பொழுது ஆறாம் மணி வேளையாக இருந்தது. (யோவா 19:14) பிலாத்து இயேசுவை விடுவிக்க நினைத்தான். ஆனால் அங்கு கூடியிருந்தவர்கள் - "நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல, தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டு...." அவனை பயமுறுத்தினார்கள். உடனடியாக அவன் அவர்களுக்கு செவிசாய்த்தான். அவன் கைகளை கழுவினான். ஆனால் அவன் செய்த குற்றத்ததை அவனால் கழுவமுடியவில்லை. சில வருடங்களுக்குபின் அவன் தன்கையாலே மரித்துபோனான். (Eusebius, *The History of the Church,* 2.7.1)

## கொல்கொதா

,மண்டை ஓட்டின் இடமாகிய கொல்கொதாவிற்கு இயேசுவை அழைத்து சென்றார்கள். தூக்கமில்லாமல், கொடூரமாக அடிக்கப்பட்டதினால் தளர்ச்சியடைந்து, அநேக வார்த்தைகளை கேட்டு ஆழமான மன அழுத்தங்களோடு தன்னுடைய சிலுவையை அவர் அறையப்படுகிற இடம் மட்டும் சுமக்கவேண்டியதாக இருந்தது. (யோவ 19:17) வழியில் சீரேனே ஊரானாகிய சீமோனை, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள். (மத் 27:32) எல்லாவற்றையும் நீடிய பொறுமையுடன் பொருத்துக்கொண்டபின் அவருடைய மரணத்திற்கு முன் இரண்டு கள்வர்கள் மத்தியில் சிலுவையில் அறையப்பட்டார்.

கொல்கொதாவில் இருப்பு ஆணிகள் அவருடைய ஒவ்வொரு கரங்களையும், பாதங்களையும், அந்த சிலுவையில் உறுதியாய் பதியும் வரை, இருப்பு ஆணிகள் சுத்தியலினால் அடிமேல் அடியாக அடித்து பாய்ச்சப்பட்டது. ஆறு மணிநேரம் அவமானப்பட்டு அந்த சிலுவையில் தொங்கினார். ஆனாலும் அவர் இறுதிவரையில், நிறைவேற்றவேண்டிய பணியைக் குறித்து மிகவும் வாஞ்சையாயிருந்தார்.

* அவருடைய வஸ்திரங்களை சீட்டு போட்டு பங்கிட்டு கொண்டார்கள்.



* நல்ல கள்ளனிடம் வாக்குறுதியளித்தார்.

*யோவனிடம் தன்னுடைய தாயை ஒப்படைத்தார்.

*சங்கீதம் 22ம் அதிகாரத்தில் உள்ளவைகளை கோரினார்.


*தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாக கசப்பான காடியை குடித்தார்.

*"எல்லாம் முடிந்தது" என்றார்.

*அதற்குபின் அவருடைய் ஆவியை பிதாவினிடத்தில் ஒப்புவித்தார்.

மூன்றாம் மணி வேளை பகலில் வானம் இருண்டது. இயேசு இரண்டு கள்வர்களுக்கு மத்தியில் மரணம் அடைந்தார். ஐசுவரியவானான ஒரு மனுஷனின் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். அவர் மரித்தபோது பூமி அதிர்ந்தது, ஆலயத்தில் உள்ள திரைசீலை மேல் துவங்கி கீழ் வரைக்கும் கிழிந்தது. கல்லறைகள் பிளந்தது, சரீரங்கள் காணப்பட்டது. போர்ச் சேவகர்கள் மிகவும் பயந்தார்கள். அங்கிருந்த நூற்றுக்கு அதிபதி - "உண்மையில் இவர் தேவனுடைய குமாரன்" (மத் 27 :54) என்று சாட்சிகொடுத்தான்.

வெள்ளி கிழமை, நீசான் மாதம் 14ம் தேதி முடிவடைந்தது. ஓய்வு நாள் துவங்கியது. இயேசு கல்லறையில் வைக்கப்பட்டார். அவருடைய வேதனைகளும், வேலைகளும் முடிவடைந்தது. இஸ்ரயேலர்களின் வீட்டில் ஓய்வு நாளை துவக்குவதற்கு இரண்டு விளக்கை கொழுத்தி வைப்பார்கள். ஒன்றை



ஜாகோர் (நினைவுக்கூறுங்கள்) என்றும் மற்றொன்றை ஷாமோர் (அனுசரியுங்கள்) என்றும் அழைப்பார்கள். ஆகவே நாம் இப்பொழுது நினைவுக்கூறலாம். நாம் இப்பொழுது அனுசிக்கலாம்.

"அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார். அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும், ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார். என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள், ஆனாலும், அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார். அவர் கொடுமை செய்யவில்லை அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை. கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார், அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார், என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார், அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துக்கொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன், பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார். (ஏசா 53:7-12)

மூன்றாம் நாளில் சகல சிருஷ்டிகளுக்கும் இராஜாவாக எழுப்பப்பட்டார்.

## என்னை நினைவுகூறுங்கள்

நாம் கிறிஸ்துவின் பலியை நினைவுகூறும் போது, இவைகளை நாம் நினைவுகூறவேண்டும். இந்த சம்பவங்கள் நடைபெறுவதற்கு மூன்றரை ஆண்டுகள் முன் "புதிதும் ஜீவனுமான பாதையை" (எபி 10:20) திறந்து வைப்பார் என்பதை நமக்கு மாதிரியை காட்டுவதற்காக தினந்தோறும் - போதனைகள், சுகமளித்தல், குணப்படுத்தல் இன்னும் அநேக காரியங்கள் நடத்தப்பட்டது. இவையனைத்தும், முப்பது வருடங்களாக நீதியான தெய்வீக வாழ்க்கை வாழ்ந்து பொறுமையுடன் தன்னுடைய பணிகளை தொடர்ந்து செய்ய ஆயத்தப்பட்டபின் நடந்தது. நம்முடைய ஆண்டவர் நமக்காக இவ்வளவு காரியங்களை செய்திருக்கிறார். ஆகவே நாம் நமக்குள்ள கொஞ்சத்தை அவருக்கென்று ஒப்புக்கொடுப்போமா ?